424

சுதேச மித்திரன்

தொ- 31 எண்-52

29.1.61

JL
m211, N30
N61.31.52

158414




இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு. L.17-X29 TM



Vol XXXI] [No 52
சார்வரி - தை 16, ஜன. 29 '61

மறம் மடிந்து, அறம் ஓங்குக! 3
வந்ததும் வாராததும் 5
காற்று வாக்கிலே —அரட்டை 8
நாட்கமும் நாட்டியமும் —சஞ்சாரி 11
ரோசம் பிறந்துவிட்டால் —'வனகி' 13
இருளில் ஒரு தாரகை —ஆர்வி 25
யானை தன் தலையில் —இந்து 33
காதல் கண்களிலே இல்லை —தமிழ்வாணன் 37
மிட்டாய்ப் பாப்பா —'கல்வி' 45
தாயத்து —முன்ஷி 51
இப்படியும் ஒருவர் 59
நினைத்தால் நெஞ்சம் துள்ளுகிறது! —சந்தியா 61
பூபதி எங்கே? —பாலன் 63
தாயும் மகனும் —ஜயலக்ஷ்மி 65
அத்தையின் சாபம் —ராஜம் நாராயணன் 73
உதவாதவன் —'பரணி' 83

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளி வரும் கதைகளில் பெயர்கள், சம்ப வங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

15841

சென்னையம்பதியிலே...



சிரிப்பையும் சிந்தனையையும் ஒருங்கே
தூண்டும் வகையில் சுகி சுப்ரமணியம்
எழுதும் கட்டுரைத் தொடர் ஆரம்பமாகிறது.

★

'காலம் செய்யும் கோலம்'
என்ற தலைப்பில் நகைச்சுவை நடிகர்
சந்திரபாபுவும் எழுதுகிறார்.



# மறம் மடிந்து, அறம் ஓங்குக!

எந்த மதத்திற்கும் நாளாவட்டத்தில் ஆள் கூட்டம் பெருகி விடும். ஆனால் அதில் சேருவோரில் எவ்வளவு பேர் அந்த மத ஸ்தாபகர்களின் கருத்தைப் புரிந்துகொண்டவர்கள், அதைவிட அக் கருத்தைத் தங்கள் நடைமுறையில் அனுசரிப்போர் இன்னும் எவ்வளவு சொற்பம் என்பதை ஆராயப் புகுவோருக்கு மனவேதனை தான் மிஞ்சும். பதிமூன்கு ஆண்டுகளுக்குமுன் நாட்டு நலத்துக்காக உயிரை அர்ப்பணித்த நம் தேச பிதா கண்ட அறவழிக்கும் இப்போது அத்தகைய ஆள் கூட்டந்தான் சேர்ந்திருக்கிறது.

## சத்தியமும், நாணயமும் எங்கே ?


இன்னும் காந்தி நாமத்தைப் பாடுவோருக்கு நம் நாட்டில் குறைவில்லை. அவர் வகுத்த பாதையிலேயே தாங்கள் நடப்பதாக அல்லது மக்களை இட்டுச் செல்வதாக முழக்குவோரும் பலர். ஆனால் காந்தி மகான் தம் வாழ்நாள் வலியுறுத்திவந்த சத்தியம் இப்போது எங்கே ஓடி ஒளிந்துகொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. பொதுவாழ்வில் இன்று சத்தியத்தை, நாணயத்தைக் கடைப்பிடிப்போர் எவ்வளவு பேர்? வர்த்தக–தொழில் துறைகளைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. மக்கள் உண்ணும் உணவில் வேண்டுமென்றே கல்லைக் கலந்து அளக்கும் அளவுக்கு வியாபாரத்தில் நாணயம் செழித்திருக்கிறது! ஏதோ ஒரு சில துறைகளைத் தவிர மற்றபடி எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும், எப்படியாவது கொள்ளை லாபம் அடிக்க என்ன வழி என்பதிலேயே நாட்டம். வியாபாரிகள் லைசென்ஸ் வாங்குவதுமுதல் ஒவ்வொரு கட்டத்திலும் அதிகாரிகளின் குறுக்கீட்டைக் காட்டி சமாதானம் கூறலாம். ஸோஷலிஸம் என்ற பெயரில்தேசப் பொருளாதாரத்தின்மீது அதிகாரவர்க்கத்தின் பிடிப்பு இறுகிக்கொண்டிருக்கிறது. அவ்வளவுக்கவ்வளவு விதவிதமான ஊழல்கள் செழித்து வருகின்றன. தனி நபர் உரிமைகளை மிகப் புனிதமாக மதித்து வந்தார் மகாத்மா. ஆனால் இன்று அவைகளுக்கு வெடி வைப்பதில் சிறிதும் கூச்சம் காணவில்லை.

## நேர்மையான மனச்சாட்சி

சத்தியமான அல்லது நாணயமான நடைமுறைக்கு அடிப்படை ஒரு நேர்மையான மனச்சாட்சி. சர்க்காரின் சட்டங்களோ, அதிகாரிகளின் மிரட்டலோ அதை வளர்த்துவிடாது. திடமான மத நம்பிக்கை யொன்றே மனச்சாட்சியை நேரான முறையில் வளர்க்கக் கூடியது. எனவேதான் மகாத்மாஜி வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதி

யும் மதத்தோடு பின்னியதுதான் என்ற உண்மையை அறிவுறுத்தி வந்தார். ஆனால் அவரது சீடர்கள் பலருக்கு அந்தத் தொடர்பில் உள்ள பொருள் விளங்கவில்லை. மனிதன் தூய வழியில் செல்லத் தடை போடும் மனச்சாட்சி மங்கிய நிலையில் சுயநலப் பேய் கட்டமுத்துக்கொண்டுவிட்டதில் என்ன ஆச்சரியம்!

பொது வாழ்வில் புகுந்த பலரின் நோக்கமெல்லாம் எப்படியாவது தங்கள் சுயநலத்தை வளர்த்துக்கொள்வதுதான். காங்கிரஸிலும் அத்தகைய சுயநலமிகள் புகுந்துவிட்டனர். இன்று பல ராஜ்யங்களில் அக்கட்சிக்குள் பூசல் நடக்கிறது. அவ்வளவும் பதவி வேட்டையையே நோக்கமாகக் கொண்டது. ராஜ்யங்களிடையும் சச்சரவுகள் மலிந்து வருகின்றன. மொழிவாரி அடிப்படையில் அவற்றின் எல்லைகள் வகுக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாட்டின் பல பகுதிகளிலும் பிரதேசப் பித்தும், மொழி வெறியும் தலைதூக்கி வருவதைப் பார்க்கிறோம். நமது சுதந்திரம் நீடிப்பது நாட்டின் ஐக்கியத்தைப் பொறுத்ததென்பது மிக எளிய, வெட்ட வெளிச்சமான உண்மை. ஒற்றுமையாக நின்று தன்னலமற்ற தூய வாழ்வு நடத்துவதே நமக்கு காந்திஜி வகுத்துத் தந்த வழி. அந்த நினைவு இந்த காந்தி தினத்தில் நம் நெஞ்சில் பதிய ஆண்டவன் அருளட்டும்.



சென்னை ஐலண்டு மைதானத்தில் நடக்கும் பொருட்காட்சியில் ஹிந்துஸ்தான் லீவரின் ஸ்டாலுக்கு முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ் விஜயம் செய்து பார்வையாளர் புத்தகத்தில் கையெழுத்திட்டார்; தங்கள் தயாரிப்புகள் அடங்கிய பரிசுப் பெட்டியொன்றை அவருக்கு அளித்தார், ஹிந்துஸ்தான் லீவரின் டைரக்டரான ஸ்ரீ சண்டி.

## வந்ததும்

மாநிலத்தில் ஹிந்தி நுழைக்கப்படுவதைத் தாம் எக்காலமும் எதிர்க்கப் போவதாக இங்கு நடைபெற்ற புலவர்கள் மாநாட்டில் ஒரு பாவாணர் கூறினார்.

—கோவை செய்தி.

பாவாணர், தம்முடைய எதிர்ப்பை, ஹிந்தி மொழிக்குச் சரம கவி பாடுவதன்மூலம் அல்லது அறம் வைத்துப் பாடுவதன்மூலம் தெரிவிப்பார் என்று நம்பப்படுகிறது.

ஃ ஃ ஃ

பஞ்சாப் மாகாணத்தில் பிச்சைக்காரர்கள் இல்லை.

—ஒரு செய்தித் தலைப்பு.

பிச்சைக்காரர்கள் இல்லையாவது! ‘அம்மா தாயே’ என்று பிச்சை எடுக்காமல், ‘அதட்டி உருட்டி’, ‘அடித்துப் பிடித்து’ப் பிச்சை எடுத்தாலும் அது பிச்சை தானே!

ஃ ஃ ஃ

‘ஈ. வே. ரா.வின் உருவப் படத்தை ஸ்ரீ குன்றக்குடி அடிகளாரைக்கொண்டு திறந்து வைப்பதென்று சேலம் நகர மன்றம் தீர்மானித்துள்ளது.

—ஒரு செய்தி.

நாஸ்திக ஆஸ்திக வேறுபாடு இருந்த போதிலும் தாடியில் உள்ள ஒற்றுமையைக் கருதி அடிகளார் இதற்கு மனமொப்பலாம்!

ஃ ஃ ஃ

ஆமைக்கறி உண்டு மூன்று பேர் மரணம்.

—ஒரு செய்தித் தலைப்பு.

மரணம் திடீரென்று ஏற்படாமல் கொஞ்சம் கொஞ்சமாக, மெதுவாக அவர்களை அணுகி வதைத்திருக்குமே! பாவம்!

ஃ ஃ ஃ

ரயில்வே இலாகா அதிகமாகக் கோரியுள்ள 25 கோடி ரூபாய் இந்த மூன்றாவது திட்ட காலத்துக்குள் ஒதுக்கப்பட்டால், தென்னாட்டில் சில புதிய லயன்கள் போடப்படும்.

—எம். பக்தவத்சலம்.

இருக்கிற பணத்தைக்கொண்டு ஒரு தண்டவாளத்தை முதலில் போட்டுவிடுங்கள்! மேற்கொண்டு பணம் வந்ததும் இரண்டாவது தண்டவாளத்தைப் போடலாம் என்று யோசனை கூறுகிறோம்.

ஃ ஃ ஃ

தன்னுடைய காரை நிறுத்திய காவலாளியைப் பார்த்து, ‘நான் யார் தெரியுமா?’ என்று கேட்க, அவன் ‘தெரியாது’ என்று சொன்னவுடன், குழப்பமடைந்த காவலாளியிடம், ‘நான்தான் ஜவாஹர்லால் நேரு’ என்று நேருஜி சொல்லும்படி ஏற்பட்டது.

—ஸ்ரீநகர் செய்தி.

இந்தச் சம்பவத்தால் நேருஜியே அதிகக் குழப்பமடைந்திருக்க வேண்டுமென ஊகிக்கிறோம்.

ஃ ஃ ஃ

பசியிலிருந்து விடுதலை இல்லாத போது, கிடைக்கும் மற்றைய விடுதலைகள் அற்பமானவை.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்.

பசியிலிருந்து விடுதலை கிடைக்காத போது, இந்த ஜீவாத்மாவுக்கு உலக பந்தங்களிலிருந்து விடுதலை கிடைத்துப் பரமாத்மாவோடு ஒன்றும் ஒரு வாய்ப்பு கிடைக்கிறதே அதைப்போய் ‘அற்பமான விடுதலை’ என்று தத்துவப் பேராசிரியர் ராதாகிருஷ்ணன் கூறுவாரா?

ஃ ஃ ஃ

அகில இந்திய வர்த்தகப் பொருட்காட்சியில் சென்னை நகரசபை கலந்து கொள்ளவில்லை.


—செய்தி.

கலந்துகொண்டு, குண்டும் குழியும் நிறைந்த சென்னை நகரத்துத் தெருக்களை விஸ்தாரமாகப் படம் போட்டு காட்டியிருக்கலாமே!

## வராததும்

காந்திஜி இன்று இருந்தால்............



# காற்று வாக்கிலே...

## உண்மையும், பொய்யும்

நேருஜி நல்லவர். மாந்தருள் மாணிக்கம் என்று மகாத்மாவால் போற்றப் பட்டவர். நவ இந்திய சிருஷ்டியில் நாட்டம் கொண்டவர். மகத்தான கனவுகள் காண்பவர். கனவுகள் பலிக்கவில்லையென்றால் மூடி மறைப்பதில்லை; குற்றங் குறைகள் இருந்தால் ஓடி ஒளிவதில்லை. இதுவே அவர் பெருமை.

சோஷலிஸ சமுதாயம் என்னும் லட்சியத்தைக் காங்கிரசுக்கு வகுத்துக் கொடுத்தார். அந்த லட்சியத்திற்காக அன்றாடம் பேசி வருகிறார். அல்லும் பகலும் சிந்தித்து வருகிறார். திட்டம் போடுகிறார். சட்டம் செய்கிறார். ஆயினும் லட்சியம் எந்த அளவு ஈடேறியுள்ளது? பண்டிதர் பூசி மெழுகவில்லை. 'நாம் இன்னும் சோஷலிஸத்தின் அருகேகூடப் போகவில்லை. உண்மையில் பார்க்கப் போனால் மிகப் பெரிய முதலாளித்வ நாடுகளில் கூட நம்மைவிட அதிக சோஷலிசம் உள்ளது' என்றார். நாம் அவரை முற்றிலும் நம்புகிறோம்.

உண்மையை ஒளிவு மறைவின்றிக் கூறிவிட்டால் ஒரு தகராறும் கிடையாது. மூடி மறைக்கும் போது தான் சந்தேகங்கள் வலுக்கின்றன. கேரளத்தில் கூட்டு மந்திரி சபையில் பிளவு இல்லை என்று அடிக்கடி வற்புறுத்தப்படுகிறது. 'இல்லை, இல்லை' என்று அதிகமாக வற்புறுத்துவதால் 'உண்டு உண்டு' என்ற எண்ணமே மேலிடுகிறது. ஒரு பொய்யை பன்முறை திருப்பிச் சொன்னால் அது உண்மையென நம்பப் படும் என்பது யுத்த காலத் தந்திரமாக இருக்கலாம். ஆனால், அது இப்போது பலிக்காது. மந்திரி சபையில் ஓரளவு அபிப்பிராயபேதம் இருக்கிறது என்று ஒப்புக்கொள்கிறார்கள். இரண்டு கட்சிகள் இருக்கும்போது கருத்து வேற்றுமை இயற்கையே. கருத்து வேற்றுமை ஓங்கும்போது பிளவு தவிர்க்க முடியாதது. ஆயினும், பிளவுபட்டால் அம்மாநிலத்தில் இரு கட்சிக்குமே வாழ்வு இல்லை என்பது இன்னுந் தெளிவு. ஆகவே, ஒத்துப் போகத்தான் வேண்டியிருக்கிறது. எல்லோரும் அறிந்த விஷயம். அப்படியிருக்க, முழுப் பூசணியை ஒரு பிடி சோற்றில் மறைக்க முயற்சிப்பானேன்? நேருஜியின் உதாரணத்தைப் பின்பற்றக்கூடாதா?



## ஆணும், பெண்ணும்

மத்திய அரசாங்கத்தில் துணை மந்திரியான மாதரசிக்கு ஆண் வர்க்கத்தின்மீது அபாரக் கோபம். நிர்வாகச் சீரழிவுக்கு ஆண்களே காரணம் என்று சீறுகிறார். நிர்வாகம் ரொம்ப மட்டமாகப் போய்விட்டது என்று அவர் கூறுவதை நாமும் மறுக்கவில்லை. ஆனால், அதற்கு அவர் சொல்லும் காரணமும், பரிகாரமும் ஆண்கள் ஒப்புக் கொள்ளக் கூடியதாக இல்லை. பல்லாண்டு பல்லாண்டாக ஆண்கள் சரிவர நிர்வாகம் செய்யாமல் ஒரே குளறுபடி செய்துவிட்டார்களாம். பெண்கள் தான் இனிச் சரிப்படுத்த வேண்டுமாம்!

பெண்ணின் அருமை, பெருமையைப் பெண் மந்திரியே கூறுகிறார். பெண்கள் சமையலறை வேலையைக் கவனித்து வந்தார்கள்; குடும்பத்தைக் கவனித்துக் கொள்வதில் கோளாறோ, குளறுபடியோ இருந்ததில்லை என்கிறார். வாஸ்தவம். குடும்பத்தை நன்கு கவனித்து, குடும்பத் தலைவரையும் நல்லபடி பேணி, போஷித்து வந்த வரையில் ஆண்களும் ஆரோக்கியமாகவும், அறிவும், ஆற்றலும் மிகுந்தவர்களாகவும் விளங்கினர். காரியங்கள் எல்லாமே செவ்வனே நடந்து வந்தன. ஆனால், இன்று பெண்கள் 'முன்னேற்றம்' அடைந்து வருகிறார்கள். 'நாங்கள்மட்டும் வீட்டில் அடைந்து கிடப்பானேன்' என்று கிளர்ந்தெழுந்து நாகரிக உலகில் நாரியர் சுதந்திரமாகத் துள்ளித் திரிகிறார்கள். வெளியிலே கவனம் திரும்பியது. வீட்டில் கவனிப்பு குறைந்தது. வீடு களையிழந்தது. நாடு பொலிவிழந்தது. யார் குற்றவாளி?



## குற்றம் எங்கே ?

பம்பாயில் இளங் குற்றவாளிகள் அதிகமாகிவிட்டார்களாம். அவர்களில் பலர் தெற்கு ராஜ்யங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. நாகரிக முதிர்ச்சியின், நகர வளர்ச்சியின் பிரதிபலிப்பு! தாயன்பு இல்லாமையே குழந்தைகள் குற்றம் பெருகுவதற்குக் காரணம் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். நல்ல அன்பான வளர்ப்பு முறைதான் சிறுவர்கள் குற்றம் செய்யாமல் தடுக்க முடியும். தாய்மார் கவனம் மேன்மேலும் வெளி விவகாரங்களில் திரும்பி வரும்போது இளம் குற்றவாளிகள் எண்ணிக்கையும் பெருகி வருவது சகஜம் தானே?

சுதந்திரத்திற்குப் பிறகு 'சமூக சேவை' புதிய உருவம் அடைந்து விட்டது. உண்மையில் அது விஸ்வரூபம் பெற்றுவிட்டது. மேல் நாடுகளைப் போன்ற பாணியை அமைத்துக் கொள்வது சில துறைகளுக்குப் பொருந்தலாம். ஆனால், குழந்தைகள் நலத்திற்கு உகந்தது அல்ல. தந்தை வேலைக்குப் போய் விடுகிறார். தாயும் சமூக சேவையென்னும் ஊர் வம்பிலும், அக்கப்போரிலும் ஆழ்ந்துவிட்டால் குழந்தைகளைக் கவனிப்பது யார்? இளங் குற்றவாளிகள் பெருகி வருவதில் வியப்பென்ன?

மூன்றாவது திட்ட காலத்தில் குழந்தைகள் க்ஷேமாபிவிருத்தித் திட்டங்களில் விசேஷ கவனம் செலுத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் நெடுகிலும் உள்ள சமூக சேவா ஸ்தாபனங்கள் மூலம் குழந்தைகள் நலனில் இருபது கோடி ரூபாய் செலவிடப்படுமாம். குழந்தைகள் நலனில் பல சேவா சங்கங்கள்மூலம் இலவசமாகப் பால் பவுடர் விநியோகிக்க முன்பு ஏற்பாடு செய்தார்கள். எத்தனை குழந்தைகள் நலம் பெற்றன? எத்தனை சேவா சங்கங்கள் வளம் பெற்றன? இப்போது முன்னிலும் பெரிய தொகை 'விநியோகத்திற்கு'க் கிடைக்கப் போகிறது. இதுதான் சோஷலிஸமோ?

—அரட்டை




# நாடகமும் நாட்டியமும்

## பேசும் கண்கள்

வட தென்னையிலுள்ள சுமதி நாடக மன்றத்தாரின் முதல் நாடகமான 'பேசும் கண்கள்' அண்ணாமலை மன்றத்தில் ஜனவரி 7-ந் தேதி அரங்கேறியது.

கே. ஜெயகோபால் கதை, வசனம் எழுதியுள்ளார். வசன நடை பரவாயில்லை.

'பரவசிவம் பிள்ளை'யாகத் தோன்றிய பி. பால்ராஜ் தம் பாகத்தை உணர்ந்து பொருத்தமாக நடித்தார்.

பி. தமச்சிவாயம் கம்பீரமாக கைகளை உதறி, கால்களை பலமாக உதைத்துக்கொண்டு நடை போட்டார். காற்றில் அசைந்தாடும் தலையை பொம்மையைப்போல அவர் தலை நிலை கொள்ளாமல் ஆடிக்கொண்டிருந்தது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது. மிகவும் பிரயாசையோடு நடிக்க ஆர்ப்பாட்டம் செய்ததுதான் மிச்சம்; நடிப்பில் நயம் அவரால் அதிகம் ஏற்ற முடியவில்லை.

ஜி. ஆர். கன்னையா, கே. தண்டாயுதபாணி, ஈ. கோவிந்தன், டி. ராம்தாஸ், என். புருஷோத்தமன் ஆகியவர்கள் சுமாராக நடித்தார்கள்.

'கான்ஸ்டேபிள் கந்தசாமி' பாத்திரம் ஏற்றிய எம். பாண்டியன் நடிப்பு கனகச்சிதம். தாம்பரம் ஆண்டாள் அவருக்குமேல் அளவுக்கு மீறி கூச்சலிட்டு வழக்கம்போல் அநாயசமாக நடித்தார்.

சாந்தா தேவி, எம். வத்சலா இருவரும் அழகாக நடித்தார்கள். ஆர். லீலா நடிப்பு ஓரளவு பாராட்டும்படி இருந்தது.

எம். ராதாகிருஷ்ணன், அவர் ஏற்றிருந்த பாகத்துக்கு அவ்வளவாக பொருந்தவில்லை. இன்னும் சற்று இளைஞராக உள்ளவர் அதை ஏற்றால் பாந்தமாக இருக்கலாம்.

பி. ராமலிங்கம் நாடகத்தை டைரக்ட் செய்தார்.

## அழியாச் செல்வம்

ராஜ்வி நாடக மன்றத்தார் கலைவாணர் என். எஸ். கே. இரவு பள்ளி நிதிக்காக 'அழியா செல்வம்' நாடகத்தை ஜனவரி 7-ந் தேதி தி. நகர் வாணி மஹாலில் நடித்தனர். அதை எழுதியவர் பரணி எஸ். பி. சாமி. அரசியல் நெடியும், அடுக்கு மொழியும் நாடகத்தில் குறிப்பிடத் தக்க வகையில் ஆங்காங்கு இருந்தன. நடிப்பிலும் பொதுவாக ஒரு தனி ஆர்ப்பாட்டம் காணப்பட்டது.


எம். வி. சுவாமிநாதன், எஸ். பி. சுவாமி, செல்வராஜ் முதலியோர் அந்நாடகத்தில் பங்கு கொண்டனர்.


சுதேசமித்திரன் சென்னை-2.

உடனே தேவை

பூரா இலங்கை தீவில் (பதுளை, புண்டுலோயா, யாழ்ப்பாணம் இடங்களைத் தவிர) எமது மித்திரன் தினப் பதிப்பு, வாரப்பதிப்பு முதலியவைகளை விற்பனை செய்ய ஊக்கமுள்ள ஏஜண்ட் தேவை. விருப்பமுள்ளவர்கள் கீழ்க்காணும் விலாஸதாருக்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்,

சர்க்குலேஷன் மானேஜர்.



## பம்பாய் கலாநிலைய கதம்ப நிகழ்ச்சி


வடக்கு பம்பாயில் பிரபல நாடகச் சங்கமாக திகழும் கலா நிலையம் கடந்த டிசம்பர் 31-ந் தேதி அருமையானதொரு கதம்ப நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. அந்நிகழ்ச்சி தாதரிலுள்ள சிங் ஜார்ஜ் ஸ்கூல் ஹாலில் நடைபெற்றது.

நாடகக் கலையை வளர்ப்பதில் அதிக ஆர்வம் காட்டி வரும் கலா நிலையத்தார் ஹாஸ்யச் சுவை மிகுந்த 'சிவமா, சக்தியா' என்கிற தமிழ் நாடகத்தை அப்போது நடத்தி கூடியிருந்தோரின் அபாரப் பாராட்டு தலைப் பெற்றனர். அதில் பங்கு கொண்ட ஒவ்வொருவருமே அவரவருக்குள்ள திறமையை நன்கு வெளிக் காட்டினர். காட்சி ஜோடனைகள், வாத்திய இசை எல்லாமே உயர் தரம்.


அந்நாடகத்தைத் தவிர, குமாரிகள் கமலா, லலிதாவின் கர்நாடக சங்கீதம், ஸ்ரீ பால்கிவாலா கோஷ்டியினரின் வாத்திய இசை, ஸ்ரீ பால் சாதியின் வயலின் விருந்து, ஸ்ரீ எம். எஸ். நாராயண ஸ்வாமியின் விகடக் கச்சேரி ஆகியவையும் அக்கதம்ப நிகழ்ச்சிக்கு களை யூட்டின.

கலாநிலையத் தலைவர் ஸ்ரீ ஸி. வி. சுப்பிரமணியம் அன்று குழுமியிருந்த ரசிகர்களுக்கு புத்தாண்டு நல்வாழ்த்துக் கூறிப் பேசுகையில், நிலையத்தின் கலைத் தொண்டுக்கு தொடர்ந்து ஆதரவு காட்டி வர வேண்டுமென அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

மகாராஷ்ட்ர சர்க்காரும், சங்கீத நாடக அகடமியும் அங்கீகரித்துள்ள அந்நிலையம் அதன் 12-வது ஆண்டு விழாவை இவ்வாண்டு மார்ச் 11, 12-ந் தேதிகளில் சிறப்பாகக் கொண்டாடவிருக்கிறது. அப்போது குஜராத்தி, மராத்தி, தமிழ் நாடகங்களை நடத்த அது திட்டமிட்டிருக்கிறது. -சஞ்சாரி.



கோவை 'மித்திரன்' நிருபர் ஸ்ரீ சுந்தரஸ்வாமியின் குமாரியான ராஜலட்சுமிக்கு இசைக்கான உபகாரச் சம்பளம் இந்திய சர்க்காரால் வழங்கப் பட்டுள்ளது.



4-வது அ. இ. மத்வ தத்துவ மகாநாட்டையொட்டி டிஸ. 23ல் 'தர்மப்பிரகாஷ்' தியேட்டரில் நடந்த 'வித்யுன் மாலா' என்னும் சம்ஸ்கிருத நாடகத்தில் ராமர் வேடம் தரித்த ஸ்ரீ லக்ஷ்மி நாராயணச்சாரியா. இவர் நட்டுவனார் காஞ்சிபுரம் ஸ்ரீ எல்லப்பாவின் சிஷ்யர்.




தீபாவளி பண்டிகைக்கு இன்னும் ஒரு வாரம்தான் இருந்தது. மாலை மணி 6. ராமு அலுவலகத்திலிருந்து வீட்டை அடைந்தான். அவனது தந்தை அவனை உற்று நோக்கினார்.

'என்னடா ராமு! உன் முகம் ஏன் இப்படி மூன்றும் பேஸ்த்து அடித்த மாதிரி இருக்கிறது? தலை தீபாவளிக்கு மனைவியைப் பார்க்க மாமனார் வீட்டிற்குப் போக முடியாமல் இந்தக் கிழங்கள் குறுக்கே மலைபோல் நிற்கின்றனவே என்றா?' என்று வினவினார் சுந்தரம் பிள்ளை.

'இல்லையப்பா! தீபாவளிக்கு இங்குமில்லாமல் அங்குமில்லாமல் இந்த பாழாய்ப் போன உத்தியோகம் எனக்குச் சதி செய்கிறதே என்றுதான் கவலையாக இருக்கிறது'

'அப்படி என்னடா வந்துவிட்டது?'

'பண்டிகை நாளன்று நான் சென்னையில் இருக்கவேண்டியிருக்கிறது.'

'என்னடா கதைக்கிறாய்? நீ பத்திரிகைகளில் கதைப்பது போல் எங்களை ஏமாற்றிவிட்டு மாமனார் ஊருக்குப் போக ஏதேனும் திட்டம் தீட்டியிருக்கிறாயா?'

'அதெல்லாம் ஒன்றுமில்லையப்பா! இதோ பாருங்கள் ஆபீஸ் உத்தரவு' என்று சொல்லிக்கொண்டே 'டைப்' செய்த ஒரு கடிதத்தை எடுத்து அவரிடம் நீட்டினான் ராமு.

அதை வாங்கி ஒரு முறைப் பார்த்த சுந்தரம் பிள்ளை, 'ம்... எங்களுக்குத் தெரியாமல் நீ உன் மனைவியின் வீட்டுக்குப் போனதாக தெரிந்ததோ...அவ்வளவுதான்...உன்னைத் தொலைத்து, தலைமுழுகிவிடுவேன்...ஜாக்கிரதை! அந்த நடராஜம் பிள்ளை

தன் பெண்ணுக்குத் தீபாவளிக்காக 'செய்து போடுவதாகச் சொன்ன அந்த கெம்பு அட்டிகையை செய்து வைத்துக் கொண்டு கடிதம் போட்டு அழைத்தால்தான் நீ அங்கு போகலாம்.'

'சரி அப்பா! நான் ஏன் உங்களுக்கு விரோதமாக நடக்கப் போகிறேன்?' என்று கூறிக் கொண்டே மறுபக்கம் திரும்பினான் ராமு. அங்கே காண்டியும் கையுமாக காட்சித் தந்தாள் காமாக்ஷி அம்மாள்.

'என்னங்க! தம்பிக்கு நன்றாக புத்தி சொன்னீர்களா? அசட்டுத்தனமாக அங்கே போய் நிற்கப் போகிறான்...! பிறகு நமது மானம், மரியாதை, கௌரவம் எல்லாம் கப்பல் ஏற வேண்டியது தான்' என்றாள் பிள்ளையை நோக்கி.

'என்னமோ சொல்லிவிட்டேன் ...மீறி நடந்தால் அவன் பிரியம். ...பிறகு அவனுக்கு இங்கே ஏது இடம்?' என்றார் சுந்தரம் பிள்ளை.

'என்னமோ நீங்களும்தான் சொல்லுகிறீர்கள். எனக்கென்னவோ அவன்மேல் நம்பிக்கையில்லை...' என்று இழுத்தாள் காமாக்ஷி.

'போடி...போ...உனக்கு எப்போதுமே சந்தேகம்தான்...'

ராமு இவர்கள் பேசிக் கொண்டிருந்ததை கேட்டுக் கொண்டிருந்துவிட்டு தன் அறையை நோக்கி நடந்தான்.

ஃ ஃ ஃ

காலை மணி பத்து இருக்கும். தபாலை பிரித்துப் படித்த நடராஜம் பிள்ளையின் கண்களிலிருந்து இரண்டு சொட்டு நீர் தளும்பி கீழே விழுந்தது. அதை துடைத்துக்கொண்டே மறுபடியும் அந்தக் கடிதத்தைப் படித்தார் அவர். துக்கம் ஒருபுறம் ...சந்தோஷம் ஒருபுறம் அவரை அலைக்கழித்தது. அந்தக் கடிதத்தை தன் மேஜை அறையில் பத்திரப்படுத்திவிட்டு, 'வனஜா!' என்று உரக்கக் கூப்பிட்டார்.

'என்னப்பா!' என்று கேட்டுக் கொண்டே அவர் அருகில் வந்து நின்றாள் வனஜா ஒரு தங்கப் பதுமையைப் போல். பிள்ளை அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார் ஒன்றும் பேசாமல்.

தந்தையின் இந்த போக்கு அவளுக்குப் புரியவில்லை. 'என்னப்பா! ஒரு மாதிரியாய் பார்க்கிறீர்கள்?' என்றாள்.

'ஒன்றுமில்லேயம்மா! மனமறிந்து உனக்குத் துரோகம் செய்ய வேண்டி இருக்கிறதே என்று நினைக்கும்போது என் மனம் வேதனை அடைகிறது, வனஜா!'

'என்னப்பா இன்றைக்கு என்னென்னவோ பேசுகிறீர்களே!'

'வனஜா! சந்தர்ப்பம்...சூழ்நிலை காரணமாக நான் உனக்கு துரோகம் செய்தேன் என்று வைத்துக்கொள்...அப்போது என்னை நீ மன்னிப்பாயா அம்மா!'

'எனக்கு ஒன்றுமே புரியவில்லையப்பா! நீங்கள் ஏதோ கலவரப்பட்டிருக்கிறீர்கள் என்றே நினைக்கிறேன்...எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது அப்பா நீங்கள் பேசுவதும்...கேட்கும் கேள்விகளும்...'

நடராஜம் பிள்ளை ஒன்றுமே பேசவில்லை சிறிது நேரம்.

'வனஜா! உனக்குத் தீபாவளிக்காக செய்து போடுவதாகச் சொன்ன அந்த கெம்பு அட்டிகையை என்னால் இன்னும் செய்து போட முடியவில்லை. அதனால் உன்னை உன் மாமனார் வீட்டில்




பண்டிகைக்காக கொண்டு போய் விட சாத்தியமில்லை...நாளும் கிழமையுமாக உன்னை நான் இப்படி வைத்திருப்பது உனக்கு இழைக்கும் துரோகமில்லையா?'

'அப்பா! எல்லாம் என் தலைவிதிப்படிதான் நடக்கும். அதற்கு நீங்கள் வருத்தப்பட்டால் மட்டும் போதுமா? கடவுள் கண் திறக்கவேண்டும்...அப்போது தான் என் வாழ்வுக்கு விமோசனம்...' அவள் கண்களில் கண்ணீர் நிறைந்து வழிந்தது.

'இன்னொன்று வனஜா! உன் தந்தை உனக்காக எப்போதும் நன்மையைத்தான் செய்வார் என்று நம்புகிறாயா? சில வேளை ...உன்னையோ உன் கணவனையோ நான் அவமானப்படுத்த நேரிட்டால் அப்போது அதற்காக என்னைத் தூற்றமாட்டாயே!'

'ஏம்பா இன்றைக்கு இப்படியெல்லாம் பேசுகிறீர்கள். உங்கள் மகள் அவ்வளவு பாவியாக மாற மாட்டாளப்பா! என் தாயின் முகம் காணாத நாளிலிருந்து என்னை அந்த ஏக்கம் தெரியாமல் அன்பைப் பொழிந்து சீராட்டி தாலாட்டி வளர்த்துவிட்ட உங்களை என்றுமே என் நா தூற்றாது அப்பா...தூற்றாது...இதை நீங்கள் நம்புங்கள்...' வனஜா கதறியே விட்டாள் இதைச் சொல்லும்போது.

'உன் மனதை தேற்றிக்கொள்ளம்மா...அதிகமாக நான் உன்னைப் புண்படுத்திவிட்டேன்...நீ நல்லபடியாக வாழ வேண்டுமென்




கைத்தறி நெசவாளர்கள் தம்முடன் கடும் போட்டியில் இறங்கும் போது அவர்களுக்கு நூல் கொடுத்துக்கொண்டேயிருப்பதற்கு மில்காரர்கள் தர்மப் பிரபுக்களல்ல. லாபகரமாயிருக்கும் என்று தெரிந்தவுடன் மில்காரர்கள் மில் நூலை விற்பதை நிறுத்திவிட்டு நிச்சயமாகத் தாமே நெய்ய ஆரம்பித்துவிடுவார்கள். அவர்கள் தர்மம் செய்பவர்கள் அல்ல. பணம் சம்பாதிக்கவே மில்களை ஆரம்பித்து நடத்துகிறார்கள். நெய்வது இன்னும் லாபகரமாயிருக்கும் என்று தெரிந்தால், தமது நூலை கைத்தறி நெசவாளர்களுக்கு விற்பனை செய்வதை நிறுத்திவிடுவார்கள். மில் நூலை நெய்பவர்களில் பலர் வட்டிக்குப் பணம் தரும் சௌக்கார்களிடம் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். மில் உற்பத்தியை அவர்கள் நம்பிக் கொண்டிருக்கும்வரையில் அப்படித்தான் இருக்கமுடியும்.

நெசவாளர், மூன்றாவது மனிதர்களின்மூலம் தமக்கு வேண்டிய நூலைப்பெறக்கூடாது. தம்மைப் போல் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளிடமிருந்தே பெற வேண்டும். இதுதான் கிராமப் பொருளாதாரம்.

மில் நூலை உபயோகிப்பதுதான் கைத்தறித் தொழிலின் கழுத்தை நெறிக்கும் முக்கியப் பிடிப்பாகும். கையினால் நூற்கப்பட்ட நூல்தான் அதற்கு விமோசனம். கைராட்டினம் மறைந்தால், கைத்தறியும் அதேமாதிரி மறைந்துதான் போகும்.

பதுதான் என் ஆசை எல்லாம்... அதற்காகத்தான் இப்படியெல்லாம் உளறிவிட்டேன். நீ போம்மா...போய் உன் வேலையைக் கவனி' என்றார் பிள்ளை கனிவுடன். வனஜாவை தன் பெண்ணாக பெற்றதில் அவர் மனம் பெருமிதமடைந்தது.

தீபாவளி முந்தின தினம்... காலை நேரம்—

ஒரு வண்டி வந்து நடராஜம் பிள்ளையின் வீட்டின் எதிரே நின்றது. பிள்ளை எழுந்து வாசலில் வந்து பார்த்தார். அவர் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை...எதிரே ஒரு சூட்கேசுடன் நின்று கொண்டிருந்தான் ராமு.

'வா...ராமு!...வா' என்று வரவேற்றுக்கொண்டே உள்ளே நுழைந்தவர் உற்சாகம் பொங்கும் குரலில், 'வனஜா!' என்று அழைத்தார்.

தந்தையின் குரல் கேட்டு அங்கு வந்த வனஜா எதிரே கணவனைக் கண்டதும் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்.


அவளது நிலையைப் புரிந்து கொண்ட பிள்ளை, 'என்ன வனஜா! மாப்பிள்ளையை உள்ளே கூட்டிப் போய் ஸ்நானத்திற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகளை செய்யம்மா. காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு சாவகாசமாய் பேசிக் கொள்ளலாம்...' என்றார் சிரித்துக்கொண்டே.



வனஜாவின் முகம் வெட்கத்தால் சிவந்து விட்டது. அவள் ஒரு துள்ளு துள்ளிக் கொண்டு



உள்ளே ஓடினாள். மகளின் சந்தோஷமான முகத்தை அன்றே கண்ட பிள்ளை உள்ளம் பூரித்தவராய், 'போப்பா ராமு! உள்ளே போய் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு வா...எல்லோருமாக சாப்பிடலாம்...' என்று அன்பு கட்டளை இட்டார்.



ராமு, அரை மணியில் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு வரவும், அவனும் பிள்ளையும் காலை ஆகாரத்தை அருந்த உட்கார்ந்தனர்...வனஜா தான் இருவருக்கும் பரிமாறினாள். இரண்டு ஜோடி கண்களும் அடிக்கடி கலந்து உறவாடிக்கொண்டிருக்கையில் அங்கு வாய் பேச்சுக்கு அவசியமே இல்லாமற் போய்விட்டது.

'அண்ணலும் நோக்கினான்... அவளும் நோக்கினாள்...' என்ற கம்பர் காவியத்தின் ரசத்தை அன்றே உணர்ந்தார் பிள்ளை. அவரும் சமயத்தை அனுசரித்து வாய் பேசாது சாப்பிட்டார்.

ஒரு வழியாக காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு முன் கூடத்திற்கு வந்து தாம்பூலம் தரிக்கத் துவங்கினர் மாமனாரும் மாப்பிள்ளையும். அப்போதுதான் பிள்ளை மாப்பிள்ளையின் யோகக்ஷேமங்களை விசாரிக்கப் புகுந்தார்.

'என்ன ராமு! வீட்டில் அப்பா அம்மா எல்லோரும் நல்ல சுகம்தானே!' என்றார்.

'நல்ல சுகம்தான் மாமா! ஆனால் நான் இங்கு வந்தது அவர்களுக்குத் தெரியாது…நான்தான் எழுத்தாளனாயிற்றே! சென்னைப் போவதாக ஒரு போக்குக் காட்டிவிட்டு இங்கு வந்துவிட்டேன்…அப்பாவும் அம்மாவும் சுத்த கர்னாடகம்…காலத்துக்கு ஏற்றவாறு அனுசரித்து அவர்களுக்கு போகத் தெரிந்தாலும் ஒரேயடியாகத் துள்ளிக் குதிப்பார்…'

அவன் சொல்லிக் கொண்டு வந்ததைக் கேட்டு வந்த பிள்ளையின் முகம் சிவந்துவிட்டது. கண்கள் கோவைப் பழங்கள்போல் ஆகிவிட்டன…தன் இருக்கையை விட்டு எழுந்து நின்று கொண்டார்.

'மாப்பிள்ளை!' என்று கர்ஜித்தார் அவர்.

தகப்பனாரின் திடீர் கூச்சலைக் கேட்ட வனஜா முன்கட்டிற்கு வந்து நின்று கொண்டாள். தந்தையின் கோபத் தோற்றம் அவளை நிலை குலையச் செய்துவிட்டது. என்ன நேருமோ வென்று பயந்தபடி நின்று கொண்டிருந்தாள்.

ராமுவும் அவரது செய்கையைக் கண்டு திடுக்கிட்டு போனான். எப்போதுமே சுதந்திரமாக பெயரைச் சொல்லியே அழைக்கும் அவர் திடீரென 'மாப்பிள்ளை' என்று மரியாதைச் சொல் வழங்கவும் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

'என்ன மாமா கோபம்?' என்றான் ஒன்றும் விளங்காமல்.

'மாப்பிள்ளை! எனக்கு இந்த கள்ளம், கபடு, சூது, திருட்டுத்தனம் இவைகள் ஒன்றும் பிடிக்காது. அவைகளுக்கு இடங் கொடுக்கவும் என்னால் முடியாது. நேர்மையான பாதையையே நான் விரும்புகிறவன். தவறி நடப்பவர்கள் யாரானாலும் எனக்கு கவலையில்லை…நான் விட்டுக் கொடுக்கவும் முடியாது. நீங்கள் மேற்கொண்டு வந்துள்ள பாதை தவறு…வந்தவழியே திரும்பிப் போகலாம்…அதோ வாசற் கதவும் திறந்தபடியே இருக்கின்றன…நீங்கள் போய் உங்கள் பெற்றோரின் அனுமதியின் பேரில் அவர்கள் கைப்பட எழுதி வாங்கி வந்தாலன்றி நான் இடம் கொடுக்க முடியாது…ஒரு முறை தவறு செய்தவர் என்னையும் ஏமாற்ற முயலலாம்…அதற்கு இடந்தர நான் சித்தமாக இல்லை…இனி நீங்கள் போகலாம்…'

'என்ன மாமா இது? வீடு தேடி வந்த மாப்பிள்ளைக்கா இந்த மரியாதை? அதுவும் உண்மையை சொன்னதற்கு!'

'உங்கள் உண்மைக்காக நான் மெச்சுகிறேன் மாப்பிள்ளை…ஆனால் அதேசமயம் நேர்மையிலிருந்து தவறி நடந்துவிட்ட உமக்கு இந்தச் சிறுமை தேவையானதே…'

'அப்படியானால் நான் போக வேண்டியதுதானா?'

'சந்தேகமில்லாமல்…'

ராமு வாசற்புறம் திரும்பினான். அதேசமயம் பின்னாலிருந்து 'நில்லுங்கள்' என்ற குரல் வந்தது. அவன் திரும்பினான். வனஜா பிள்ளையின் காலடியில் விழுந்து கிடந்தாள்.

'அப்பா! பெரிய மனது பண்ணி இந்த ஒரு தடவை மட்டும் அவரை மன்னித்து விடுங்களப்பா! நாளை எங்களுக்குத் தலை தீபாவளி இல்லையா…அதற்காக வேனும் விட்டுக் கொடுங்களப்பா!' என்று கதறினாள் வனஜா.



'வனஜா! எனக்காக நீ ஒன்றும் அவரை மன்னிப்புக் கேட்க வேண்டாம்…நான் மிகவும் ரோசமுள்ளவன்…நீ கேட்டு வாங்கித் தரும் அந்த மன்னிப்பின் நிழலில் நான் இங்கு தங்க முடியாது. என் பெற்றோருக்கு நான் செய்த துரோகத்திற்கு இந்த அவமானம் எனக்குச் சரியான தண்டனைதான்…' என்று கொதித்தான் ராமு.

'வனஜா! நீ குழந்தையல்ல…பேசாமல் உள்ளே போ…மாப்பிள்ளை என்றால் மட்டும் எதுக்கும் விதி விலக்கா?' என்று கூச்சலிட்டார் பிள்ளை.

'அப்பா! அவர் என் கணவர்…அவருக்கு ஏற்பட்ட அவமானம் எனக்கும் ஏற்பட்டதுதான்…அவர் இருக்கும் இடம்தான் எனக்கும் இடம்…நீங்கள் அவரை வெளியே போகச் சொன்னால் இனி எனக்கும் இங்கு வேலை இல்லை…நானும் அவருடனே போகிறேன்.'

'முடியாது வனஜா! முடியாது…நானும் ரோசமுள்ளவன்தான்…என் வாக்கை நான் காப்பாற்ற வேண்டும்…உனக்கு கெம்பு அட்டிகை செய்து போட்டு உன்னைத் தீபாவளிக்கு அங்கு அழைத்து வருவதாக நான் வாக்களித்திருக்கிறேன். அதன்படி என்னால் நடக்க முடியவில்லை…அந்தக் காரியம் முடிந்தாலன்றி உன்னை அங்கு அனுப்புவது என்பது முடியாத காரியம்.

'எது முடியாத காரியம்…உங்கள் வாக்கும் ஆச்சு…நீங்களும் ஆச்சு…புருஷனுடன் போகிறேன் என்று சொல்லுகிறவளை தடுத்து நிறுத்த உமக்கு என்ன உரிமை இருக்கிறது? என்றைக்கு உங்கள் பெண்ணை மணம் முடித்து கொடுத்தீர்களோ அன்றே




அவள்மீது உங்களுக்குள்ள பாத்தியதை அறுபட்டுவிட்டது என்பதை இப்போதேனும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் இஷ்டப்படி எனது உரிமையை விட்டுச் செல்ல நான் அப்படி ரோசம் கெட்ட குடும்பத்தில் பிறந்துவிடவில்லை…புறப்படு வனஜா! போகலாம்…இவருக்கு எப்போது காலம் வருகிறதோ அப்போது செய்து எடுத்துக் கொண்டு வரட்டும் அந்த கெம்பு அட்டிகையை…' என்று கூறிக் கொண்டே வனஜாவின் கைபற்றி இழுத்தான் ராமு.

அவனது செய்கையை பிள்ளை தடுக்கவில்லை. வாயடைத்துப் போய் நின்றுவிட்டார் செயலற்று.

'அப்பா! என்னை ஆசீர்வதித்து அனுப்புங்கள் அப்பா!' என்று கெஞ்சினாள் வனஜா அவரது கால்களைப் பிடித்துக் கொண்டு.

'உன் விருப்பப்படியும், உன் கணவனின் கட்டளைப்படியும் நீ போகிறாய்...பிறந்த இடத்துக்கும் புகுந்த இடத்துக்கும் பெருமைத் தேடித் தரும் விதமாக நடந்துகொள். எங்கே இருந்தாலும் நீ சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதே என் ஆசையெல்லாம்' என்றார் பிள்ளை குரல் தழுதழுக்க. அவரது ரோசமெல்லாம் எங்கோ ஓடி மறைந்துகொண்டது.

வனஜா தந்தையின் கால்களை கண்களில் ஒத்திக்கொண்டு எழுந்து கணவன் பாதத்திலும் விழுந்து வணங்கினாள்.

ராமு அவளை அப்படியே தூக்கி 'வா வனஜா! போகலாம்...' என்று சொல்லி முன்னே நடந்தான். அவன் பின்னே நடந்தாள் வனஜா. நீர் முட்டிய கண்களுடன் அவர்கள் செல்வதை நின்று பார்த்துக்கொண்டிருந்தார் பிள்ளை.

அவர்கள் தன் பார்வையை விட்டு மறைந்ததும் பிள்ளை தன் அறைக்குச் சென்று மேஜை அறையைத் திறந்து ஒரு பெட்டியை வெளியே எடுத்தார். அதனுள் ஒரு கெம்பு அட்டிகை அவரைப் பார்த்து சிரித்தது. அதனுடன் ஒரு வாரத்திற்குமுன் வந்த அந்த கடிதமும் இருந்தது. அதனை எடுத்து மறுபடியும் வாசித்தார் பிள்ளை.

தஞ்சை,

....-10-57

அன்புள்ள சம்பந்தி நடராஜம் பிள்ளைக்கு,

அநேக நமஸ்காரம்......என் மனைவி காமாக்ஷியைத்தான் உங்களுக்குத் தெரியுமே! அவள் பொருட்டு நான் இங்கு ஒரு நாடகம் நடத்த வேண்டி இருக்கிறது...அதன்படி நடித்துக்கொண்டும் இருக்கிறேன். என் பிள்ளை ராமு ஒரு ரோசக்காரன். அவனுக்கு ரோசம் வந்துவிட்டால் எவரையும் எடுத்தெறிந்து பேசிவிடுவான். காரியங்களும் செய்து விடுவான்...அம்மாவுக்குக் கீழ் பிள்ளையானாலும் ஓர் அளவுக்குத்தான்.

தப்பித்தவறி ராமு அவ்விடம் வந்தால் அவனுக்கு ரோசம் வரும்படி நடந்துகொள்ளுங்கள். அதே சமயம் உங்கள் மகள் வனஜாவும் அவனுடன் கிளம்பும்படி வழி செய்யுங்கள்...பிறகு பாருங்களேன்! உங்கள் மகளுக்கு வாழ்வு மலர்ந்ததுபோல்தான். மற்றதை நான் இங்கு கவனித்துக்கொள்கிறேன்.

நாளை இன்ஷ்யூர் பார்சலில் ஒரு கெம்பு அட்டிக்கை உங்களுக்கு வரும். அதன் கிரயம் ரூபாய் அறுநூறுதான். நீங்கள் பெண்ணை இங்கு அனுப்பின பிறகு, தனியே வந்து கொடுத்துவிட்டுப் போங்கள்...என் மனைவி உங்களை மதிக்க வேண்டுமே! அதற்காகத்தான் இந்த ஏற்பாடு. நீங்கள் இந்த என் உதவியை ஏற்க முடியாதென்றால் ஒன்று செய்யுங்கள்...அதன் கிரயத்தை உங்கள் சௌகரியம்போல் எனக்குக் கொடுத்துவிடுங்கள். நான் பெற்றுக்கொள்கிறேன். உங்கள் மனமும் நிம்மதியடையும்...சரிதானே!

நம் குழந்தைகளின் வாழ்வுதானே நமக்கு முக்கியம்! அவளைக்கொண்டே என் மனைவியின் போக்கையும் மாற்றிவிட வேண்டுமென்பது என் எண்ணம்.

தங்கள்,

சுந்தரம் பிள்ளை.



கடிதத்தையும் அட்டிக்கையையும் மறுபடியும் பெட்டியில் வைத்துப் பத்திரப்படுத்திவிட்டு ஒரு நிம்மதியான பெருமூச்சு விட்டார் பிள்ளை.

வாசலில் ராமுவும் வனஜாவும் ஒன்றாக நுழைவதைக் கண்டு திடுக்கிட்டனர் சுந்தரம் பிள்ளையும் காமாட்சியும்.

'என்னடா இது? 'பட்டணம் போகிறேன் என்று சொல்லிவிட்டு கடலூர் போய் வருகிறாயா? போனதுதான் போனாய்...வரும்போது இவளை ஏன் அழைத்துக்கொண்டு வந்தாய் அட்டிக்கை இல்லாமல்...' என்று கத்தினார் சுந்தரம் பிள்ளை.


'முதலில் பட்டணம் போகத்தான் கிளம்பினேன் அப்பா... இது எனக்குத் தலை தீபாவளியாயிற்றா? ஆபீஸில் எல்லோரும் என்னைக் கேலி செய்தார்கள்... எனக்கு வெட்கம் தாங்க முடியவில்லை...கூடவும் 'அம்மாவுக்குக் கீழ் பிள்ளையென்றால் மனைவியிடம்கூட சுதந்தரம் இல்லையா?' என்று வேறு இடித்துக் காண்பித்தார்கள். எனக்கு ஒரே அவமானம்! நேரே மானேஜரிடம் சென்று விஷயத்தைச் சொல்லி எனது உத்தரவை ரத்து செய்து பெற்றுக்கொண்டேன். விஷயத்தை உங்களிடம் சொன்னால் நீங்கள் விட மாட்டீர்கள். அதனால் சொல்லாமலே கிளம்பிவிட்டேன்' என்று சொல்லி தன் மாமனார் வீட்டில் நடந்தவற்றையெல்லாம் விவரமாகக் கூறி முடித்தான் ராமு.

'அவள் என்னுடன் வருகிறேன் என்றாள். அவர் அனுப்ப மறுத்தார்...நானும் என் உடைமையை என்னுடன் அனுப்பும்படி கேட்டேன். அதற்கும் முடியாது என்று வீம்பு பேசினார்... எனக்கு ரோசம் வந்துவிட்டது. அவரை எதிர்த்துக்கொண்டு கூடவே இழுத்து வந்துவிட்டேன்.'

'பெரிய ரோசக்காரன்தாண்டா நீ...இப்போது நகையை விட்டுவிட்டாயே! இனிமேல் அவருக்கு என்ன அக்கறை! சரி...உன் இஷ்டப்படி நீ நடந்துகொண்டதால் இனி உனக்கும் அவளுக்கும் இங்கு இடமில்லை...எங்காவது போய்த் தொலையுங்கள்' என்று கத்தினார் சுந்தரம் பிள்ளை.

'என்னங்க இது...நகையா பெரிசு நமக்கு. ஏதோ செய்து போடுகிறேன் என்றாரே என்று நாமும் வீம்பாக இருந்துவிட்டோம். குழந்தையை அவர் அவமானப்படுத்தி இருக்கிறார்...அதனைக் கவனிக்காமல் இன்னும்


PAKCO



நீடித்து உழைக்கும்
க்ரூட் ஆயில் எஞ்சின்கள்
5/6 H. P, 8/9 H. P. & 10/11
H. P களில் கிடைக்கும்.
அதிக சக்தி உள்ள எஞ்சின்களுக்கும்
விண்ணப்பிக்கலாம்.
ஆர்ம்ஸ்டிராங் சிட்லி இங்கிலீஷ்
டீசல் எஞ்சின்களுக்கு ஸ்பேர்
பாகங்கள் எப்பொழுதும் ஸ்டாக்கிலிருந்து கிடைக்கும்.
சென்னை, ஆந்திரா, மைசூர் & கேரள
ராஜ்யங்களுக்கு ஏஜண்டுகள் :
K. S. ஷிவ்ஜி அண்ட் கோ,
தபால் பெட்டி நெ. 5,
178/179, பிராட்வே, சென்னை-1.
போன்:3617 தந்தி: 'லாம்ப்' Estd. 1903

நகை மேலேயே இருக்கிறீர்களே…அவன் கேட்டும் அவர் அனுப்ப மறுக்க அத்தனை இரும்புத் தலையா அவருக்கு? சரியான பாடம் கற்பித்தான் ராமு. அவன் செய்ததுதான் சரி. அவனைப் போய் கோபித்துக்கொள்கிறீர்களே! அவருக்கு நல்ல காலம் எப்போது வருவது, நமது மருமகப் பெண் நம் வீட்டுக்கு எப்போது வருவது? விட்டுத் தள்ளுங்கள் நகையை' என்று தன் பிள்ளைக்குப் பரிந்து பேசினாள் காமாட்சி அம்மாள் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தபடியே.

அதே சமயம் வனஜா போய் அவள் காலில் விழுந்து நமஸ்கரித்தாள்.

## காந்தி வாக்கு

—x—

உயிருள்ளவைகளை அறுத்துச் சோதனை செய்வதை முழு மனதுடன் வெறுக்கிறேன். விஞ்ஞானம், ஜீவகாருண்யம் என்று சொல்லப்பட்டு ஒரு பாபமும் அறியாத உயிர்கள் படுகொலை செய்யப்படுவதை வெறுக்கிறேன். அவற்றின் ரத்தத்தைச் சிந்தி விஞ்ஞானத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பவை யாவும் ஒன்றுக்கும் ஆகாதவை என்றே நான் கருதுகிறேன். உயிருள்ளவைகளைத் துண்டித்துப் பார்க்காமல், ரத்த ஓட்டத் தத்துவத்தைக் கண்டுபிடித்திருக்க முடியாதென்றால், மனிதவர்க்கம் அது இல்லாமலேயே நன்றாகத்தான் இருக்கும்.

'தீர்க்க சுமங்கலியாய் பெருவாழ்வு வாழம்மா நீ…' என்று வாய் நிறைய வாழ்த்தினாள் காமாட்சி, தன் சுய குணத்தையும் சற்றே மறந்தவளாய்.

தன் கண்களில் துளிர்த்த நீரை அவர்கள் எவருக்கும் தெரியாமல் துடைத்துக்கொண்டார் சுந்தரம் பிள்ளை.

ஃ ஃ ஃ

தீபாவளி பொழுது விடிந்தது. கங்கா ஸ்நானம் முடிந்து புதுப் புடவை சலசலக்க வாயிற்படி வந்த வனஜா ஸ்தம்பித்து நின்றாள். அங்கே அவளது தந்தை சிரித்த முகத்துடன் நின்றுகொண்டிருந்தார்.

'அப்பா!' என்று கத்திக்கொண்டே அவரது கால்களைக் கட்டிக்கொண்டு கதறினாள் வனஜா.

'எழுந்திரும்மா! இதென்ன சிறுபிள்ளைதனம்? அன்று நீ சொன்னதுபோலவே இன்று நீ நடந்துகொண்டாயம்மா…… உன் வார்த்தையை நீ காப்பாற்றி விட்டாய்…இதோ பார்…உனக்குச் சேர வேண்டிய கெம்பு அட்டிக்கை…' என்று கூறி வனஜாவைத் தூக்கி நிறுத்தி அவளது கழுத்தில் அந்த அட்டிக்கையைத் தன் கையினாலேயே அணிவித்தார் பிள்ளை.

அங்கு வந்த ராமுவும் அவரை வணங்கி எழுந்தான்.

'மாப்பிள்ளை! நீங்கள் அவசரப்பட்டுவிட்டீர்கள். நீங்கள் வராவிட்டால் நானே கொண்டு வந்து விட்டிருப்பேன் வனஜாவை இந்த அட்டிகையுடன். போகிறது…எல்லாம் நன்மைக்குத்தான்…' என்றார் பிள்ளை.

அன்றைய தீபாவளி அங்கு நிறைந்து நின்றது.



# தில்லித் தபால்

## பொங்கல் திருநாள்

தில்லியில் தமிழர்கள் பொங்கல் திருநாளை வழக்கம்போல கோலாகலமாகக் கொண்டாடினார்கள். தமிழ்ச் சங்கத்தினர் ஞாயிறன்று மாலை பொங்கலை ஒட்டி கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். சென்னை நிதி அமைச்சர் சி. சுப்ரமண்யம் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். சென்னை விவசாயம், உள்துறை அமைச்சர் பக்தவத்சலம் பொங்கல் திருநாளின் உட்கருத்தை அழகுற விளக்கி தில்லித் தமிழருக்கு நல்வாழ்த்துக் கூறினார். நிதி அமைச்சர் தில்லி அன்பர்களின் தமிழ்ப் பற்றைப் போற்றினார். அன்று கான்ஸிடியூஷன் கிளப்பில் திரளான மக்கள் சிறப்பான கதம்ப நிகழ்ச்சி ஒன்றையும் கண்டு மகிழ்ந்தார்கள்.

ராதாஹரனின் பரத நாட்டிய நிகழ்ச்சி சிறப்பாக அமைந்திருந்தது. சிறுமியின் கலையார்வமும் ஈடுபாடும் நாளுக்கு நாள் வளர்ந்து வருவதை உணர முடிந்தது. வழக்கம்போல ஹாஸ்ய நாடகம்தான் தனிச் சிறப்புடன் விளங்கியது. சௌத் இந்தியன் தியேட்டர்சாரின் சார்பில் பூர்ணம் எழுதித் தயாரித்த 'பொங்கல் விருந்து' நகைச் சுவை விருந்தாகவே சிறந்து விளங்கிற்று. சமீப காலத்தில் தில்லி கண்டுள்ள இயல்பான நடிப்புத் திறனில் சிறந்த 'கோபு' ஜமாய்த்துவிட்டார். ஒருமனதான பாராட்டிற்குரியவரானார். பழைய நடிகர் சந்தானமும் ஆர்வமிகுந்த குமாரும், பிரேமாவும் தத்தம் பங்கை உணர்ந்து நடித்தார்கள். நிகழ்ச்சியில் இடம் பெற்றிருந்த 'பாலர் நடனம்' மேலும் பல ஒத்திகைகள் நடந்திருந்தால் சிறந்து விளங்கியிருக்கும்.

சங்கத்தின் துணைத் தலைவர் புறநானூறு சீனிவாசன் அமைச்சர்களை வரவேற்று சுருக்கமாகப் பேசினார். சுமார் இரண்டரை மணி நீடித்த கதம்ப நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த செயலாளர் கிருஷ்ணமூர்த்தியும் வேங்கடேசனும் பெரிதும் பாராட்டுக்குரியவர்கள். தமிழகத்தின் இரு பெரும் தலைவர்கள் தமது விழாவில் கலந்துகொண்டது தில்லி அன்பர்களுக்குப் பெரு மகிழ்ச்சி. மாநில முதலமைச்சர் காமராஜர் வர இயலாமற் போயிற்று கடைசி நிமிஷ மாறுதல்களால்.

## தியாகையர் இசை விழா

'சாந்தியும் சத்யமும் மங்கும் சமயம் நாட்டில் அவதரிக்கும் மகான்கள் வரிசையைச் சேர்ந்தவர் தியாகையர்' என்று உப ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார். தில்லி விநய நகரில் ஷண்முகானந்த சபையின் ஆதரவில் மூன்று நாள் இசை விழா வைத்து அவர் அஞ்சலி செலுத்தினார். 'அன்பையும் கருணையையுமே அடிப்படையாகக்கொண்ட வழியைத் தமது பாக்களில் வடித்து அமரத்வம் அடைந்த பெரியார்' என்று அவர் சொன்னார். தியாகையர் கிருதிகள் மனிதனின் ஆத்மீக வளர்ச்சிக்கு உதவவல்லவை. மனித உள்ளத்திலிருந்து



திருவொற்றியூர் மாதர் சங்க நிதிக்காக 8வ கோகலே மண்டபத்தில் குமாரி ஹேமா சுந்தரராஜன் பரத நாட்டியம் ஆடினார். டில்லி நாட்டிய கலாலய மாணவி இவள்.

மட்டமான உணர்ச்சிகளை அகற்றி புனிதப்படுத்தும் தரம் கொண்டவை என்றும் உப ராஷ்டிரபதி தமது உரையில் கூறினார்.


விநய நகரில் திறந்த வெளி ஒன்றில் பெரியதொரு அலங்காரப் பந்தல் ஒன்று அமைத்து மூன்று நாள் நிகழ்ச்சிகளையும் சபையினர் ஜாம் ஜாமென்று நடத்தினர். முதல் நாள் நிகழ்ச்சியில் பாடிய சுலோசனாவை சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்; சேங்காலிபுரம் ராமமூர்த்தியும் சென்னையைச் சேர்ந்த சிறுவன் சாமிநாதன் முதலானோரும் இசை நிகழ்ச்சியில் இடம் பெற்றிருந்தனர். ஞாயிறன்றும் திங்கட்கிழமையன்றும் ஏராளமான பேர் தியாகையர் கிருதிகளைப் பாடி இசைக் கலையில் தமக்குள்ள ஈடுபாட்டைக் காட்டினார்கள். மற்றும் கர்நாடக சங்கீத சபையின் ஆதரவிலும் இசைக் கச்சேரிகள் வரிசையாக நடந்தேறின. தில்லி பஜனை சமாஜம் நான்கு நாள் விழா ஒன்றை சிறப்புற நடத்தியது; தியாகையர் கீர்த்தனைப் போட்டிகள் பல நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கினர். வயதிற்குத் தகுந்தபடி ஐந்து பிரிவுகளாக பிரித்து விரிவான போட்டி நடத்தினர். வி. எஸ். கோமதியும், ராஜலட்சுமியும் 4, 5-ம் பிரிவுகளில் முதற் பரிசைத் தட்டிக்கொண்டு போனார்கள். ஓ. எஸ். தியாகராஜன், என். பாரத்வாஜன், டி. எஸ். ஜயம், வி. பாலசுப்ரமண்யம், பி. சாந்தா, ஆர். கே. கீதா ஆகியோர் முதற் பரிசுகள் வாங்கியவர்கள். தில்லியின் பிரசித்தி பெற்ற பாடகிகளும் பாடகர்களும் நான்கு நாள் விழாவில் இடம் பெற்றிருந்தனர். நல்ல ஞானமும் பயிற்சியும் உள்ள பலருக்கும் இதில் இடமளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### சுடர்-பாரதி மலர்

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் இலக்கிய ஆண்டு மலரான 'சுடர்' இம்முறை பாரதி மலராக வெளி வந்திருக்கிறது. கம்பீரம் மிகுந்த வீரக் கவிஞர் மூவர்ணங்களில் காட்சி தரும் அட்டையுடன் கூடிய இந்த 174 பக்க மலர் சுவையானதென்றே சொல்ல வேண்டும். பாரதியார் பற்றி பல அரிய கட்டுரைகள் வெளியாகியுள்ளன. அறிஞர் சுப்புசுவாமியின் 'பாரதியும் விஞ்ஞானமும்', டாக்டர் ப. நடராசனின் 'தற்காலத் தமிழ்க் கவிதை', 'பாரதியின் வாழ்க்கையில் சில சம்பவங்கள்', கமலையாவின் 'நாட்டுக்கொரு புலவன்' முதலானவை சிறப்பானவை. சித்திர பாரதியின் ஆசிரியரும் தமிழ்ச் சங்கத்தில் அடிநாளிலிருந்து குன்று ஆர்வங்கொண்டு வந்துள்ள ரா. அ. பத்மநாபன் பாரதி பற்றிய அபூர்வ படங்களையும் கடிதங்களையும் கொடுத்து உதவியுள்ளார். சுடம் உண்மையிலேயே நல்லதொரு பாரதி மலர்.

நல்ல சிறு கதைகள், மனவியல் கட்டுரைகள் முதலியனவும் இதில் இடம் பெறுகின்றன. புலவர் ஆறுமுகம், கஜமுகன், சுந்தா, புறநானூறு, தான், காலன், ஸ்ரீமதி கனகசௌந்தரி முதலான அன்பர்கள் விஷய தானம் செய்துள்ளனர். தி. கோ. அனந்தசுவாமியை நிர்வாக ஆசிரியராகக் கொண்ட இந்த மலர் இம்முறையும் மிகச் சிறப்பாக உருவாகியுள்ளது.


## உங்கள் எதிர்காலம் - 1961



உங்கள் பெயர் விலாசத்துடன் ஒரு புஷ்பத்தின் பெயரையும், கார்டில் எழுதி எங்களுக்கு அனுப்பிவையுங்கள். உங்களுக்கு ரூ. 1-4-0 செலவில் (போஸ்டேஜ் தனி) 12 மாத வருங்காலத்தில் ஏற்படக்கூடிய குறிப்புகளை முக்கியமாக வியாபாரத்தில் லாப, நஷ்டம், உத்தியோக உயர்வு, வேலையில் மாற்றம், பிறப்பு, திருமணம், உடலிலுள்ள நோய்கள் மற்றும் நக்ஷத்திரங்களின் பார்வையினால் ஏற்படும் தீமைகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஆலோசனைகளையும் அனுப்புகின்றோம். ஒரு முறை பரீட்சித்துப் பார்த்தால் உண்மை அறிவீர்கள்.

**SRI KRISHNA JYOTISH ASHRAM,** Post Box No. 63, (SWM), JULLUNDUR CITY.


அத்தியாயம் 31




பூம்புகார் நாட்டின் எழில் மங்கையான சுமதிக்குப் பாண்டிய நாட்டில் முடிய வேண்டிய வேலைகள் இன்னும் முற்றும் முடியவில்லை. இரண்டொரு அலுவல்கள் அவற்றில் முக்கியமாக எஞ்சியிருந்தன. அவற்றைக் கவனித்து முடித்தாலே அவள் தன்னுடைய நாட்டுக்குத் திரும்பிவிடலாம். ஆனால் அவை எப்போது, எப்படி நிறைவேறும் என்பதுதான் அவளுக்கே விளங்கவில்லை.

அருந்திறல் அமைச்சராலும் அருள் நிறைத் தாபதர் புத்த தத்தராலும் ஆகாத காரியம் என்ன இருக்கிறது? அவள் கேவலம் தனியாக வந்து எதைச் சாதித்துவிட எண்ணினாள்? வந்தது முதல் கிட்டத்தட்ட இந்த இரண்டு வாரகாலமாக அவள் செய்து முடித்தவைதான் என்ன?

பாண்டிய நாட்டில் சமண சமயம் ஆழ வேரூன்றியிருப்பதைத் தான் அவள் கண்டாள். சங்கத்தை நிறுவியிருந்த வச்சிர நந்தி தோற்றத்தில் மட்டுமல்ல; உள்ளத்திலும் உறுதிபடைத்தவராக இருந்ததுடன் நாட்டின் அகவாழ்விலும் புறவாழ்விலும் சமணசமயத்தின் கோட்பாடுகள் பிரிக்கமுடியாதபடி கலந்திருக்கும்படியும் நிலைநாட்டியிருந்தார். சமண சங்கம் சர்வவல்லமை பொருந்தியதாகத் திகழ்ந்தது. பலவகை மக்களும் அதற்காக உயிர்விடவும் சித்தமாக இருந்தார்கள். நாளுக்குநாள் சங்கத்தின் செல்வாக்கும் புகழும் ஓங்கி வந்தன. மேகங்கள் கவிந்த மாமலைபோல அது வெகுதூரம் பரவியும் உயர்ந்தும் நின்றது.

பாண்டிய நாட்டின் அரசு மரபில் வந்த வலஞ்செழியனுக்கு நாட்டு மக்களிடையே கணிசமான அளவுக்கு ஆதரவும் பக்கபலமும் இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் சக்தி பொருந்திய திகம்பர சங்கத்தை எதிர்த்து வெற்றிபெறும் நம்பிக்கை அவனுக்கே இல்லை.

வச்சிர நந்தியின் செயல் திறமை பலவாறுகவும் மகத்தானதாகவும் இருந்தது. எப்போதும் கூட இருப்பவர்களே அவருடைய ஆற்றலைக் கண்டு பிரமித்துப் போனார்கள். நாலுவிதமான உபாயங்களையும் அவர் கையாண்டார். மதுரை மக்களின் உள்ளத்தில் அவர் நிலையான இடத்தைப் பெற்றிருந்தார். பௌத்த சமயத்தைத் தழுவிய பூம்புகார், சமணம் தழைத்த மதுரைக்கு முதல் வைரி என்று அவர் திடமாகப்

பேசினர். புகழ் வாய்ந்த மதுரை பூம்புகாருக்கு அடங்கிய அரசாக இருப்பது அவமானம் என்ற உணர்ச்சியை அவர் வளர்த்து வந்தார். 'அரசன் சமண சமயத்தைத் தழுவ வேண்டும்; அல்லது அவன் பிடியிலிருந்து மதுரை விடுபட வேண்டும்' என்று அவர் முழங்கினர். அந்த முழக்கம் மந்திரம்போல் மக்கள் மனத்திலே ஏறியது. பற்பல துறையிலுள்ளவர்களும் இந்த ஒரு மந்திரத்துக்குக் கட்டுப்பட்டுத் தங்கள் உடல், பொருள், உயிர் மூன்றையும் முன்வைக்கச் சித்தமாக இருந்தார்கள்.

இப்போது வச்சிர நந்தியின் விரலசைப்புக்குப் பாண்டிய நாட்டுப் படையே பணிபுரியக் காத்திருந்தது. செல்வரும் வறிஞரும் இளைஞரும் முதியோரும் அனைவருமே மதுரையின் எதிர்கால வாழ்வு அவர் கையில் அடங்கியிருப்பதாக எண்ணினர்கள். சமண சமயத்தில் அற்புதங்கள் விளைந்தன. இலக்கியம் தழைத்தது. இன்னேரன்ன பிற கலைகளும் தொழில்களும் பெருகின. இத்தனை பெருமையும் வீரமும் படைத்த பாண்டிய நாடு, பௌத்த சமயத்தைத் தழுவிய சோழ நாட்டுக்கு அடங்கியா வாழ்வது?

சுமதி இந்த நிலையைத்தான் கண்டாள். கேவலம் ஒரு பெண் என்ன செய்துவிட முடியும்? ஆயினும் அவள் நம்பிக்கையைத் தளர விடவில்லை. ஏதோ ஒரு குறிக்கோளுடன் அவள் பணியாற்றி வந்தாள். பாண்டிய நாட்டில் எந்தக் கணம் கொந்தளிப்பு உண்டாகுமோ என்று தெரியாத நிலையில் அவள் உள்ளத்தில் புதிய மாறுதல் ஒன்று ஏற்பட்டிருப்பதை உணர்ந்தாள்.

வச்சிரநந்தியை வென்றுவிட்டால் பாண்டிய நாட்டுக் குழப்பத்தை வெகு எளிதில் அடக்கிவிடலாம். ஆனால் வச்சிர நந்தியை வெல்வது எப்படி? அதற்கு இரண்டு வழிகள் இருந்தன: ஒன்று வலஞ்செழியனை கொண்டு பகையை வளர்த்து, சமணப் படைகளைத் தாக்கச் செய்வது! அந்தச் சமயம் பார்த்து, சங்கத்தைக் கலைத்துவிடும்படி சடையனைக்கொண்டு முயல்வது. அடுத்தது, தந்திரமாக அந்த வச்சிர நந்தியைச் சிறைப் பிடித்துக்கொண்டு போய்விடுவது! இந்த இரண்டும் இப்போது கூடச் சாத்தியந்தான்!

ஆனால் இனி அந்தத் தந்திரமெல்லாம் பலிக்கும் என்று தோன்றவில்லை. வச்சிரநந்திக்குத் துளி ஆபத்து நேர்ந்தாலும் அது, மதுரையிலிருந்து சடையனுக்குமட்டுமல்ல, புகாரிலிருந்த அரசனுக்கும் தீங்கு செய்யக் கூடியது என்று தோன்றியது. மக்கள் கொதித்தெழுந்தால் அதற்கு முன்பாக எந்தத் தந்திரம்தான் பலிக்கும்?

இந்தக் காரணத்தை முன்னிட்டுத்தான் அவள் முதலில் போட்ட திட்டத்தை மாற்றிக்கொள்ள நேர்ந்துவிட்டது. செங்கணன் மூலம் அனுப்பிய செய்தியை உரிய இடத்தில் சேர்ப்பதில் அவளுக்கு இப்போது அக்கறையில்லை. அதை யாரிடம் சேர்ப்பிக்க வேண்டுமோ அங்கே போய்ச் சேராமல் இருப்பதே நல்லது என்று தோன்றியது. ஏனெனில் அதனல் அவருடைய உயிருக்கே ஆபத்து நேர்ந்துவிடக் கூடும். அது அந்த ஒரே உயிரோடு போகிற விஷயமுமல்ல. பல உயிர்களுக்கு ஆபத்து வந்துவிடும். அரசுக்கே தீங்கு நேரும்;




எல்லாவற்றுக்கும் மேலாக, அவளுக்கு மிகவும் புனிதமாக இருந்த சமயத்துக்குப் பெரும் தீங்கும் இழுக்கும் நேர்ந்துவிடும். அதனல்தான் செங்கணனிடம் கொடுத்த தாயத்தை அவள் திரும்பப் பெற்றுக்கொண்டாள். அது கை மாறிவிடப் போகிறதே என்ற கவலையோடு ஓடி வந்தது எவ்வளவு நல்லதாயிற்று!

அந்தத் தாயத்துக்குள்தான் அவள் எழுதியனுப்பிய செய்தி இருந்தது. அதை ஓலைச் சுருளாகச் சுருட்டி அதனுள் அடக்கியிருந்தாள். செங்கணன் மூலமாக அது மதுரைக்கு வருகிறது என்பது எப்படியோ வச்சிரநந்திக்குத் தெரிந்துவிட்டதே!

அதைப்போலவே வச்சிரநந்தி அதை எதிர்பார்த்திருப்பதும் சுமதிக்கு எட்டிவிட்டது! அந்தத் தாயத்து யாரிடம் போய்ச் சேருகிறது என்பதுவரையில் பொறுத்திருந்து பார்க்க அவர்கள் விரும்பவில்லை. அதில் அடங்கியிருந்த செய்தியை அறிந்துகொண்டாலே எல்லாம் விளங்கிவிடும் என்று அவர்கள் நம்பினர்கள். உண்மையும் அதுதான். கூடவே இருந்து யாரோ சதி செய்து வருவதாக அவர்களுக்குப் பட்டுவிட்டது. ஆனல், யார் அவர்? அதுதான் அவர்களுக்கு விளங்கவில்லை. எப்படிப்பட்ட எதிர்ப்பையும் அவர்கள் தாங்கத் தயாராக இருந்தார்கள். எந்தச் சூழ்ச்சியையும் பலிக்காமல் செய்யும் சாமர்த்தியம் அவர்களுக்கு இருந்தது. ஆனல், இந்த ஒன்றை மட்டும் அவர்களால் கண்டறிய முடியவில்லை.

சுமதி மிகவும் சாதுரியமாகச் செங்கணனிடமிருந்த தாயத்தை வாங்கிக்கொண்டுவிட்டாள். அதனுள்ளிருந்த ஓலையைச் சமயம் பார்த்து அனுப்பிவிடத்தான் முதலில் எண்ணியிருந்தாள். ஆனல், எதிரிகளின் பலம் தெரிந்ததும் அவளுடைய யோசனை மாறிவிட்டது. அதனல் எதிர்பாராத புது விளைவுகள் உண்டாகும் என்று அவளுடைய புத்திக்குப் பட்டது. எனவே, அந்தத் தாயத்தை முதலில் எண்ணியபடி அனுப்பாமல், உள்ளேயிருக்கும் ஓலையைத் தீயிட்டுக் கொளுத்திவிடத் துணிந்தாள்.

முதல் நாள் இரவுதான் அவளுக்குச் சமயம் வாய்த்தது. அன்று சேடியரையெல்லாம் அனுப்பிவிட்டு, சயன மாளிகை





உபாத்தியாயர்:- "கர்நாடக யுத்தம்" என்பதைப்பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்....

பையன்:- அனுகுண்டோ, ஆகாய விமானமோ இல்லாமல் ஒருவரை ஒருவர் சிண்டைப் பிடித்துக்கொண்டு பழங்கால முறைப்படி செய்யப்படும் யுத்தத்திற்கு "கர்நாடக யுத்தம்" என்று பெயர்!.

யின் கதவைத் தாளிட்டுக் கொண்டு தாயத்தை எடுத்துப் பார்த்தாள். கூரிய ஆயுதத்தால் அதைப் பெயர்த்து எடுத்தபோது அவள் திடுக்கிட்டாள். உள்ளே சுருட்டி வைக்கப்பட்டிருந்த ஓலைச் சுருளைக் காணவில்லை.

அவளுக்கு இது பேரிடியாக இருந்தது. ஆயினும் அவள் மனம் இடிந்துபோகவில்லை. சரசரவென்று வேறு ஓர் ஓலைச் சுருளை எடுத்து, அதில் எழுத்தாணி





கொண்டு வேறு ஏதோ எழுதினாள். பின்னர் அதைச் சுருட்டித் தாயத்தில் திணித்து அடைத்து, முன்போல் மூடிவிட்டாள்.

இவ்வளவு எல்லாம் செய்தாலும் அவள் பயம் தணியவில்லை. எந்தச் சமயத்தில் எத்தகைய ஆபத்து விளையுமோ என்று அவள் துணிந்தவளைப்போல் தான் தோன்றினாள். பிறகு அதை அரண்மனைக்கு எடுத்துச் சென்று, சேடி மதுரம் இருக்கும் சமயம் வேண்டுமென்றே அதைச் சடையனிடம் ஒப்படைத்து விட்டு வந்தாள். அவள் எதிர் பார்த்ததுபோலவே சமண வீரர்கள் அரண்மனையில் யாரும் இல்லாத சமயம் பார்த்து அதை அபகரித்துச் செல்ல வந்துவிட்டார்கள். அபகரித்துக்கொண்டும் போய்விட்டார்கள். பாவம், இப்பொழுது யார் ஏமாந்தார்கள்! உண்மையான ஓலையைச் சங்கத்தார் முன்பே எடுத்துச் சென்றிருந்தால் மறுபடியும் அந்தத் தாயத்தை எடுத்துச் செல்ல முயல்வார்களா? ஆகவே, அது வச்சிரநந்தியின் கைக்குப்



போய்ச் சேரவில்லை என்பதை அவளால் ஊகிக்க முடிந்தது. அப்படியானால் அது எங்கே போயிற்று? யார் அதை எடுத்துச் சென்றிருப்பார்கள்?

சுமதிக்கு வலஞ்செழியன் மீது சந்தேகம் சென்றது. முயன்றிருந்தால் அவன் அதை அபகரித்துச் சென்றிருக்கக் கூடும். ஆனால் அவனும்தான் இப்போது திகம்பரர்களிடம் சிறைப்பட்டுவிட்டானே?

செங்கணான் எங்கே போனான்? இந்தக் கேள்விதான் அவளை அடுத்தபடியாகக் குடைந்தது. நான்கு நாட்களுக்கு மேலாக அவன் இருந்த இடமே தெரியவில்லை. அவனைக் கடைசியாக அவள், வேடர் தலைவனுடைய மலையடிவாரத்தில் கண்டதுதான்; அதற்குப் பிறகு அவன் எங்கே சென்றான் என்றே கண்டுபிடிக்க முடியவில்லை. வேடர் தலைவனுக்கும் அவன் போன இடம் தெரியவில்லை.

'சித்திரக் குள்ளா! சோழ இளவரசர் எங்கேடா?' என்று துக்கமும் கோபமும் தாளாமல் கேட்டாள் சுமதி. எதற்கும் கலங்காத அவள் இப்போது வெகுவாகக் கலங்கிவிட்டாள் என்பதைக் கண்டான் சித்திரக் குள்ளன்.

'எங்கும் அவரைத் தேடியலைந்துவிட்டேன்! காணவில்லை!' என்றான் சித்திரக் குள்ளன்.

'வேடர் கூட்டத்தோடு கலந்து மாறு வேடம் பூண்டு மறைந்திருப்பாரோ?'

'இல்லை; நிச்சயமாக இல்லை; அவர் மீது கருத்தைப் பறிகொடுத்துவிட்ட அந்த வேட்டுவ மகளையே கேட்டுவிட்டேன். அவளும் அவரைத் தேடிக்கொண்டுதான் இருக்கிறாள்!'

இந்தச் செய்தியைக் கேட்டதும் சுமதிக்கு ஒரே பொறாமையாக இருந்தது. தலை போகிற முக்கியமான விஷயங்களைவிட இந்தப் பொறாமைதான் அவளைப் பெரிதும் வாட்டியது. தன்னுடைய உள்ளத்தில் இத்தனை பொறாமை உணர்ச்சி உண்டாவானேன் என்று அவளுக்கே புரியவில்லை.

ஒப்பற்ற எழிலும் மதிவன்மையும் படைத்த சுமதி இளம் பிராயம் முதலே புத்த சமயத்தில் பற்றும் ஈடுபாடும் கொண்டவள். இள மங்கையருக்கு உவப்பான அலங்காரப் பொருள்களை அவள் அதன் காரணமாகப் பெரிதும் விலக்கி, ஒதுக்கி வந்தாள். அவசியம் என்று நேர்ந்தாலொழிய அவள் அரச மாளிகைக்குரிய ஆடம்பரமான எந்தப் பொருளையும் அணிவதில்லை; தீண்டுவதுமில்லை. ஆனால், பாண்டிய நாட்டுக்கு வந்து செங்கணானைக் கண்டதுமுதல் அவளுடைய உள்ளப் போக்கில் பெரும் மாறுதல் தென்பட்டது. அது வேட்டுவ குலத்தார் வசிக்கும் இடத்துக்குப் போய், செங்கணானை மீட்டு வந்த பிறகு மேலும் வளர்ந்துவிட்டது. அவள் மதுரைக்கு வந்த காரியத்தையே மறக்கும் அளவுக்குப் போய்விட்டது.

அவள் இதன் விளைவுகளை எண்ணிப் பார்க்க முயன்றாள். ஆனால், மனம் எதிலும் பதிய மறுத்தது. அரசியல் குழப்பங்களை எண்ணி அவள் சினந்தாள். அதில் அகப்பட்டுக்கொண்டுவிட்டதற்காக அவளுக்குத் தன் மீதே கோபம் கோபமாக வந்தது.

ஒவ்வொரு கணமும் அவள் செங்கணானைப்பற்றிய செய்தியை எதிர்பார்த்திருந்தாள்.



தாயத்திலிருந்த ஓலையைவிட அவனைப்பற்றிய விவரங்களைக் கேட்கவே அவள் துடியாகத் துடித்தாள். தன்னுடைய உணர்வின்றி அவள் ஆடவர் உள்ளத்தைக் கவரும் ஆடையணிகளையும் அலங்காரப் பொருள்களையும் புனைந்துகொண்டாள்.

அவளுடைய உள்ளத்தில் மூண்டெழுந்த கோபமெல்லாம் சோழக அரண்மனையிலுள்ள சண்பகவல்லியின் மீது திரும்பியது. அவள்தான் தன்னிடமிருந்த ஓலையையும் தன் உள்ளத்தைக் கவர்ந்த செங்கணானையும் ஒருங்கே அபகரித்துச் சென்றிருக்கிறாள் என்ற முடிவுக்கு வந்தாள். அதை எப்படிக் கண்டறிவது?

சுமதி சிந்தனையில் ஆழ்ந்திருந்தபோது சித்திரக் குள்ளன் இரைக்க இரைக்க ஓடி வந்தான். அவனைப் பார்த்ததும், 'நேற்று முதலே உன்னைக் காணோமே! எங்கேடா போயிருந்தாய்?' என்று எரிந்து விழுந்தாள் அவள்.

'கொற்கைப் பட்டணத்துக்கு!'

'அங்கே என்ன உனக்கு?'

'அங்கேதான் நம் இளவரசரைக் கண்டேன்!'

'என்ன அது? இளவரசரையா? எந்த இளவரசரை? சோழ இளவரசரையா சொல்கிறாய்?'

'ஆமாம், ஆமாம்!'

'ஆனால், எங்கும் தேடிப் பார்த்துவிட்டதாகச் சொன்னாயே நேற்று!'

'நேற்று மாலை அப்படிச் சொன்னேன்? ஆனால், இரவுதானே அவரை நான் பார்த்தது!'

'அவர் என்ன சொன்னார்?'

'அவரை நான்தான் பார்த்தேனே தவிர, என்னை அவர் பார்க்கவில்லை!'

## காந்தி வாக்கு

—x—

நான் கருதும் ராம நாமத்துக்கும், யந்திர மந்திரங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்று நான் பயமில்லாமல் சொல்ல முடியும். உள்ளத்திலிருந்து ராம நாமத்தை வருவிப்பது, இணையற்ற ஒரு சக்தியிடமிருந்து உதவி பெறும் காரியமே ஆகும். அதனோடு ஒப்பிடும்போது அணுகுண்டு ஒன்றுமே இல்லை. இந்தச் சக்தி எல்லா வேதனைகளையும் போக்கக்கூடியது. ராம நாமம் உள்ளத்திலிருந்து வர வேண்டும் என்று சொல்வது சுலபம் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், நடைமுறையில் அது கைகூடுவது மிகவும் கஷ்டம். ஆனாலும், மனிதனுடைய மிகப் பெரிய சொத்து அதுதான்!

'அப்படியென்றால்—?'

'அவர் கண்ணில் நான் படவில்லை என்றுதான் பொருள்!'

'ஏண்டா முட்டாளே...'

'பொறுங்கள் தேவி, அவரை நான் பார்த்த இடத்தில் அவருடைய கண்களில் நான் படுவது உசிதமல்ல என்றுதான் ஒளிந்துகொண்டேன்!'

சுமதி அவன் மேலும் சொல்லட்டும் என்று அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

'தீர்த்த மண்டபத்தில் அழகான பெண்ணொருத்தி அவருக்காகக் காத்திருந்தாள் என்று தோன்றியது. அவர் குதிரையில்

வந்து இறங்கி அவளோடு வெகு நேரம் உரையாடிக்கொண்டிருந்தார். வெள்ளி முளைக்கும் சமயம் வரையில் அவர்கள் வெகு தீவிரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு அவர் விருட்டென்று குதிரைமீது பாய்ந்து, வந்த வழியே வேகமாகப் போய்விட்டார். நான் அவரை விட்டுவிட்டு அந்தப் பெண்ணைப் பார்த்துக்கொண்டு நின்றேன். அவள் கண்களில் கண்ணீர் கசிவதையும் கண்டேன். பிறகு அவள் மெல்ல மணலிலே இறங்கி நடக்கத் தொடங்கினாள். கரையை அடுத்த காரை மண்டபத்துக்கு அருகே வந்ததும் அவள் விக்கித்து நின்றாள். காரணம் அங்கே ஒரு தலை மழித்த சாமியார் நின்றுகொண்டிருந்ததுதான். அவரைக் கண்டதுமே அவள் நிலத்தில் விழுந்து அவரை வணங்கினாள். நான் மறைந்துகொள்ள எண்ணுவதற்குள் அந்தச் சாமியார் என்னைப் பார்த்துவிட்டார். அந்தப் பெண்ணை விட்டுவிட்டு, அவர் என்னைப் பிடிக்க முயலவே நான் ஓடோடி வந்துவிட்டேன்!' என்று இடையிலிருந்த கத்தி ஒன்றை வெளியே எடுத்துக் காட்டினான்.

'இது ஏது கத்தி?' என்று உள்ளம் உடைந்த குரலில் கேட்டாள் சுமதி.

'வைகைக் கரையில் ஒரு பெண்ணுடைய உயிரைக் குடிக்க வந்த கத்தி! அதை எடுத்துக்கொண்டு ஓடி வந்துவிட்டேன்!' என்று முடித்தான் சித்திரக் குள்ளன்.

'யார் அந்தப் பெண்?'

'அவளா? அவளால்தான் எனக்கு உளவு கிடைத்தது. சோழ இளவரசரை அவள் அடிக்கடி சந்திப்பதாகத் தெரிந்துகொண்டேன்...'

சுமதியின் முகம் சுண்டிச் சிவந்தது.

'அவள் பெயர் என்ன?'

'அரண்மனைச் சேடி. அங்கயற்கண்ணி!'

'அழகான பெண் என்று சொன்னாயே, அவள் யார்?'

'சண்பகவல்லி! திகம்பர சங்கம் கூடும் மாளிகைக்கு அவள் தான் உரியவள். அவள் தாய் பெருந்தேவிதான் சமண சங்கத்துக்கு அந்த மாளிகையை ஒப்படைத்திருப்பவள்!'

சுமதிக்கு அதற்குமேல் பேச்சே ஓடவில்லை.

(தொடரும்)




"எப்படி சார் கண்டுபிடிச்சீங்க, இது நம்ப நாராயணன் வீடு என்று?"

'நாராயணன் வீட்டுக்கு நாலு பக்கம் வாசற்படின்னு நீங்க கேள்விப் பட்டதில்லையா?"





# யானை தன் தலையில்..

இந்து

தனஞ்சயா பப்ளிஷிங் ஹவுஸ் மானேஜர் அறையிலிருந்து 'கிணுங்'கென்று மணியோசை கேட்டது.

பிறந்தகம் சென்றுள்ள தனது சகதர்மிணிக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருந்த தலைமைக் குமாஸ்தா, கடிதத்தை அப்படியே வைத்துவிட்டு, மானேஜர் எதிரில் போய் நின்றார்.

'நாம் கொஞ்ச நாட்களுக்கு முன் சம்ஸ்கிருத நோட்ஸ் ஒன்று பிரசுரம் செய்தோமே. இதுவரை அந்த ஆசிரியருக்கு இதற்காக எவ்வளவு பணம் சேர்ந்திருக்கிறது?' என்று கேட்டார் மானேஜர்.

'பதினேழரை ரூபாய்' என்றார் தலைமைக் குமாஸ்தா.

'அவருக்கு எவ்வளவு பேசியிருக்கிறது?'

'தொண்ணூற்றைம்பது ரூபாய்.'

'பதினேழரை ரூபாய்தான் சேர்ந்திருக்கிறதா? நன்றாகத் தெரியுமா?'

'அதோ அந்த ஆசிரியரே வந்திருக்கிறார். 'அவசரமாகச் செலவுக்கு வேண்டியிருக்கிறது. ஏதாவது கொஞ்சம் பணம் கொடுத்தால் தேவலை' என்று கேட்டார். அதற்காக அவருடைய கணக்கைப் புரட்டிப் பார்த்தேன். முதலில் ஒரு பத்து ரூபாய். அப்புறம் ஒரு ஏழரை ரூபாய். ஆக பதினேழரை ரூபாய்தான் சேர்ந்திருக்கிறது.

'அவர் போய்விட்டாரா? இருக்கிறாரா?'

'அவ்வளவு சீக்கிரத்தில் போய்விடுவாரா? கையில் பணமே இல்லை. டவுனுக்கு பேப்பருக்குப் பணம் கொடுத்தனுப்ப வேண்டும். அதற்கே பணம் இல்லை. வெளியிலிருந்து ஏதாவது பணம் வந்தால் பார்க்கலாம். அதுவும் மாலை நாலு மணிக்குமேல்தான் தெரியும் என்று, இல்லை என்று சொல்வதற்குப் பதிலாக ஒரு தினுசாகச் சொல்லி வைத்தேன். பேர்வழி அதையும் பார்த்துவிட்டுத்தான் போவார் போலிருக்கு. என் அறையில்தான் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்' என்றார் தலைமைக் குமாஸ்தா.

'அப்படியானால் உடனே அவரை இங்கே வரச் சொல்லும்' என்றார் மானேஜர்.

தலைமைக் குமாஸ்தா சென்றார். மானேஜர் எதிரே, ஆசிரியர், ஒரு நமஸ்காரம் போட்டுத்

தனது பல்லையெல்லாம் காட்டிக் கொண்டு நின்றார்.

'எங்கே வந்தீர்?' என்றார் மானேஜர்.

'அவசரமான ஒரு செலவு. அதற்குக் கொஞ்ச பணம்...'

'நோட்ஸ் போடுவதென்பது எவ்வளவு பொறுப்பானதொரு காரியம் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?'

'சந்தேகமென்ன. பெரிய பொறுப்பல்லவோ அது!'

'அது தெரிந்துதான் ஏற்றுக் கொண்டீராக்கும் அந்தப் பொறுப்பை?'

ஆசிரியருக்கு இதன் உட்பொருள் அவ்வளவு சீக்கிரத்தில் விளங்கவில்லை. ஆகவே சிறிது மௌனம் சாதித்தார்.

'ஏதோ வறுமையின் கொடுமை. செலவுக்குப் பணம் இல்லையென்றால், யாசகம் கேட்டு வாங்கிக் கொண்டு போகலாம். இந்த



'என்னமோ, நீதான் அஜந்தா கொண்டை போட்டுக் கொண்டிருப்பதாக பீத்திக் கொண்டாயே! பார், நான் திருப்பதி கொண்டை போட்டுண்டிருக்கேன்!'

மாதிரி, தெரியாத விஷயத்தில் தலையிட்டுக்கொண்டு, எங்களை சந்தி சிரிக்க வைக்கக் கூடாது. உம்மால் எங்களுடைய தொழிலுக்கு எத்தனை பெரிய ஆபத்து வந்திருக்கிறது தெரியுமா?' என்றார் மானேஜர் அவருடைய முகத்தில் கோபக்கனல் கொதித்தெழுந்தது.

ஆசிரியர் இன்னதென்று புரியாமல் நின்றுகொண்டிருந்தார்.

'இந்தாரும் பாரும் உம்முடைய லட்சணத்தை' என்று கையில் தயாராய் வைத்திருந்த ஒரு கடிதத்தை, ஆசிரியர் பக்கம் வீசியெறிந்தார் மானேஜர்.

நடுங்கும் கைகளுடன் அதை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார் ஆசிரியர். ஒருவாறாகக் கடிதத்தைப் படித்து முடித்தார். அதிலிருந்த விஷயங்களெல்லாம்கூட அவருக்கு அவ்வளவு அதிர்ச்சியைத் தரவில்லை. கடைசியில் போடப்பட்டிருந்த கையெழுத்துதான் அவரை ஒரு உலுக்கு உலுக்கியது.

கடிதத்தின் சாராம்சம் இதுதான்: 'தனஞ்சயா பப்ளிஷிங் ஹவுஸ் மானேஜருக்கு மிகவும் நெருங்கிய நண்பர் ஒருவர்—பெரிய சம்ஸ்கிருத வித்வான்—எழுதியுள்ள கடிதம் அது. அதில் இந்த ஆசிரியர் எழுதியுள்ள நோட்ஸைப்பற்றத்தான் எழுதியிருந்தார். அதிலுள்ள பிழைகளையெல்லாம் திரட்டி ஒரு பெரிய ஜாப்தா கொடுத்திருந்தார். பிறகு கடிதத்தைப் பின்வருமாறு முடித்திருந்தார்:—'இவ்வளவு பெரிய பொறுப்பான ஒரு காரியத்தை இவ்வளவு அறிவு சூன்யமான ஒருவரிடம் எப்படி ஒப்படைத்தீர்கள் என்று எவ்வளவு நேரம் யோசித்தாலும் எனக்குப் புரியவில்லை. என்னிடம் ஒரு





வார்த்தை சொல்லியிருந்தால், குறைந்த 'ரேட்டிற்கு' நல்ல பாண்டித்யம் உள்ள ஒருவரை உங்களிடம் அனுப்பியிருப்பேன். சொல்பம் கிடைத்தால்கூட அதையே பெரிய பாக்கியமாகக் கருதக்கூடிய, வேலையே இல்லாத வித்வான்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அடுத்த நோட்ஸுக்காவது எனக்குத் தெரிவியுங்கள். தகுதியுள்ள ஒருவரை [illegible]கிறேன்' என்று முடிக்கப்பட்டிருந்தது.

இதெல்லாம்கூட ஆசிரியரை அசைக்கவில்லை. ஸ்ரீ ராமசர்மா என்ற கடிதத்தின் முடிவில் இருந்த அந்தப் பெயர்தான் ஆசிரியரைப் பிழிந்தெடுத்து விட்டது.

கடிதம் எழுதியுள்ள அந்த நபர் வேறு யாருமில்லை. இந்த ஆசிரியரின் ஸாக்ஷாத் மாமாவேதான்!

இப்படிக்கூட இருக்குமா என்று தானே யோசிக்கிறீர்கள்?

நடந்த விஷயம் இதுதான்:

இந்த ஆசிரியர், கிருஷ்ண சர்மா, சம்ஸ்கிருதத்தில் சிரோமணி பாஸ் செய்திருக்கிறார். உத்தியோகம் ஒன்றுமில்லாமல் சிரமப்படுகிறவர். இவரது மாமா ராம சர்மா, பெரிய வித்வான். பெரிய பதவியில் இருக்கிறார். அவருக்குப் பல பேர்களைத் தெரியும். அதிலும் தனஞ்சயா பப்ளிஷிங் ஹவுஸ் உரிமையாளர் அவருக்கு ரொம்பவும் வேண்டியவர். எங்காவது ஓரிடத்தில் தனக்கு உத்தியோகத்துக்குச் சிபார்சு செய்யும்படி தனது மாமாவைக் கேட்டுக்கொண்டார் கிருஷ்ண சர்மா. ஒன்றிரண்டு இடத்தில் சொல்லிப் பார்த்தார், ராம சர்மா. நடக்கவில்லை. தனஞ்சயா பப்ளிஷிங் ஹவுஸார் சம்ஸ்கிருத நோட்ஸுகள் 'போடுகிறார்கள்' என்றும் அதிலாவது தனக்கு ஏதாவது ஏற்பாடு செய்யுமாறும் ராம சர்மாவைக் கேட்டுக்கொண்டார், கிருஷ்ண சர்மா.

கிருஷ்ண சர்மா சிரோமணி பாஸ் செய்துவிட்டாரேயொழிய, அவருடைய ஞானத்தில் ராம சர்மாவுக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை. அத்துடன் நோட்ஸ் என்பது பொறுப்பான ஒரு காரியம். அதிலும் அதன் உரிமையாளர் தனக்கு மிகவும் வேண்டியவர். அப்படிப்பட்ட இடத்தில் கிருஷ்ண சர்மாவை சிபார்சு செய்வது அவ்வளவு யுக்தமாகப்படவில்லை ராம சர்மாவுக்கு. இதை வெளியில் சொல்

லாமல் 'பார்க்கலாம்' என்று கிருஷ்ண சர்மாவுக்கு சமாதானம் சொல்லி வைத்தார் ராம சர்மா.

மாதங்கள் பல சென்று விட்டன. ...பப்ளிஷிங் ஹவுஸ் உரிமையாளரிடம் கிருஷ்ண சர்மாவைப் பற்றி ராமசர்மா எந்தவிதமான சிபார்சும் செய்ததாகத் தெரியவில்லை.

'சரி! தன் கையே தனக்கு உதவி' என்ற நம்பிக்கையுடன் கிருஷ்ண சர்மா, தனஞ்சயா பப்ளிஷிங் ஹவுஸ் உரிமையாளரை அணுகினார். தனது யோக்யதாம்சத்தை எடுத்துக் கூறி, தனக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.



இந்த நோட்ஸ் வேலையை கிருஷ்ண சர்மாவிடம் ஒப்படைக்கலாமென்று தோன்றியது அந்த உரிமையாளருக்கு. சன்மானப்பிரச்னை வந்தது. உரிமையாளர் சொன்ன குறைந்த தொகைக்கு கிருஷ்ண சர்மா ஒப்புக்கொண்டார். அவ்வளவுதான். அந்தப் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நோட்ஸ் வெளிவந்தது. உடனே உரிமையாளர், ஒரு பிரதியை, தனக்கு மிகவும் வேண்டியவரான ராமசர்மாவின் பார்வைக்கு அனுப்பி வைத்தார். இதில் என்ன வேடிக்கையென்றால், ஆசிரியரின் பெயர் பிரபலமாக இல்லாததால் நோட்ஸில் ஆசிரியரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. தனது மாமா தன் விஷயத்தில் மிகவும் அசிரத்தையாக இருக்கிறார் என்ற கோபத்தில், கிருஷ்ணசர்மாவும் தனது இந்தப் பொறுப்பைப்பற்றி ராமசர்மாவுக்குத் தெரிவிக்கவே இல்லை.

ராம சர்மா நோட்ஸைப் பார்த்தார். ஒரே அபத்தக்களஞ்சியமாக இருந்தது. 'நோட்ஸ்' இப்படி வெளிவருவதாக இருந்தால் கிருஷ்ண சர்மாவையே சிபார்சு செய்யலாமே. அடுத்த 'சான்ஸை வது' அவருக்குக் கிடைக்கும்படி செய்யலாம். அதற்கு உபாயம் இந்த நோட்ஸிலுள்ள பிழைகளையெல்லாம் எடுத்துக் கூறினால் இந்த ஆசிரியரை உரிமையாளர் நீக்கிவிடுவார். பிறகு கிருஷ்ண சர்மாவைச் சிபார்சு செய்தால் அவரை எடுத்துக்கொள்வார் என்ற விஷமமான எண்ணத்துடன் மேற்கண்ட கடிதத்தை எழுதினார் ராம சர்மா. இப்படி யானை தன் தலையில் தானே மண்ணைவாரிப் போட்டுக்கொள்ளும் கதையாக முடியுமென்று ராமசர்மா கண்டாரா? அல்லது ராமசர்மா தனக்கு நல்லது செய்யப் போய் இப்படி முடிந்தது என்று சொன்னால் கிருஷ்ண சர்மாதான் நம்புவாரா? விஷம புத்தியுடன் செய்யும் காரியம் எங்காவது உருப்படுமோ?



# காதல் கண்களிலே இல்லை

புரட்சி எழுத்தாளர்

அ. பூவாணன்

## 33

மிகப் பெரிய பலூன் ஒன்றைப் பிடித்துக்கொண்டு வான வெளியில் பறந்துகொண்டிருந்த ஒருவன், பலூன் விரைவாக இறங்க ஆரம்பித்துக் கீழே வந்து விழுந்ததும் எப்படி அலறிக்கொண்டு எழுந்துகொள்வானோ, அப்படி அலறிக்கொண்டு அவர்களை விழித்துப் பார்த்தார் பூவேந்தன்.

இப்போது அவர் தரையில் விழுந்து கிடக்கவில்லை. அழகாக அறை ஒன்றில் படுக்கையில் படுத்துக் கிடந்தார். அவர் தலைக்குப் பின்னாலிருந்து விளக்கின் வெளிச்சம் அவர் முகத்தில் படாமல் பரவியிருந்தது. கட்டிலுக்குப் பக்கத்தில்—

வஞ்சிக்கொடி நின்றிருந்தாள்.

பூவேந்தனால் தன் கண்களை நம்பவே முடியவில்லை. அவர் எழுந்து உட்கார முயன்றார். தலையில் வலி இன்னும் வேதனையளித்துக்கொண்டிருந்தது. தலையில் விழுந்த அடி வன்மையானதுதான் என்பது உறுதியாகிவிட்டது பூவேந்தனுக்கு!

'ஏன் எழுந்திருக்கிறீர்கள்? உடம்பை அலட்டிக்கொள்ளாதீர்கள்! நீங்கள் பாதுகாப்பான இடத்தில்தான் இருக்கிறீர்கள்' என்றாள் வஞ்சிக்கொடி சிரித்துக்கொண்டே.

பூவேந்தன் தன்னைச் சுற்றிலும் பார்த்தார். அவர் வஞ்சிக்கொடியின் பங்களாவில்தான் ஓர் அறையில் படுத்துக் கிடக்கிறார் என்பது புரிந்துவிட்டது! சன்னலுக்குப் போடப்பட்டிருந்த மெல்லிய திரைகளைக் கண்டதும் அது வஞ்சிக்கொடியின் பங்களாதான் என்பது புரிந்துவிட்டது. முதலில் அவர் அந்தப் பங்களாவுக்கு செல்வரங்கத்துடன் அங்கே வந்தபோதே, பங்களாவின் சன்னல்களை மறைத்து ஒரே மாதிரியான திரைகள் போடப்பட்டிருப்பதைப் பார்த்து வைத்திருந்தார். போலீஸ் வேலைக்குப் போனதிலிருந்தே எதையும் பார்த்ததும் தன் மனத்தில் பதிய வைத்துக்கொள்ளும் பழக்கம் அவருக்குத் தன்னால் வந்துவிட்டிருந்தது. இப்போது, நாகமாணிக்கத்தின் பங்களாவுக்குச் சென்றிருந்த அவர் மீண்டும் எப்படி இங்கே வந்தார் என்பதுதான் சரியாகப் புரியவில்லை.

பூவேந்தன் ஒன்றிரண்டு ஊகங்கள் செய்து வைத்திருந்தார். அந்த ஊகங்கள் சரிதானா என்று உறுதிப்படுத்திக்கொள்ள விரும்பினார்.

பூவேந்தன் மண்டை வலியையும் பொறுத்துக்கொண்டு எழு

ந்ரு உட்கார முயன்றதும், வஞ்சிக்கொடி சிரித்துக்கொண்டே, 'சொன்னால் கேட்கமாட்டீர்கள் போலிருக்கிறது! சற்றுப் பொறுங்கள்' என்று சொல்லி அவர் முதுகுக்கு ஒரு தலையணையை முட்டுக்கொடுத்து உட்கார வைத்தாள்.

பூவேந்தன் வஞ்சிக்கொடியை ஏறிட்டுப் பார்த்தார். அவள் குனிந்து தலையணையை முட்டுக்கொடுத்துவிட்டு நிமிர்ந்தபோது, இன்பத்தைக் கிள்ளிவிடும் மெல்லிய செண்ட்டின் வாசனை பரவியது.

'வஞ்சிக்கொடி!' என்றார் பூவேந்தன்.

'எங்கேயோ போகத் திரும்பிய அவள் நின்று திரும்பிப் பார்த்தாள். அவள் பார்வை, 'என்ன சொல்லப் போகிறீர்கள், சொல்லுங்கள்' என்று கெஞ்சுவதைப் போலிருந்தது!

பூவேந்தன் மெல்லப் பேசினார்: 'வஞ்சக்கொடி! இப்போது நான் எங்கே இருக்கிறேன் என்று உங்களிடம் கேட்கப்போவதில்லை. ஏன் தெரியுமா? நான் எங்கேயிருக்கிறேன் என்பது எனக்குத் தெரியும்! ஆனால், இங்கே எப்படி வந்தேன் என்பதைமட்டும் சொன்னால் போதும்!'

வஞ்சிக்கொடி சிரித்தாள். 'நல்ல வேளை! இங்கே ஏன் வந்தேன் என்று கேட்காமல், எப்படி வந்தேன் என்றுமட்டும் கேட்டீர்களே?' என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தாள் அவள்.

பூவேந்தன் என்ன நடந்தது என்பதை நினைவுபடுத்திப் பார்த்தார். அவர் நாகமாணிக்கத்தை சந்தித்துவிட்டு, காரை நோக்கி வந்துகொண்டிருந்தபோது, எவரோ பின்னாலிருந்து மண்டையில் ஒரு போடு போட்டுவிட்டார்கள்! பூவேந்தனைத் தாக்கியது—

வேல்நம்பியைத் தவிர, வேறு எவராக இருக்க முடியும்?

வேல்நம்பி நாகமாணிக்கத்தின் பங்களாவுக்குள், புறக்கடை வழியாக நுழைந்ததை பூவேந்தன் தன் கண்களால் கண்டார். ஆனாலும்—

வேல்நம்பி, பங்களாவுக்கு வந்ததாகவே நாகமாணிக்கம் காட்டிக்கொள்ளவில்லை! அப்படியானால், வேல்நம்பியை பூவேந்தன் சந்திக்க முடியாதபடி நாகமாணிக்கம் பாதுகாக்கிறாரா?

அதுதான் பூவேந்தனுக்கு விளங்கவில்லை.

நாகமாணிக்கத்தைப் பார்த்தால் நல்லவராகத் தோன்றுகிறது. அவருடைய வரவேற்பும், பேச்சும் பூவேந்தனைக் கவர்ந்திருந்தன. வேல்நம்பி அவர் பங்களாவுக்கு வந்து, அவரை அறியாமலே அவன் நழுவிவிட்டிருந்தால், நாகமாணிக்கம் உண்மையிலேயே குற்றமற்றவராகத்தானே இருப்பார்?

வஞ்சிக்கொடி சிந்தனையுடன் சாய்ந்து உட்கார்ந்திருந்த பூவேந்தனைப் பார்த்து, 'என்ன சிந்தனையுடன் உட்கார்ந்துவிட்டீர்கள்?' என்று கேட்டாள்.

'நான் கேட்ட கேள்விக்கு இன்னும் நீங்கள் பதில் சொல்லவில்லையே' என்றார் பூவேந்தன்.

'இப்போது ஏன் உடலையும் உள்ளத்தையும் அலட்டிக்கொள்கிறீர்கள்? விடிந்ததும் பேசிக்கொள்ளலாமே!' என்றாள் வஞ்சிக்கொடி.

'விடிந்ததுமா? இப்போது என்ன நேரம்?' என்று கைக் கடிகாரத்தைப் பார்த்தார் பூவேந்தன்.

அப்போது மணி 11–30.



'எப்படியோ நேரம் ஓடிவிட்டது. நான் ஓட்டலுக்குப் போகிறேன்' என்றார் பூவேந்தன்.

'பாதி ராத்திரியாகப் போகிறது. ஓட்டலுக்குப் போய் ஓய்வு எடுத்துக்கொள்வதை இங்கேதான் படுத்து ஓய்வு எடுத்துக் கொள்ளுங்களேன். சற்றுப் பொறுங்கள். ஹார்லிக்ஸ் கொண்டு வருகிறேன்' என்று சொல்லிவிட்டு அந்த அறையை விட்டு வெளியேறிவிட்டாள் வஞ்சிக்கொடி.

பூவேந்தன், வஞ்சிக்கொடியிடமிருந்து எப்படி விடுவித்துக் கொண்டு போவது என்று சிந்தனை செய்தபடி உட்கார்ந்திருந்தார்.


நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

சிறிது நேரம் கழித்து வஞ்சிக்கொடி ஹார்லிக்ஸ் கோப்பையுடன் வந்தாள். அதை நீட்டியபடி, 'இதைக் குடியுங்கள்' என்றாள்.

பூவேந்தன் ஹார்லிக்ஸ் கோப்பையை வாங்கிப் பக்கத்திலிருந்த முக்காலியின்மீது வைத்துவிட்டு வஞ்சிக்கொடியைப் பார்த்தார். 'முதலில் நீங்கள் பதில் சொல்லுங்கள்! பிறகு நான் ஹார்லிக்ஸ் குடிக்கிறேன்' என்றார்.

'விடமாட்டீர்கள்போலிருக்கிறதே? விடிந்ததும்தான் பேசிக்கொண்டால் என்ன? நாகமாணிக்கம் என்னைத் தொலைபேசியில் அழைத்து, நீங்கள் மயக்கமுற்று விழுந்திருப்பதாகவும், எவரோ தலையில் அடித்துப் போட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும் சொன்னார்' என்றாள் வஞ்சிக்கொடி.

பூவேந்தன் சிரித்தார். 'என்னைப்பற்றி உங்களிடம் சொல்ல வேண்டும் என்று நாகமாணிக்கம்



எப்படிக் கண்டுபிடித்தார்?' என்று கேட்டார் பூவேந்தன்.

வஞ்சிக்கொடி சிரித்தாள். 'பூவேந்தன்! நீங்கள் போலீஸ் இலாகாவில் இருந்ததால், சிறிதும் ஐயத்துக்கு இடம் அளிக்க மாட்டேன் என்கிறீர்கள்! உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஆனாலும், நீங்கள் கேட்ட கேள்விக்கு உங்களுக்கே விடை தெரியும்.'

'என்ன விடை என்பதை உங்கள் வாயால் சொல்லுங்கள், வஞ்சிக்கொடி!'

வஞ்சிக்கொடி சொன்னாள்: 'நாகமாணிக்கம் அளித்த விருந்துக்கு வந்தவர்கள் அனைவரும் போய்விட்டார்கள். ஆகையால் அப்போது, நீங்கள் கொண்டு சென்ற பியட் காரைத் தவிர அங்கே வேறு எந்தக் காரும் வெளியில் நிற்கவில்லை. பியட் காரின் அருகில் நீங்கள் விழுந்திருந்ததால், அதில்தான் நீங்கள் வந்திருக்க வேண்டும் என்று நாகமாணிக்கம் முடிவு கண்டார். அந்தக் கார் என்னுடையது என்பதும் அவருக்குத் தெரியும். நீங்கள் என்னை சந்தித்துவிட்டுப் பிறகுதான் வேல்நம்பியை எப்படியாவது கண்டுபிடிக்க நாகமாணிக்கத்தைத் தேடிச் சென்றதை அவரிடம் சொன்னதால், ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று எளிதில் கூட்டுவதைப்போல் உண்மையைப் புரிந்துகொண்டார். நாம் இரண்டு பேரும் நகைகளைக் கண்டுபிடிக்க செய்துகொண்ட ஒப்பந்தத்தைப்பற்றி அறிய வாய்ப்பு இல்லை! வேல்நம்பியை எதற்காகவோ நீங்கள் தேடுகிறீர்கள், அதற்காக நான் என் காரை உங்களுக்குக் கொடுத்து அனுப்பினேன் என்பதை மட்டும் நாகமாணிக்கம் உணர்ந்துகொண்டார்!'



'வியப்பாக இருக்கிறது! வேல்நம்பியை ஏதோ ஒரு காரணத்துக்காக நான் தேடி வந்தேன்! முன் பின் தெரியாத நீங்கள் ஏன் காரைக் கொடுத்தனுப்ப வேண்டும் என்று நாகமாணிக்கம் சிந்திக்கமாட்டாரா?'

சிந்தித்திருக்கலாம். ஆனால்,



நீங்கள் கண்டுபிடிக்க முயற்சிக்கும் நகைகளைப்பற்றியோ, நம் இருவருக்கும் உள்ள தொடர்பு பற்றியோ ஊகிக்க வாய்ப்பு ஏது?'

'ஏன் இல்லை? நகைகளைப்பற்றிக்கூட அவருக்கு ஏதாவது தெரிந்திருக்குமோ என்று இப்போது எண்ணத் தோன்றுகிறது' என்றார் பூவேந்தன்.

'ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டாள் வஞ்சிக்கொடி.

'வேல்நம்பி நாகமாணிக்கத்தின் பங்களாவில் நுழைந்ததை நான் என் கண்களால் பார்த்தேன். வேல்நம்பியை நாகமாணிக்கம் பார்க்கவேயில்லை என்றும், அவன் வரவேயில்லை என்றும் அவர் பேசியது வியப்பையும் ஐயத்தையும் ஊட்டுகிறது' என்றார் பூவேந்தன்.

'வேல்நம்பி அவர் பங்களாவுக்குள் சென்றானா?'

'ஆமாம்! நீங்கள் நம்பவில்லையா?'

'நம்புகிறேன்! ஆனால், அவன், உங்களைப் பார்த்துவிட்டு நழுவிவிட்டிருப்பான். ஆகையால் நாகமாணிக்கம் சந்தித்திருக்கமாட்டார். நாகமாணிக்கம் உண்மையில் அவனை சந்தித்திருந்தால், அவனைப் பார்க்கவில்லை என்று மறைத்துப் பேசமாட்டார்!'

'நாகமாணிக்கத்தின்மீது உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கையா?'

'ஆமாம்! சொன்னால், நீங்கள் நம்பமாட்டீர்கள்!'

'வஞ்சிக்கொடி! நீங்கள் சொல்வதை நம்புகிறேன். ஆனால், ஓர் ஐயம்!'

'சொல்லுங்கள்.'

'நாகமாணிக்கத்தின்மீது இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கும் நீங்கள், அவருடைய பிறந்த நாள் விழாவுக்கு ஏன் போகவில்லை?'

வஞ்சிக்கொடியின் முகம் இப்போது அடியோடு மாறிவிட்டது. 'வேண்டுமென்றேதான் போகவில்லை. என்னுடைய கணவர் உயிரோடு இருந்தபோது, எங்கிருந்து அழைப்பு வந்தாலும் நானும் என் கணவரும் சேர்ந்தேதான் செல்லுவோம். எங்களைக் காண்பவர்கள் எல்லாரும் வியப்புடன் பார்ப்பார்கள்! இந்த மாதிரி அழகான ஜோடி இந்த உலகத்திலேயே இல்லை என்றுகூட பேசிக்கொள்வார்கள். அப்போதெல்லாம் எங்களுக்கு எவ்வளவு பெருமிதமாக இருக்கும் தெரியுமா? ஆனால்...'

அவள் பேச்சை நிறுத்தினாள்.

'புரிகிறது! தன்னந் தனியாக நீங்கள் அதிகமாக வெளியே செல்ல விரும்பவில்லை, இல்லையா?'

'அப்படியல்ல! தனியாக வெளியே செல்லாமல் பங்களாவிலேயே அடைந்து கிடப்பதும் இல்லை. இந்தமாதிரி விருந்துகளுக்கும் விழாக்களுக்கும் செல்லுவதில்லை. கடற்கரைக்குச் சென்று காரை நிறுத்திவிட்டு மணிக்கணக்காக தனியாகவே உட்கார்ந்திருப்பேன். தனியாகச் சென்று சினிமாக் காட்சிகளைப் பார்ப்பதில் தவறு என்ன இருக்கிறது?'

'உண்மைதான்.'

'பூவேந்தன்! ஹார்லிக்ஸ் ஆறிப்போகிறது!'

பூவேந்தன் சிரித்துக்கொண்டே ஹார்லிக்ஸை மெல்லக் குடித்தார். ஹார்லிக்ஸை குடித்துக்கொண்டே அவர் பேச்சோடு பேச்சாகக் கேட்டார்: 'வஞ்சிக்கொடி! நீங்கள் ஏன்



மீண்டும் மணம் செய்துகொள்ளக் கூடாது?'

பூவேந்தன் இப்படிக் கேட்டதும் வஞ்சிக்கொடியின் கண்கள் விழிப்புடன் அவரைப் பார்த்தன.

'நீங்கள் கேட்கும் இதே கேள்வியைத்தான் அடிக்கடி நாகமாணிக்கமும் கேட்பார்! ஆனால், நான் அதற்கு இதுவரையில் பதில் சொன்னதில்லை.'

'இப்போது சொல்லுங்கள்!'

'நான் மீண்டும் மணம் செய்துகொள்ளுவதை எவரும் தடுக்கவில்லை! ஆனாலும்...'

அவள் பேச்சை நிறுத்தினாள்.

'ஆனாலும் என்ன? சொல்லுங்கள் வஞ்சிக்கொடி.'

'நீங்கள் விரட்டிக் கேட்பதைப் பார்த்தால், உங்களையே மணம் செய்துகொள்ளும்படி சொல்லுவீர்கள் போலிருக்கிறதே! பேசாமல் படுத்து ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லி உட்கார்ந்திருந்த வஞ்சிக்கொடி எழுந்துகொண்டாள்.

அவள் கேலியாகச் சொன்ன இந்தப் பதில் பூவேந்தனை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது!

தன்னுடைய காதலி ஒளிக்கொடியைத் தவிர, வேறு எந்தப் பெண்ணையும் தன் மனைவியாக இதுவரையில் எண்ணிப் பார்க்காத பூவேந்தன் எதற்காக இப்படி ஒரு கேள்வியைக் கேட்டோம் என்று வாயடைத்து உட்கார்ந்தார்.

வஞ்சிக்கொடி போகத் திரும்பியபோது, 'நில்லுங்கள்' என்றார்.

'ஏன்? இன்னும் ஏதாவது கேட்க வேண்டுமா?'

அவள் குரலில் அன்பும் கனிவும்தான் குழைந்திருந்தன.

'நடந்தவைகளைப்பற்றி இன்னும் தெளிவாகச் சொல்லவே



பருமன் ஆசாமி: கொஞ்சம் நகர்ந்துக் கிடுங்க; நான் மேலே ஏறி படுத்துண்டறேனுங்க.

உட்கார்ந்திருக்கும் பிரயாணி: !!...

இல்லையே! நாகமாணிக்கம் தொலைபேசியில் உங்களை அழைத்து, நான் அங்கே விழுந்து கிடப்பதாகச் சொன்னதும் என்ன செய்தீர்கள்?'

'என்ன செய்தேன்? நானே ஓடி வந்தேன்! வேறொரு காரில் வந்து உங்களைத் தூக்கிப் போட்டுக்கொண்டு வந்தேன்!'

'எனக்கு நீங்கள் கொடுத்த பியட் கார்?'

'அதை நாகமாணிக்கத்தின் காரோட்டி ஓட்டி வந்து இங்கே விட்டுவிட்டுச் சென்றான்!' என்று சொல்லிவிட்டு அவள் மீண்டும் திரும்பிச் சென்றாள்.

வஞ்சிக்கொடியிடம் இன்னும் ஏதேதோ கேட்க வேண்டும். உடனே அங்கிருந்து புறப்பட்டு பூவேந்தன் தங்கியிருந்த அழகு

மலை ஓட்டலுக்குப் போக வேண்டும் என்று எண்ணிய அவர் எழுந்திருக்க முயன்றபோது—

தள்ளாடிக்கொண்டு படுக்கையில் விழுந்தார்.

பூவேந்தனின் கண்கள் தாமாகவே மூடிக்கொண்டன.

வஞ்சிக்கொடி உரக்கச் சிரித்தபடி கதவைச் சாத்திய சத்தம் இலேசாக அவர் காதில் விழுந்தது.

## 34

பொழுது புலர்ந்து நீண்ட நேரமாகிவிட்டது. சன்னலின் வழியே பாய்ந்து வந்து பூவேந்தனின்மீது ஒளிக் கிரணங்கள் பட்டதும் விழித்தெழுந்து பார்த்தார். அவர் எழுந்து விரைவாகச் சென்று கதவைத் திறந்ததும்—

அப்படியே வியப்பால் நின்றார்.

கூடத்திலே பூவேந்தனின் பேட்டிக்காகக் காத்திருப்பவனைப்போல சோபா ஒன்றில் உட்கார்ந்திருந்தான் செல்வரங்கம்.

செல்வரங்கம் பூவேந்தனைப் பார்த்ததும், மெல்லச் சிரித்தபடி ஒரு கண்ணைச் சிமிட்டினான். அவன் கண்ணை சிமிட்டியபோது—

'பூவேந்தன்! நீங்கள் அதிருஷ்டக்காரர்' என்று சொல்லுவதைப் போலிருந்தது.

'செல்வரங்கம் நீங்களா? இங்கே எப்படி வந்தீர்கள்?' என்று கேட்டார் பூவேந்தன்.

செல்வரங்கம் மெல்ல எழுந்து நேராக அந்த அறைக்கே வந்துவிட்டான். அவன் அந்த அறைக்குள் இப்படியும் அப்படியும் பார்த்துவிட்டு, 'நீங்கள் கொடுத்து வைத்தவர்' என்றான்.

'என்ன சொல்லுகிறீர்கள்?' என்று அச்சத்துடன் கேட்டார் பூவேந்தன்.

'நீங்கள் இங்கே தங்கிவிட்டது எனக்குத் தெரியாது. எத்தனை தடவை நான் உங்கள் ஓட்டலுக்குத் தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசினேன் தெரியுமா? நீங்கள் வரவில்லை என்று தெரிந்ததும் கவலை மிகக் கொண்டேன். விடிந்ததும், வஞ்சிக்கொடியைக் கேட்டுப் பார்த்தால் என்ன என்று தொலை பேசியில் கேட்டேன்.'

'வஞ்சிக்கொடி என்ன சொன்னாள்?'

'பூவேந்தன் இங்கேதான் படுத்து உறங்குகிறார். விழித்துக் கொள்ளும் நேரம்தான் என்றதும் பூவேந்தன் எளியவர் அல்லர் என்பதைப் புரிந்துகொண்டேன்.'

'தவறாக எண்ணிவிட்டீர்கள் செல்வரங்கம்! நான் இங்கே எப்படி வந்தேன் என்பது ஒரு கதை.'

'எனக்குக்கூட எவ்வளவோ கதைகள் தெரியும். கதை கிடக்கட்டும். நான் உங்களை ஏன் தேடி வந்தேன் தெரியுமா?'

'சொல்லுங்கள்.'

'செம்மேனியனிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.'

'கடிதமா?'


'ஆமாம்.'

அவர்கள் பேசிக்கொண்டிருந்த போது, வஞ்சிக்கொடி காப்பிக் கோப்பைகளுடன் உள்ளே நுழைந்தாள். இருவரும் பேச்சை நிறுத்திவிட்டு வஞ்சிக்கொடியைப் பார்த்தார்கள்.

வஞ்சிக்கொடி மெல்லச் சிரித்தபடி இருவரையும் பார்த்தாள்.

(தொடரும்)





# மிட்டாய்ப் பாப்பா

கல்வி கோபாலகிருஷ்ணன்

## 3

சோமு அலறுவதைக் கண்டு எல்லாப் பிள்ளைகளும் திகைத்துப் போயினர். அவன் கையிலிருந்து இரத்தம் வடிவதையும் கையிலிருந்த மிட்டாய்ப் பாப்பா மாயமாய் மறைந்ததையும் கண்டு ஒரு சிறுவன், 'அடே மிட்டாய்ப் பாப்பா ஒரு பிசாசு. பூதம்டா! அடே அது சோமுவின் கையைக் கிழித்துக் கொண்டு மாயமாய் மறைந்து விட்டதடா!' என்று கத்தினான். அவ்வளவுதான். 'அடே அதோ பேய்! அதோ பிசாசு! ஓ பேய்...!' என்று கத்திக்கொண்டே எல்லா பிள்ளைகளும் நாலா பக்கமும் சிதறி தலைதெறிக்க ஓடினர்.

ஆனால் உண்மையில் மிட்டாய்ப் பாப்பா ஒரு பிசாசா? இல்லை. இல்லவே இல்லை. அதைச் சூரத் தேங்காய் போல் கல்லில் மோதி சுக்குநூறாய் உடைக்கப் பிள்ளைகள் திட்டமிட்டதும் இதைக் கேட்ட மிட்டாய்ப் பாப்பா மூர்ச்சித்துவிட்டது! சோமுவின் கை இரத்தக்காடாக மாறியதற்குக் காரணம் மிட்டாய் பாப்பா அல்ல. உண்மையில் என்ன நடந்தது தெரியுமா?

சோமு மிட்டாய்ப் பாப்பாவைக் கல்லில் மோதக் கையை உயரத் தூக்கினான். மோதப் போகும் கல்லையே அவன் குறி பார்த்த வண்ணம் 'ஒன்று...ஒன்று...' என்று எண்ணத் தொடங்கினான். அவனைச் சூழ்ந்து வட்டமாக நின்ற மற்றவர்களோ மிட்டாய்ப் பாப்பா கல்லில் மோதி சுக்குநூறாய் உடைந்ததும், அத்துண்டுகளைப் பொறுக்குவதற்காக ஆயத்தமாக அக்கல்லையே கவனித்து வந்தனர். ஆக மொத்தம் மிட்டாய்ப் பாப்பாவைப் பிடித்த சோமுவின் கையண்டை என்ன நேருகிறது என்று ஒருவரும் கவனிக்கவே இல்லை.

பிள்ளைகள் அனைவரும் எதிர் பார்த்தது மிட்டாய் பாப்பா கல்லில் மோதுண்டு சுக்குநூறாய் உடைவதைத்தான். ஆனால் நடந்தது என்ன? கையில் பிடித்த மிட்டாய்ப்பாப்பாவைக்காணோம். எங்கு சென்றது என்றே ஒருவரும் பார்க்கவில்லை. ஒருவருக்கும் புரியவுமில்லை. மிட்டாய்ப் பாப்பா மாயமாய் மறைந்ததோடு இருந்தாலே எவரும் பிரமிக்க வேண்டிய விஷயம்தான். அதைத் தவிர அதைப் பிடித்த கை காயப் படவே மிட்டாய் பாப்பாவை பேய், பிசாசு என்று நினைக்க நேர்ந்தது.

ஆனால் உண்மையாக நடந்தது என்ன தெரியுமா? ஆகாயத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்த கழுகு ஒன்றிற்கு சோமுவின் கையில் பிடித்திருந்த மிட்டாய்ப் பாப்பா தென்பட்டது. மிட்டாய்ப் பாப்பாவைத் தவளையோ, எலியோஎன்று எண்ணி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்துவந்து கண்மூடித் திறப்பதற்குள் கொத்திக்கொண்டு, ஆகாயத்தில் வெகு தூரம் சென்று விட்டது! இவ்விதம் கொத்திச்

செல்லும் பொழுது அதன் கூர்மையான மூக்கும், கால்களிலிருந்த கொக்கி போன்ற நகங்களும் சோமுவின் கையைக் காயப்படுத்திவிட்டன! பிள்ளைகள் மிட்டாய்ப் பாப்பாவைப் பேய் என்றும் பிசாசு என்றும் உண்மையாகவே நம்பி நாலா பக்கங்களிலும் சிதறி ஓடினர். அதைக் கொல்லத் திட்டமிட்டவர்களுக்கு நல்ல பாடம் கிடைத்தது! இனி மேலே என்ன நடந்தது என்று கவனிப்போம்!

மூர்ச்சித்துக் கிடந்த மிட்டாய் பாப்பாவைக் கழுகு தன் கால்களினுல் பற்றிக்கொண்டு ஆகாய மார்க்கமாகப் பறந்து செல்லும் பொழுது குளிர்ந்த காற்று, இதன்மேல் இடைவிடாது வீசவே மிட்டாய்ப் பாப்பா மூர்ச்சை தெளிந்து கண் விழித்துப் பார்த்தது.

## பரலோக யாத்திரை

மிட்டாய் பாப்பா மூர்ச்சை தெளிந்ததும் 'நாம் எங்கே இருக்கிருேம்' என்று சுற்றுமுற்றும் பார்த்தது. நாலா பக்கத்திலும் நீலவானும் மேகக் கூட்டங்களும் தென்பட்டன. தன்னை யாரோ வானவெளியில் தூக்கிச் செல்வது தெரிந்ததே ஒழிய, யாரால் எப்படி தூக்கிச் செல்லப்படுகிருேம் என்று 'இதனுல் ஊகிக்க முடியவில்லை. தான் மூர்ச்சையாவதற்கு முன்னுல் பிள்ளைகள் தன்னை சூரத் தேங்காய்போல் கற்பாறையின் மேல் மோதி உடைக்க ஆயத்தமானது நினைவிற்கு வந்தது. 'ஓகோ! நம்மைப் பிள்ளைகள் கல்லில் மோதி கொன்றிருக்க வேண்டும். நம் உடல் அழிந்து ஆவி மட்டும் வானவெளியில் பிரயாணம் செய்து பரலோகத்திற்கு செல்லுகிருேம்', என்று மிட்டாய்ப் பாப்பா நினைத்து விட்டது!

பரலோகத்திற்குப் போகும் வழி எப்படி உள்ளது? யார் தன் ஆவியைப் பரலோகத்திற்குத் தூக்கிச் செல்வது என்று பார்க்க மிட்டாய் பாப்பா தன் தலையைச் சுற்றிச் சுழற்றி நாலா பக்கமும் உற்று நோக்கியது. தலையை அசக்கியதும் கூர்மையான ஒன்று இதன் தலையைக் கொத்த ஆரம்பித்துவிட்டது! தலையைக் கூரிய ஆயுதம் ஒன்று கொத்தவே மிட்டாய் பாப்பாவிற்கு வலி எடுக்கத் தொடங்கியது. தலையில் வலி கண்டது. 'ஓகோ, நம் ஆவி மட்டும் வானவெளிப் பயணம் செய்யவில்லை. ஆவியுடன்கூட உடலும் சேர்ந்துள்ளது. தான் சாகவில்லை. இரண்டும் சேர்ந்து வானவெளியில் பயணம் செய்கின்றன என்று உணர்ந்தது.

'பிள்ளைகள் கையிலிருந்து உயிர் தப்பி விட்டோம். ஆனுல் இப்பொழுது எதன் கையில் சிக்கிக்கொண்டுள்ளோம்?' என்ற ஆவல் தூண்ட மற்றொர் முறை சுற்றும்முற்றும் பார்த்தது! மற்றொர் முறை இதைத் தூக்கிச் சென்றுகொண்டிருந்த கழுகு, மிட்டாய் பாப்பா தன் உடலை அசைப்பதைக் கண்டு மேலும் கொத்தத் தொடங்கிவிட்டது. குப்புறப்படுத்திருந்த மிட்டாய் பாப்பாவிற்குத் தன் உடலைக் கூரிய நகங்களுடன் கூடிய விரல்களால் பிடித்துக்கொண்டுள்ளது என்று மட்டும் குனிந்தபடியே பார்க்க முடிந்தது. எதோ ஓர் பறவையிடம் இம்முறை சிக்கியுள்ளோம் என்பது அப்பொழுது தான் அதற்குப் புலப்பட்டது! எங்கே தூக்கிச் செல்லுகிறது என்று பார்க்கக் கீழே உற்று நோக்கியது. கீழே நடந்து செல்லும் மனிதர்கள் எறும்பு ஊறுவதுபோல் தென்பட்டனர்! பெரிய பெரிய மரங்கள் செடிகொடிகளைப்போல் காட்சி



அளித்தன! ஆறு ஒன்று பாம்பு ஊர்ந்து செல்வதுபோல் தோன்றியது! தன்னை இவ்வளவு உயரத்தில் தூக்கிச் செல்லும் பறவைத் தன்னைக் கீழே எறிந்தால் தன் கதி என்ன ஆகும் என்று எண்ணிக் கதிகலங்கியது மிட்டாய்ப் பாப்பா!

இதற்குள் கழுகு தான் கொண்டு வந்த ஆகாரத்தைப் புசிக்கக் கீழே பறந்து சென்று ஓர் மரக் கிளையில் உட்கார்ந்து தன் கூரிய மூக்கால் மிட்டாய் பாப்பாவைக் கொத்தத் தொடங்கியது. மிட்டாய் பாப்பாவின் உடல் சர்க்கரைப் பாகினுல் செய்யப்பட்டு உறைந்து கல்போலிருக்கவே இதன் உடலிலிருந்து மாமிசம் எதையும் கழுகால் கொத்திச் சாப்பிட முடியவில்லை. தான் புசிக்கக்கூடிய ஆகார வகை மிட்டாய் பாப்பா இல்லை என்று உணர்ந்ததும் கழுகு மிட்டாய்ப் பாப்பாவைத் தான் அமர்ந்த மரக் கிளையிலேயே விட்டு விட்டுப் பறந்து சென்றது!

கழுகின் உருவம் மறைந்ததும் மிட்டாய்ப் பாப்பா 'அப்பாடா! மற்றோர் பெரிய அபாயத்திலிருந்து உயிர் தப்பினோம். இன்னும் என்ன என்ன ஆபத்துக்கள் வரக் காத்திருக்கின்றனவோ? எப்படித் தப்புவது? எங்கே போவது?' என்று சிந்திக்கத் தொடங்கியது. தான் இருந்த வீட்டை விட்டு ஏன் வந்தோம்! என்றுகூட நினைக்கத் தொடங்கியது! தன் வீட்டிற்கே திரும்பிச் செல்வோம் என்றால் வழியை யார் காட்டுவார்கள்? எப்படியாவது திரும்பிச் சென்றாலும், முன்பு வளைத்துத் துரத்திப் பிடித்துக்கொண்ட பிள்ளைகள் மறுமுறை குறுக்கிட்டால், தன் உடல் கல்லில் மோதி நூறு சுக்கலாய் உடைவது நிச்சயம், அவர்களிடம் சிக்காமல் எப்படி தப்புவது? 'ஐயோ என்ன செய்வேன்?' என்று எண்ணி எண்ணி அழத் தொடங்கியது. மரத்தில் உச்சாணிக் கிளையில் உட்கார்ந்து கொண்டு மிட்டாய்ப் பாப்பா அழத் தொடங்கினால் யார் காதில் இதன் அழுகுரல் விழப் போகிறது? யார் வந்து இதற்கு உதவி புரியப் போகிறார்கள்? மிட்டாய்ப் பாப்பா அழுது அழுது அலுத்துப்போய் தான் உட்கார்ந்திருந்த மரக் கிளையின்மேல் படுத்துத் தூங்கிவிட்டது!

உச்சிக்கிளையில் தூங்குகிறோமே! தூங்கும் பொழுது உருண்டு புரண்டால் 'தொப்' பென்று கீழே விழுந்து உடல் நொறுங்கிவிடப் போகிறதே என்று மிட்டாய்ப் பாப்பா எண்ணவே இல்லை! நல்ல காலம் மரக் கிளையின் மேல் படுத்துத் தூங்கிய மிட்டாய்ப் பாப்பா தூங்கும் பொழுது புரளவில்லை. கீழேயும் விழவில்லை. இந்தக் கதையும் முடியவில்லை!

ஆனால்! எதிர்பாராத சங்கடம் ஒன்று நேர்ந்தது! மிட்டாய்ப் பாப்பா மரக்கிளையில் அந்தரத்தில் தூங்கும் பொழுது ஒரு பெரிய மழை பெய்யத் தொடங்கி விட்டது! முதலில் ஓரிரண்டு நீர்த்துளிகள் மிட்டாய் பாப்பாவின் உடலில் பட்டது. பிறகு 'படபட'வென்று அடுத்தடுத்து நீர்த்துளிகள் மிட்டாய்ப் பாப்பாவின் உடலை இடைவிடாது தாக்கத் தொடங்கியது! சர்க்கரைப் பாகினால் ஆக்கப்பட்ட இதன் உடல் மழையில் கரைய ஆரம்பித்தது. மிட்டாய்ப் பாப்பா தூக்கம் கலைந்து திடுக்கிட்டு எழுந்து நாலாபக்கமும் பார்த்தது. தூக்கக் கலக்கத்தில் தன் உடலின் மேல் யாரோ தண்ணீரை ஊற்றுவதாக முதலில் எண்ணியது!

மரத்தின் மேல் இருக்கும் மிட்டாய் பாப்பாவின் மேல் யார் தண்ணீர் ஊற்றப் போகிறார்கள்? வருணபகவான் தாவரங்களின் தாகத்தைத் தணிக்க ஆகாயத்திலிருந்து தெளித்தத் தண்ணீர், மிட்டாய்ப் பாப்பாவிற்கு வினையாக முடிந்தது! மிட்டாயால் ஆன உருவம் ஒன்று மரத்தின் மேல் உட்கார்ந்திருக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. தாவரங்களுக்கு உதவி புரிவதற்காக அனுப்பிய மழை மிட்டாய்ப் பாப்பாவின் உடலை மடமடவென்று கரைக்கத் தொடங்கியது! நாளுக்கு நாள் சந்திரனின் உருவம் தேய்வதுபோல் மழைத் தண்ணீர் படத் தொடங்கியதும், நிமிடத்திற்கு நிமிடம் சர்க்கரைப் பாகால் ஆன இதன் உடல் மடமடவென்று கரையத் தொடங்கியது! அந்தரத்தில், உச்சாணிக் கிளையில் இருந்த மிட்டாய்ப் பாப்பா மழையிலிருந்து தப்ப வழி தெரியாமல் தவித்தது!

(தொடரும்)

# செய்து பாருங்கள்!

ஆழி.வே.ராமசாமி

## ஸ்ப்ரே செய்தல்


ஸ்ப்ரே' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு 'தெளித்தல்' என்று பொருள்.

பல் துலக்கும் பிரஷ், வர்ணம், குண்டூசிகள், அழுத்தமான வெள்ளைக் காகிதம், கூர்மையான பிளேடு, சிறு சிறு கற்கள்.


முதலில், அழுத்தமான வெள்ளைக் காகிதத்தில், நீங்கள் விரும்பும் படங்களை வரைந்து கொள்ளுங்கள். மலர்கள், விலங்குகள், பறவைகள் முதலியவற்றை வரைந்து கொள்ளலாம். படத்தின் உள்ளே கோடுகள் அதிகம் இல்லாதிருந்தால் உங்களுக்கு எளிதாக இருக்கும்.

இப்போது, ஒரு குருவியின் படத்தை வரைவதாக வைத்துக் கொள்வோம்.

படத்தை வரைந்தபின், படத்தின் வெளிக்கோடு வழியே பிளேடால் வெட்டிப் படத்தைத் தனியாக எடுங்கள். (படம் 1ஐப் பாருங்கள்)


படம்:1


அடுத்து, படத்தில் கோடுகள், புள்ளிகள் இவற்றை வெட்டி எடுக்க வேண்டும். இப்போது நீங்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். வெட்டி எடுக்கப்படும் கோடுகள், படத்தின் வெளி விளிம்புகளைத் தொடவே கூடாது. (படம் 2ஐ பாருங்கள்)


படம்.2

பின்பு, நீங்கள் இந்தப் படத்தை எந்தக் காகிதத்தின் மேல் 'ஸ்ப்ரே' செய்ய வேண்டும் என்று எண்ணுகிறீர்களோ, அதில் இதை வையுங்கள். படத்தின்மேல் சிறு சிறு கற்களை வையுங்கள். அகலம் குறைவான இடங்களில் குண்டூசிகளைக் குத்தலாம். அப்படிச் செய்தால்தான், வெட்டி எடுக்கப்பட்ட படம், காற்றால் நகர்ந்துவிடாமல் இருக்கும்.

பின்பு, வர்ணத்தைக் குழம்பாகக் குழைத்துக் கொள்ளுங்கள். பல் துலக்கும் பிரஷ்ஷை இடக்கையில் பிடித்துக்கொள்ளுங்கள். வலக்கை ஆள்காட்டி விரலை வர்ணக் குழம்பில் நனைத்துக்கொண்டு, வைக்கப்பட்டுள்ள படத்தின் ஓரங்களின்மேல் பிரஷ்

ஷைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, பிரஷ்ஷின் முடியில் விரலை அழுத்தித் தடவுங்கள். (படம் 3ஐ பாருங்கள்)




படம்:3

பிரஷ்ஷிலிருந்து வர்ணக் குழம்பு சிறு சிறு துளிகளாகப் படத்தின் ஓரங்களிலும், படத்தின் நடுவே வெட்டி எடுக்கப்பட்ட கோடுகளிலும் விழுந்த பின்பு, கொஞ்ச நேரம் வர்ணத்தைக் காயவிடுங்கள்.


நன்றாகக் காய்ந்த பிறகு, கற்களையும், குண்டூசிகளையும், வெட்டி வைக்கப்பட்ட படத்தையும் எடுத்துவிட்டுப் பாருங்கள். எப்படி இருக்கிறது?

(படம் 4ஐ பாருங்கள்)

இது மாதிரி பெரிய படங்களாக வெட்டிச் சுவரிலும் ஒட்டிக்கொண்டு, 'ஸ்ப்ரே' செய்தால் அழகாக இருக்கும். நன்றாகப் பழக்கப்பட்ட பின்புதான் அவ்வாறு செய்யவேண்டும். இல்லாவிட்டால், சுவரை வீணாக்கி விட்டுப் பெரியவர்களிடம் அடிபட வேண்டியதுதான்?




இதோ, மேலே ஒரு குதிரையின் படம் இருக்கிறது. வெட்ட வேண்டிய பகுதிகள் அதில் காட்டப்பட்டுள்ளன. நீங்கள் அவற்றை வெட்ட வேண்டிய இடத்தில் வெட்டி, மேலே சொன்ன முறைப்படி செய்து பாருங்கள். (பட்டையாகப் படத்தின் உள்ளே காணப்படும் கோடுகள், படத்தின் உள்ளே வெட்டப்பட வேண்டியவை)



படம்:4



# தாயத்து



முல்லை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அவ்வுலகத்தின் தலைமை, அதிகார வர்க்கம் என ஒன்றும் கிடையாது; ஒவ்வொருவனும் முற்றிலும் தன் இச்சைப்படி ஊர்ப் பொதுக் காரியமும் தனியாரின் காரியமும் செய்து வாழ்க்கை நடத்துகிறான்; பண்டம் மாற்றல் அல்லது பணி மாற்றல்தான் உண்டு; பொய்ப் பித்தலாட்டம் முதலியன அகராதியிலும் கிடையாது என்று அறிந்த மந்திரியும் அவருடைய ஆலோசகர்களும் வியந்தனர், மனம் குழம்பினர், நம்பிக்கை கொள்ளாதிருந்தனர்.

மறுநாளும் ஆலோசனை சபை கூடிற்று. மந்திரி சொன்னார்: 'இது ஒரு விசித்திரமான உலகம். நாகரிகத்தில் பிற்போக்கு ஏற்பட்டிருந்தாலும் இங்கும் ஒரு விதக் கல்வியும், கலாசார முறையும் போதிக்கப்பட்டு வருகின்றன. பூலோகத்தார் இங்கு வர நேரும்போது 'தம் பண்புக்குத் தீங்கிழைப்பார்கள், அவர்கள் பிறவி சத்துருக்கள்' என்ற எண்ணம் தாய்ப் பாலுடன் இவர்கள் உடலில் ஊறியிருக்கிறது. வார்த்தை முனையிலோ, கத்தி முனையிலோ இவர்களுடைய இந்தத் தவறான எண்ணத்தை வேரோடு களைந்தெறியாவிட்டால் நாம் கடமையில் தவறினவராவோம். இயற்கை சக்திகளைக் கொண்டு வாகனங்களையும் இதர யந்திரங்களையும் ஓட்ட இவர்கள் நன்கு கற்றிருந்தாலும் மொத்தத்தில் இவர்கள் மகா சோம்பேறிகள். இவர்களைச் சீர்திருத்த வேண்டும். இவர்களுடைய கவர்ச்சிகரமான எளிய வாழ்க்கை முறையைக் குறித்தும் ஒரு எச்சரிக்கை. ஜனத்தொகை குறைவாகவும் பொருள் வளம் அபரிமிதமாகவும் இருக்கும்போது இந்தப் பிற்போக்கான திட்டப்படி தினசரி வாழ்க்கை எப்படியோ நடந்துவிடும். ஆனால், இந்நிலை சாசுவதமா? மாறாமலிருக்குமா? செல்லச் செல்லப் பற்றாக்குறை ஏற்பட்டுத்தான் தீரும். ஆகவே, இந்நாட்டாருக்கு மறுபடியும் பொறுப்பு, கடமை, பொருளாதாரம், அரசியல், வாழ்க்கைத் தர உயர்வுக்கான திட்டம், நாணயச் செலாவணி, காகிதப் பண வசதி, பாங்கு முறை, இன்ஷ்யூரன்ஸ், மூலதனக்குறை நிவாரணம், அயல் உலக ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரம் முதலியனவெல்லாம் கற்பிக்காவிட்டால் நாம் கடமை தவறினவர் ஆவோம். ஆகவே...'

அச்சமயத்தில் விமானத்தின் காப்டன் பதட்டத்துடன் உள்ளே நுழைந்து, 'கனம் மந்திரி அவர்களே, பேராபத்து! நேற்று ஊர் பார்த்து வர அனுமதி பெற்று

வெளியேறிய 400 பேரில் பாதிப் பேர் சரியான வரவேற்பும் உணவும் கிடைக்காமல் வெயிலில் திண்டாடி, அவமானமும் அனுபவித்து, தலை வலியுடன் திரும்பியிருக்கிறார்கள். பாக்கிப் பேர் முரட்டுத்தனமாய் நடந்துகொண்டு உடல் ஏற்காத உணவுகளைத் திருடி தின்று தெருக்களில் தடுமாறி விழுந்து வெயிலின் கடுமையால் இறந்து போனார்களாம். இன்றைக்கும் 400 பேர் அனுமதிக்காகத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள்' என்று கவலையுடன் அறிவித்தான்.

'அப்புறம், வழி?'

'விமானத்தின் புறப்பாட்டிற்கு உத்தரவானால்...'

'அதெப்படி? நினைத்ததைக் காட்டிலும் அதிக நாள் இங்கே தங்க வேண்டியிருக்கும்போலிருக்கிறதே!...தக்க எச்சரிக்கையுடன் இன்றையப் பட்டியல்படி லைவ் கொடுத்துவிடும். ஹாரிசன், நீரும் போய் கவனித்துக்கொள்ளும். ஒரு சங்கதி, மஹாட் என்றால் என்ன, ஏதாவது தெரிகிறதா?'

'ஒன்றும் தெரியவில்லை. சொல் பொக்கிஷங்களில் பார்ப்போமா?'

அனைவரும் படையாகப் புஸ்தகசாலைக்குச் சென்றனர். உலக நூல்கள் அனைவற்றின் மைக்ரோஃபிலிம் பிரதிகள் அங்கிருந்தன. ஒருவன் பக்கங்கள் திருப்பி ஒரு திரைமேல் ப்ரொஜெக்ட் செய்தான். 'ஊம்...மஹாதேவ்...மஹல்லட்... மஹாநதி... மஹாநாய்...மஹாராஜா...மஹாவம்ச...மஹாட் இல்லை...ஓ, இதென்ன...மஹாட்மா–காண்டி பார்க்க...ஜிவால்யூம்... காண்டமாக்... காண்டியா...காண்டி...1869–1948–இந்தியன்– அரசியல்வாதி– தத்துவ ஞானி–மஹாட்மா (பெரிய ஆத்மா), பாபு (தந்தை) என்பார்கள்...டால்ஸ்டாய், தோரோ, ரஸ்கின், பார்க்க...சத்தியாக்கிரகம், பாஸிவ் ரெஸிஸ்டன்ஸ், நான்–கோவாபரேஷன் பார்க்க...பிரயோஜனமில்லை' என்று முணுமுணுத்தார் மந்திரி.

ஹாரிசன் மறுமுறை ஊருக்குள் போனபோது சார்ஜெண்ட் க்லீட் அவனோடு இணைந்துகொண்டான். மஹாட் வாசிகளை விமானத்திற்குள் அழைத்து வருபவர்களுக்குக் கணிசமான இனாம் அளிப்பதாக மந்திரி விளம்பரம் செய்திருந்தார். ஹாரிசன் முதலில் ராபர்ட்டின் வீட்டிற்குச் சென்றான். மூவரும் சிறிது நேரம் பேசியபின் ராபர்ட் 'இன்றைய சாப்பாட்டிற்கு என்னை நம்ப வேண்டாம். நீர் எனக்குச் செய்யக்கூடிய உதவியொன்றுமில்லை' என்று எச்சரிக்கை செய்தான்.

சார்ஜெண்ட் தன் ஏமாற்றத்தை வெளியே காட்டிக்கொள்ளாமல் 'பரவாயில்லை. தாங்கள் தயவு செய்து எங்களுடன் விமானத்திற்கு வர முடியுமா? மந்திரி உங்களுக்கு நல்ல விருந்தளிப்பார்' என்றான். தான் அவ்வளவு நாசூக்காகப் பேசுவது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. ராபர்ட் தனக்கிஷ்டமில்லை என்றான்.

'எல்லாம் இஷ்டப்படியே செய்ய முடியுமா? சம்பிரதாயம், பரஸ்பர மரியாதை, கடமை, அரசாங்கச் சட்டம்...'

'அதென்ன அரசாங்கச் சட்டம்?'

'பூ உலக சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியல்லவா இந்த மஹாட்! மஹாட்டின் பிரஜை சாம்ராஜ்யத்தின் பிரஜை அல்லவா? அதை மறுக்க முடியாதே! ஆகவே, மந்திரியின் சொல்படி நடப்பதுதானே அழகு! வாரும், புறப்படும்.'

'நீங்கள் சொல்வதில் பாதி வார்த்தைகள் புரியவில்லை.'

'நல்லதற்குக் காலமில்லை' என்று சொல்லி க்லீட் தன் கைத் துப்பாக்கியை உருவினான்.

ராபர்ட் சற்றும் பதறாமல் 'உலகத்திலேயே மிக சக்தி வாய்ந்த ஆயுதம் எங்களிடமிருக்கிறது' என்று அறிவித்தான்.

ஹாரிசன் க்லீட்டின் கையைத் தாழ்த்திக் கொண்டே 'அதெப்படிப்



பட்டது?' என்று கேட்டான்.

'மனிதனின் புத்தி சிருஷ்டித்த ஆயுதங்களில் மிக சக்தி வாய்ந்தது அது. நாங்கள் மஹாட்டர்கள் அல்லவா? ஆகையால் எங்களுக்குக் கத்தி வேண்டாம், துப்பாக்கி வேண்டாம், போர்க் கப்பல் வேண்டாம், அதெல்லாம் வைத்துக் குழந்தைகள் விளையாடட்டும். அவ்வெல்லாவற்றையும்விடச் சிறந்தது எங்களிடமிருக்கிறது. அதை நாங்கள் பிரயோகிக்க ஆரம்பித்தால் எதிரி தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது.'

'காண்பித்துவிட்டு ஜம்பம் அடி' என்று கூவினான் சார்ஜெண்ட். ஹாரிசன் தந்திரமாக 'என் நண்பனுடன் பேசிப் பயனில்லை, ராபர்ட். பார்த்தால் தான் அவனுக்குத் திருப்தி' என்றான். அவனுக்கும் நம்ப முடியாத அந்த ஆயுதத்தைப் பார்க்க வேண்டுமென்று ஒரே ஆவல்.

'இதுதான் எங்கள் ஆயுதம்' என்று சொல்லிச் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு வெள்ளைத் தகட்டை எடுத்து மேஜைமேல் வைத்தான் ராபர்ட்.

போஸ்ட் கார்டு அளவு; வெள்ளையாய் மழுமழுவென்று தந்தம்போலிருந்தது; ஒருபுறம் ஒன்றுமில்லை; மறுபுறம்–

எ–இ–மா–வே என்ற எழுத்துக்

கள் தெளிவாய் செதுக்கப்பட்டிருந்தன. ஒரு கறுப்புப் பூச்சு எழுத்துக்களை எடுப்பாய்க் காட்டிற்று.



பரிகசிக்கப்படுவதாய் நினைத்த சார்ஜெண்டின் முகம் கோவைப் பழமாயிற்று. அடுத்த க்ஷணத்தில் என்ன நேர்ந்துவிடுமோ என்று பயந்த ஹாரிசன் 'இதன் அர்த்தமென்ன? அல்லது இது அர்த்தமில்லாத ரக்ஷைச் சொல்லா?' என்று வினவினான்.

''என் இஷ்டம்-மாட்டேன் (அல்லது) வேண்டாம்' என்பதன் முதல் எழுத்துச் சுருக்கம். எங்களைக் காத்தருளும் அர்த்த புஷ்டியான தாயத்து. சுதந்திரத்தின் பிராணவ மந்திரம்' என்றான் ராபர்ட்.

திக்பிரமை பிடித்த க்லைட் நன்றி கூறிவிட்டு, 'வா, புதிதாகத் தோன்றும் பல யோசனைகளைப்பற்றிப் பேச வேண்டும்' என்று சொல்லி ஹாரிசனை அழைத்துக்கொண்டு வெளியேறினான்.

அப்போது பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்தது. ஹாரிசன் வார்பர்ட்டனின் ஹோட்டலை நாடிச் சென்றான். அங்கிருந்த வேலையாள், ஸைமன், மஹாட்டரின் எதிரிகளுக்கு உணவளிக்க இயலாது என்று கண்டிப்பாகக் கூறினான். சார்ஜெண்ட் உத்தியோக தோரணையுடன் 'பொது ஹோட்டல் உணவளிக்க மறுக்கலாகாது; லைசென்ஸ் ரத்தாகிவிடும்' என்று சட்டம் பேசி மாஜிஸ்டிரேட்டிடம் புகார் செய்வதாக மிரட்டினான். ஸைமன் 'யார் அவன்? எது என்னவாகிவிடும்?' என்று சொல்லி விழித்தான்.

சார்ஜெண்ட் கோபத்துடன் துப்பாக்கியை உருவி 'சோறு போடுகிறாயா, இல்லையா?' என்று கதறவே, ஸைமன் 'ஓ, நீதானா ராபர்ட் சொன்ன ஆள்!...வார்பர்டன், நீர் இன்னொரு ஸெர்வர் தேட வேண்டி வரும்போலிருக்கிறது' என்று முதலாளியை எச்சரிக்கை செய்து, 'நண்பா, செத்தவன் சோறு போடமாட்டான்; செத்தவனை நீ தின்பதில்லை என்று நினைக்கிறேன். கொல்லுதல் எவ்வளவு பயனற்ற காரியம் பார்த்தாயா? இந்த உண்மைதான் மஹாட் எதிரிகளுக்குத் தெரிவதில்லை' என்று அலுத்துக்கொண்டே உள்ளே போய்விட்டான்.

'உண்மையான வார்த்தை' என்று ஒப்புக்கொண்டான் ஹாரிசன்.

அதற்குள் அவனுடைய முந்திய நாள் சிநேகிதி, எலிஸா, அங்கே வந்தாள். அவன் தன்னுடைய நண்பனை அவளுக்கு அறிமுகப்படுத்தினான். ஸார்ஜெண்டு என்றால் என்ன—என்று அவள் கேட்க, 'ராணுவ அதிகார ஏணிகளில் கீழ் ஏணியில் மேல்படி—மட்ட ராசியில் ஓஸ்தி' என்ற கசப்பான விடை க்லைட்டிடமிருந்து கிடைத்தது. அவள் ஒன்றும் புரியாமல் திகைத்து, ஹாரிசனின் தொழில் என்ன என்று கேட்டு, எஞ்ஜினியரா, அய்யோ!' என்று ஏக்கத்துடன் பகர்ந்து, 'உங்கள் சாப்பாடு முடிந்ததா?' என்று விசாரித்தாள்.



சாப்பாடு கூப்பாடுதான் என்று தெரிந்ததும், அவள் அவர்களைச் சற்று பொறுக்கச் சொல்லி உள்ளே வார்பர்டனிடம் சென்றாள். சிறிது நேரத்திற்கெல்லாம் ஸைமன் மூவருக்கும் உணவு பரிமாறினான். ஹாரிசன் சங்கோசப்பட்டு 'எலிஸா அம்மா, உங்கள் 'நீக்கங்களை எங்களுக்காக ஊதாரிச் செலவு செய்கிறீர்கள்போலிருக்கிறதே!' என்று சொல்லித் தவித்தான்.

'அப்படியில்லை; இது வார்பர்டனின் நன்கொடை; அவனுடைய பிரசாரக் கணக்கில் சேரும். அறிவுள்ள மஹாட் எதிரியின் மனத்தை மாற்றி அனுகூலமாக்க முடியும் என்பது அவன் நம்பிக்கை' என்று அவள் அறிவித்தாள்.

'மஹாட் என்றால் என்ன?' என்று ஹாரிசன் கேட்டான்.

'மஹாட்மா காண்டி தெரியுமல்லவா?'

'யாரவன்?'

'பழைய பூலோகவாசி. எங்கள் ஆயுதத்தை சிருஷ்டித்தவர்.'

'கேள்விப்பட்டதே இல்லை.'

'அதில் ஆச்சரியம் என்ன?'

'அதென்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? நான் உயர்தரக் கல்வி கற்றவன்...'


'கோபம் வேண்டாம், ஹாரி. உங்கள் சமீப கால புத்தகங்களில் அவருடைய பெயரே இடம் பெறாமல் சிலர் செய்திருந்தால்? உங்கள் அதிகாரிகளுக்குப் பிடிக்காத கருத்துகள் பரவக்கூடாதல்லவா? தெரிகிறதா? கற்கவே வாய்ப்புக் கிடைக்காவிட்டால் கற்கவில்லை என்ற குறைக் கூற்று எப்படி எழும்?'

இதற்குள் சாப்பாடு முடிந்தது. வார்பர்டன் அங்கு வந்து ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து, எலிஸாவிடம் 'பேச்சு எதுவரை நடந்திருக்கிறது? எங்கே ஆரம்பிக்கலாம்?' என்று விசாரித்தான்.

'கடமைகள், கட்டளைகள், அதிகாரிகள், அரசியல் முதலியவற்றில் சிக்கிக் குழம்பியிருக்கிறார்கள்' என்றாள் அவள் புன்சிரிப்புடன்.

ஹாரிசன், 'அதென்ன தவறு? உங்கள் பணி மாற்றத்திலும் ஒருவன் தன் கடமையறிந்து மனசாட்சியுடன் கடனைக் கழிக்க வேண்டாமா?' என்று உணர்ச்சியுடன் வாதித்தான்.

'சீரான பழக்க வழக்கத்தில் பிறந்து வளர்ந்தவன் சமுதாயத்தில் ஒழுங்காகத்தான் நடந்து கொள்வான். ஊடே கடமை என்ற ஒரு சிக்கலான கருத்தைப் புகுத்துவானேன்? இன்னொருவன் நம் கடனை நினைவூட்டுவது எவ்வளவு கேவலம்! கட்டளையிடுவது எவ்வளவு அதிகப்பிரசங்கித்தனம்! யந்திரத்தின் ஒவ்வொரு அம்சமும் தன் முறை வரும்போது தனக்கேற்பட்ட வேலையைச் செய்கிறது; ஒரு பகுதி இன்னொரு பகுதிக்கு ஏன் புத்தி புகட்ட வேண்



டும்?' என்று பொழிந்து தள்ளினான் வார்பர்டன் பிரசார ஆவேசத்துடன்.

'மனச்சாட்சியில்லாமல் ஒருவன் சுயலத்துடன் நடந்துகொள்ளத் தீர்மானித்தால் அவனை எப்படி வழிக்குக் கொண்டு வருவது?' என்ற சந்தேகம் க்லீட்டுக்கு உண்டாயிற்று.

வார்பர்டன் சிரித்துக்கொண்டே தன் பாட்டன் சொல்லக் கேட்ட 'சோம்பேறி ஜாக்' என்னும் வரலாற்றை சாங்கோபாங்கமாகச் சொன்னான். ஜாக் தன் கடன்களைக் கழிக்காமல் பொறுப்பற்று நடந்துகொண்டானாம். அவனுடைய தன்மை பகிரங்கமானதும் யாரும் அவனைத் திட்டவில்லை, அடிக்கவில்லை, ஊரிலிருந்து வெளியே விரட்டவில்லை, விலகி நின்றார்கள், அவ்வளவுதான். அவன் ஊர் ஊராய் அலைந்தான். வருவோர் போவோர்மூலம் அவன் சுபாவம் எங்கும் விளம்பரம் பெற்றதும் ஒவ்வொரு ஊரில் ஒரு வாரம்கூட அவன் வண்டி ஓடவில்லை. அதன் பிறகு அவன் காடுகளுக்குச் சென்று கனி கிழங்கு தின்று ஜீவித்தான். கடைசியில் அவன் நான்கு முழம் கயிறு திருடி சுருக்கு போட்டுக்கொண்டு இறந்தான். அப்பொழுது அவன் வயது இருபது.

கதையைப்பற்றிய விமர்சனங்கள் முடிவடைந்ததும் அவன் சொன்னான்:—'இங்கே பொருளாதாரத் தேவைதான் ஜனங்களை நல்ல வழியில் நடத்துகிறது; கடமையுணர்ச்சி என்ற கற்பனையல்ல. கட்டளையிடுபவன் கிடையாது, அதட்டி மிரட்டுபவன் கிடையாது, இந்தக் கிரகத்தின் வாழ்க்கை முறையின் கோவையான அமைப்பில் மனிதனை நல்வழி செலுத்தும் தன்மை உள்ளடங்கியிருக்கிறது. நியாயமாக நடந்துகொள்பவர்கள் மொத்தத்தில் சுகப்படுகிறார்கள்; மற்றவர்கள் சிறிது காலம் சுகத்தையிழந்து தவித்து ஒரு பாடம் கற்கிறார்கள். சுலபமாய் சுகம் கிடைக்கும்போது துன்பத்தை யார் சம்பாதித்துக் கொள்வார்கள்?...'

'இருக்கலாம்' என்று ஓரளவு ஆமோதித்தான் ஹாரிசன்.

'சந்தேகமே கிடையாது. ஆனால், மஹாட்டில் ஏற்பது ஏற்காதது அவரவர் இஷ்டம். அதிருக்கட்டும், தற்கால அலுவல் முடிவடைந்த பிறகு என்ன செய்வீர்கள்?'



மனைவி:—கண் காட்சியிலே காணாமற்போன பிள்ளைகளை எல்லாம் அழாம பார்த்துக் கொள்வதாகக் கூறினீர்களே! எங்கே, இவனை அழாம பார்த்துக்குங்க; நான் கண்காட்சி பார்த்துவிட்டு வருகிறேன்!






'சொந்தத்தில் யந்திர மராமத்து சாலை நடத்த வேண்டும்' என்றான் ஹாரிசன்.

'எனக்கு அந்த அதிர்ஷ்டம் கிடையாது. யுத்த வேலை தவிர, எனக்குப் பரிச்சயமானது விவசாயம் ஒன்று தான்' என்றான் சார்ஜெண்ட், பிற்காலத்து இருண்ட வாழ்க்கையை நினைத்தவாறு.

'எவ்வளவு நிலம் இருக்கிறது உன்னிடம்?'

'சொந்த நிலமிருந்தால் எவ்வளவு முட்டாளானாலும் பட்டாளத்தில் ஏன் சேருகிறேன்? இனி, என் சொற்ப சேமிப்பைக் கொண்டு தற்கால விலையில் நான் பூலோகத்தில் நிலம் வாங்கவும் முடியாது. ஹைஜியா, ஃபால்டர் ஏதேனும் ஒரு மலிவான உலகத்திற்குக் கம்பியை நீட்ட வேண்டும். எனக்குப் பிரயாணச் செலவு இருக்காது—இலவசச் சீட்டு கிடைத்துவிடும்; ஆனால், அங்குள்ள மனிதர்கள் எப்படிப் பட்டவர்களோ!'

'நீங்கள் பெருமைப்படுத்தும் உங்கள் அரசாங்கம் கிழத் தன்மையில் உங்களை நன்றாய்க் கவனித்துக்கொள்கிறது! பேஷ்! புதுக் கிரகத்தைப்பற்றி பயமாக இருந்தால் சற்று பழகிய இடத்திலேயே இருக்கலாமே. பக்கத்து ஊரில் ஒரு தோட்டம் கவனிப்பார் இன்றிக் கிடக்கிறது. அதை நீ விருத்தி செய்யலாம்.'

'பதிலுக்கு நான் என்ன கொடுக்க வேண்டும்?'

'ஒன்றும் வேண்டாம். தொடர்ந்து கவனித்து வர வேண்டும். அவ்வளவுதான்.'

'அப்படியும் இருக்குமோ? நிபந்தனைகள், சிக்கல், பீடுங்கல், வில்லங்கம், வழக்கு...எத்தனை நக கொடுக்க வேண்டும்?'

'ஆரம்பத்தில் ஒன்றுமில்லை. செல்லச் செல்ல பிறர் அளிக்கும் புது உபகாரங்களுக்கு நக உண்டு.'

'நம்ப முடியவில்லை.'

'இங்கே அப்படித்தான். தரிசு நிலத்தை யாரும் எல்லையிட்டு உழலாம். கைவிடப்பட்ட கழனி அல்லது தோட்டத்தை யாரும் அனுபவிக்கலாம். கவனிப்பாரற்ற கடையை யாரும் தொடர்ந்து நாலு பேருக்குப் பிரயோஜனமாக நடத்தலாம். முன்னவருக்கு ஒன்றும் தரத் தேவையில்லை. இப்பொழுது…எலிஸாவின் அண்ணன் இறந்தபின் அவனுடைய யந்திரசாலை நாதியற்றிருக்கிறது. இரண்டு மூன்று பேர் அதை நடத்தப் பார்த்து, திறமைகாணாமல், விட்டுவிட்டார்கள். தேர்ச்சியுள்ள எஞ்சினியருக்குகந்த இடம் அது.'

இவ்வாறு சொல்லி அவன் எலிஸாவைப் பார்த்தான். எலிஸா கடைக்கண்ணால் ஹாரிசனைப் பார்த்தாள். க்லீட் இருவரையும் கவனித்து 'ஒப்புக்கொள், நண்ப. போனால் வராது. பொழுது போனால் நிற்காது. இரட்டை அதிர்ஷ்டம். பொறாமை கலந்த என் வாழ்த்துக்கள்! நான் தான் புது ஊரில் தனியாகக் கஷ்டப்படுவேன்' என்று ஒளிவு மறைவின்றிக் கொட்டினான்.

'தனியென்ன? நானே கூட வந்து பலருக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன். எலிஸாவின் தங்கை அங்கே வாத்தியார் அம்மா. அவளும் விவாகம் ஆகாதவள். நல்ல அழகி—நம் எலிஸாவைவிட' என்றான் வார்பர்டன் குறும்புச் சிரிப்புடன்.

க்லீட் பண்புள்ள ஆண் மகனின் கடமையறிந்து 'அநுசாதியமில்லை!' என்றான். எலிஸா கன்னம் சிவந்து 'உவேபாபோ' என்றாள். அந்த க்ஷணத்தில் அவளுடைய அழகு மடமடவென்று பல படிகள் ஏறிற்று.

கட்டுப்பாடு அறிந்த ஹாரிசன் 'இங்கு நாம் இன்பக் கனவுகள் கண்டுகொண்டிருக்கிறோம். நம் ராஜிநாமா ஏற்கப்படாவிட்டால்?' என்று கவலைப்பட்டான்.

வார்பர்டன் வெற்றியுடன் 'வீண் கவலை. வெளியே வாருங்கள்' என்று அவர்களைத் தெருவுக்கு அழைத்துச் சென்று 'மேலே அதென்ன, பாருங்கள். ஒரு மணி நேரமாக விமானத்தின் ஸைரன் ஓலமிட்டுக்கொண்டிருந்ததே, கேட்கவில்லையா?' என்று வினவினான்.

ஃ ஃ ஃ

இந்த எதிர்பாராத புறப்பாடு ஏன்?

விமானத்தில் வந்தவர்கள் நூற்றுக்கணக்கில் புது வாழ்க்கை முறையைப் பாராட்டி மஹாநாட்டில் தங்கத் தீர்மானித்து, அதிகாரிகளிடம் துணிச்சலுடன், 'திரும்பி வரமாட்டேன், என் இஷ்டம்' என்று விடையளிப்பதாகத் தகவல் கிடைத்ததும் மந்திரி விமானத்தைக் கிளப்பும்படி உத்தரவிட்டார். ஸைரன் ஒரு மணி நேரம் புறப்பாட்டு எச்சரிக்கை ஓலமிட்டு, திரும்பி வந்த சிலரை ஏற்றிக்கொண்டு, கத்தி வீசாத, ரத்தம் சிந்தாத போரில் தோல்வியடைந்து, உயரக் கிளம்பிற்று.

**[ஒரு ஆங்கில விஞ்ஞானக் கதையின் சுருக்கம் மூல ஆசிரியர் எரிக் ஃப்ராங் ரஸ்ஸல் அவர்களின் அனுமதி பெற்றது ]**



## இப்படியும் ஒருவர்

**செய்தி சொல்வேன் பராபரமே...**

★

# நியூஸ் பகதூர் நாணு

பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும்போதே நாணு (நாராயணசாமி)வுக்கு 'டமாரம்' என்ற பட்டம் கிடைத்து விட்டது. மாணவர்களிடம் எடுத்த பெயர் வயதானவுடன் மாறியது. தெரு வாசிகள் 'நியூஸ் மான் நாணு' என்று சொல்லத் தொடங்கிவிட்டனர்.

உணவுப் பொருள்கள் கீழே விழுந்தால் காக்கைக்கு மூக்கில் வேர்க்குமாம். ஊரில், அக்கம் பக்கம் கிராமங்களில் நடக்கும் அக்கப்போர்கள் சகலமும் அவருக்கு காதில் விழும். கேட்டும் தெரிந்துகொள்வார்.

ஒரு பழைய சைகிள்; வெய்யிலுக்குப் பாதுகாப்பான தலைப்பாகை; மாப்பிள்ளை அழைப்பின் போது தைத்த கோட்—இந்த டிரேட் மார்க்குடன் காலை ஏழு மணி முதல் மாலை ஆறு மணி வரை, ஆறு, வாய்க்கால், கடைத் தெரு, ரயிலடி இங்கெல்லாம் சுற்றி வருவதைப் பார்த்தால் ஏதோ ஒரு தினசரிக்கு நிருபர் வேலை பார்க்கிறாரோ என்று தோன்றும். ஆனால் வேலை என்னவோ ஒரு பி. டபிள்யூ. டி. மேஸ்திரி. (பொதுப் பணித் துறை மேலாள்.)

'என்ன நாணு, ஏதாவது விசேஷம் உண்டா?' என்று வயதில் மூத்தவர்கள் கேட்க வேண்டியது தான் தாமதம்.

வலது கையால் சொடுக்கிக் கொண்டே சைக்கிளை விட்டு இறங்குவார். அப்படியானால் ஒரு உள்ளூர்ச் செய்தி இருக்கிறது என்று பொருள்.

'நேற்று ராத்திரி மேலத் தெரு மணவாளன் அவசரமாக ரயிலுக்குப் போனானே, சமாசாரம் இது தான். அவன் மாப்பிள்ளை பாங்கில் காஷியர் வேலை பார்த்தானும். ஐயாயிரம் ரூபாய் அபேஸ் பண்ணிக்கொண்டு தலைமறைவாய்விட்டானும்…! அதற்காகத் தான் போயிருக்கிறான்…'

'ஆமாம். உமக்கு சமாசாரத்தை யார் சொன்னது?' என்று கேட்டு விட்டால் போதும்.



'என்கிட்டே இந்த ஊர்க் காரங்க சொல்லாட்டா, நான் கண்டுபிடித்து விடமாட்டேனா? மணவாளன் ஊருக்குப் போகிறதுக்கு ஒரு மணி முன்னாடி, மாப்பிள்ளை வேலையாயிருக்கிற பாங்கைப்பற்றி சிலரிடம் விசாரித்தானும். எதற்கென்று அதை நான் விசாரித்தேன். சமாசாரம் தெரிந்துகொண்டேன்!...'

சில சமயம் உள்ளூர்ப் பத்திரிகை நிருபர்களுக்குகூட, நடந்து முடிந்த சண்டை, கத்திக் குத்து, காதல் தோல்வி, தற்கொலை இவைகளைக் கண், காது வைத்துச் சொல்வார். அதைத் தெரிவிக்க தனது சைகிளில் போய்க் கூடச் சொல்வதுண்டு!... இது தவிரக் கேள்விப்படும் வதந்திகளைக் கூட உண்மையானவையே என்று பிறரிடம் சொல்லி விடுவார்!...



வாயால் கெட்டவர்கள் பலருண்டு. அவர்களில் நாணுவும் ஒருவர். ஒருசமயம் உள்ளூரிலிருக்கும் காலேஜ் மாணவர்கள் நான்கு பேரிடம் மாட்டிக்கொண்டார். வேறென்ன—வம்பு கட்டியது தான் காரணம்...

அந்த நான்கு மாணவர்களும் மற்றும் ஒரு மாணவியும் காலேஜ் இருந்துவரும் பத்தாவது மைலில் உள்ள டவுனுக்கு தினசரி ரயிலில் செல்வது வழக்கம். அந்த நான்கு மாணவர்களில் ஒரு மாணவர், அந்த மாணவிக்கு காதல் கடிதம் எழுதிக்கொண்டிருப்பதாக வும், காதல் கடிதம் ரகசியமாக—ஓடும் ரயிலிலேயே கொடுத்து வருவதாகவும் நாணு கூறிவிட்டார். அது அரைவாசி உண்மையானதும்கூட. அதனால் பெரிய விளைவுகள் ஏற்பட ஆரம்பித்துவிட்டன!

காதல் கடிதம் எழுதிய வதந்தியைப் பெரிதாக்கிய நாணுவை மாணவர்குழாம் வளைத்துக் கொண்டது. ஒருநாள் முன்னிரவில் தன் சைகிளில் வீடு திரும்பியவரை வழிமறித்து, சைகிளைப் பிடுங்கி, அவர் மேற்பார்வையிடும் வாய்க்காலில் தூக்கிப் போட்டு விட்டனர்! ஓடும் தண்ணீரில் விழுந்த சைக்கிளை இரண்டு நாள் கழித்துக் கண்டுபிடித்தார் நாணு.

அதற்குப் பின்னரும் தன் வதந்தியை நிறுத்தினாரா என்றால், அதுதான் இல்லை!...

'அவன் சொன்னான் சமாசாரம்... உண்மையோ, பொய்யோ...' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். மனிதனின் அடிப்படை சுபாவத்தை யாராலும் மாற்ற முடியாது என்பதற்கு நாணு ஒரு சாட்சி. ஊர்வம்புகளைப் பேசுவதற்காக 'நியூஸ் பகதூர்' என்று அவரைக் கூப்பிட்டால் அதற்காக, வருத்தப் படமாட்டார்!... புன்சிரிப்புடன் ஏற்றுக்கொள்வார்!

நல்லவேளையாக அவரது அக்கப்போர்ப் பேச்சுக்களைக் கேட்க முடியாத மனைவிதான் அவருக்கு வாய்த்தாள். ஆமாம்—முழுச் செவிட்டு மனைவி! பிள்ளைகுட்டி பிறக்கவில்லை. அதனால் அவரைப் பற்றிப் பேசப் பிறருக்கும் வாய்ப்பில்லாது போய்விட்டது!

# நினைத்தால் நெஞ்சம் துள்ளுகிறது!

சில பிரபல நடிகைகளுடன் நடிக்கும்போது எனக்குக் கொஞ்சம் மனம் சஞ்சலப்படுவது வழக்கம். அவர்களுடைய போக்கும், அலட்சிய நோக்கும், 'பிரபல நட்சத்திரமானால் இப்படித்தான் இருப்பார்கள் போலும்!' என்ற எண்ணத்தை உண்டாக்கி இருந்தது.

ஆனால் அகில இந்திய நட்சத்திர நடிகை 'பப்பி'யுடன் பழகிய பிறகு என்னுள்ளே படிந்து கிடந்த அந்த நினைவை மாற்றியமைத்துக்கொண்டேன். 'என் அருமை பப்பி!' என்று உரிமையோடும் உள்ளன்போடும் சொல்லுகிற அளவுக்கு அவர் எப்படி என்னைக் கவர்ந்துவிட்டார்! நினைத்தால் என் நெஞ்சமெல்லாம் துள்ளுகிறது!

பப்பியை (பத்மினியை) முதல் முதலாகச் சேலம் ரத்னா ஸ்டுடியோவில் சந்தித்தேன். அதற்கு முன் சென்னையில் பலமுறைகள் பார்த்திருந்தும் அவரது நட்சத்திரப் புகழுக்கு என்னோடு பேசுவாரோ மாட்டாரோ என்று நானே நினைத்துப் பேசாமல் இருந்துவிட்டேன். அது எவ்வளவு பெரிய தவறு என்று இன்று உணர்கிறேன்!

சேலம் ரத்னாவில் என் அறைக்குள், உரிமையோடு கதவைத் தள்ளித் திறந்து கொண்டு சீதை 'மேக்—அப்'பில் இருந்த பப்பி நுழைந்தார். ஒரு மான் அழகிய முகத்தை உள்ளே நீட்டுவதுபோல இருந்தது அந்தக் காட்சி.

'எனக்குத் தனியே என் அறையிலே இருப்பது படு 'போராக' இருக்கிறது! உங்களுக்கு எப்படியோ? உங்களுடன் பேச வந்திருக்கிறேன்!' என்று மலர்ந்த முகத்துடன் கலகலவென்று பேசினார். அந்தப் பேச்சில்—

கர்வம் இல்லை. கனிவும் அன்பும் இருந்தன. 'பிரபல நட்சத்திரம் இந்தப் பத்மினி தானா?' என்று என்னை ஆச்சர்யப்படவைக்கும் பணிவும் இருந்தது. இன்னும் சற்று நேரம் போனால் அந்தச் 'சீதை' பத்மினி வனவாசம் போகவேண்டும். இராமன் வேடம் புனைந்திருக்கும் நடிகர் என். டி. ராமராவின் தோளிலே முகத்தைப் புதைத்து விம்மியழுது 'நானும்தான் காட்டுக்கு வருவேன்!' என்று பிடிவாதம் பிடிக்க வேண்டும், இந்த 'ஜானகி'—பத்மினி. அதை எல்லாம் சற்று மறந்து, தன் நட்சத்திரப் புகழையும் துறந்து என் அறையில் புகுந்து, வலிய என்னோடு பேச வந்ததை என்றும் நான் மறக்கமாட்டேன்!



சந்தியா

இந்தச் சினிமா 'சீதை'ப் பப்பியைக் காட்டுக்கு அனுப்பி வைப்பது மகத்தான கொடுமை என்று வலியச்சென்று நானே கைகேயி வேடம் போட்ட நடிகையிடம் மன்றாடி இராமாயணக் கதையையே மாற்றியமைத்துவிட்டால் என்ன என்று எனக்கு அன்று தோன்றியது. அந்த அளவுக்கு முதல் சந்திப்பு என்னைக் கவர்ந்துவிட்டது.

கோவையில் 'மரகதம்' படப்பிடிப்பின்போது பட்சிராஜா ஸ்டுடியோவில் மீண்டும் 'பப்பி'யைச் சந்தித்தேன். அந்த இரண்டாவது சந்திப்பு என்னைப் பிரமிக்க வைத்தது. பப்பி என்னிடம் ஓர் அருமை மகளைப்போல நடந்துகொண்டாள். எந்த ஒரு பிரபல சினிமா நடிகையாவது தெருவோடு காரில் போவதை வேடிக்கை பார்க்கச் சிறுமி ஒருத்தி ஆர்வத்தோடு விரைந்தோடி வருவாளே அப்படி என்னைக் காண 'பப்பி' வந்தார்! வந்த பொழுதெல்லாம் அவரோடு அன்பும் பண்பும் சேர்ந்தே வந்தன.

பணிவு குறையாமல் பண்பு தவறாமல் பேசுகிற ஒரு நட்சத்திர நடிகை அகில இந்தியாவில் உண்டு என்றால் அது பப்பிதான். அவரைப்போலக் கூச்சமின்றிப் பழகுகிற ஓர் அழகு நட்சத்திரத்தை இனிமேல் பார்க்கமுடியுமா என்பது சந்தேகம்தான். அவரது ஒவ்வொரு குணவிசேஷங்களும் என்னை ஆச்சர்யப்பட வைத்திருக்கின்றன. அவருக்கு இருந்து வருகிற புகழுக்கும், பணத்துக்கும் அழகுக்கும் அவர் என்னோடு பேசாவிட்டாலும் பாதகமில்லை.

ஆனால் 'பப்பி' என்னை இரண்டாவது தடவையாகப் பிரமிக்க வைத்து விட்டார்! அவரது பழகுகிற தன்மையினால் 'மரகதம்' படத்திலே உண்மையான தாய்ப் பாசம் எனக்கு ஏற்பட்டு நடிக்கப் பெரிதும் உதவினார் அவர்! கதையமைப்பும் அப்படித்தான்! நான் 'மரகதம்' படத்திலே சில காட்சிகளில் சிறப்பாக நடித்திருப்பது உண்மையென்றால் அதற்கு முக்கிய காரணம் பப்பிதான்!

என்னைக் காண அவர் ஓடிவரும் ஒவ்வொரு சமயத்திலும் அவிழ்த்துவிட்ட கன்று தாய்ப் பசுவிடம் துள்ளி வருகிற உணர்வு என்னுள்ளத்தே பொங்கும்.

விஜயா ஸ்டுடியோவிலே சமீபத்தில் 'பப்பி'யைப் பார்த்தேன். அந்த மலர் முகம் என்னைக் கண்டவுடன் மேலும் மலர்ந்தது. நான் இரு கைகளையும் நீட்டி 'பப்பி'யை அணைத்துக்கொள்ளச் சென்றதும், அவர் அழகாக வாயைத் திறந்து, 'இப்போது நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்! என் திருமணத்துக்கு வாழ்த்துத் தெரிவிக்கப் போகிறீர்கள்! அப்படித்தானே?'


'பப்பி'க்குத் 'திருஷ்டி கழித்துக்கொண்டே 'ஆமாம்!' என்றேன். 'நல்ல முடிவு. குடும்ப வாழ்வு சிறப்புற அமையட்டும், உன் புகழைப்போலவே!' என்றேன்.

'பப்பி'யின் தலை தாழ்ந்திருந்தது. பண்பு உயர்ந்திருந்தது.

மற்ற சில பிரபல நட்சத்திரங்களுக்கு இருந்துவரும் அந்தச் சில குணங்கள் எதுவும் இல்லாமல் அன்றும் இன்றும் ஒரேவிதமாக இருந்துவரும் என் அருமைப் 'பப்பி', வருங்கால நட்சத்திரங்களுக்கு ஒரு வழி காட்டி.

'பப்பி'யைப்போல ஒருவரிடம் இனி நான் பழகப் போகிறேனா?






நடேசா!

'ஏம்மா?'

'ஏதாவது..'

'கடிதம்தானே, எதுவும் வரவில்லையம்மா!'

'தபால்காரனின் குரல் கேட்ட மாதிரியிருந்ததே...'

எனக்கு பத்திரிகை ஆபீஸிலிருந்து வந்ததம்மா...'

'ம்...சரி...'

ணீர் டம்ளருடன் ஓடி வந்தாள் அடுப்பங்கரையிலிருந்து சீதா.

மெள்ளத் தன் மாமியாரைத் தூக்கிப் பிடித்து உட்கார வைத்து, அவள் வாயில் வென்னீரைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டாள். காமாட்சிக்கு இருமல் கொஞ்சம் நின்றது. நிம்மதியாகச் சற்று மூச்சு விட முடிந்தது.

'சீதா!'




காமாட்சியின் இதயத்தையே பிளந்து கொண்டுவந்தது ஒரு நீண்ட பெருமூச்சு. 'எனக்கு வேண்டும் நன்றாக வேண்டும்...' என்று தன்னைச் சபித்துக் கொண்டாள். அப்படியும் அவள் உள்ளம் அமைதிபெறவில்லை. வேதனை தாங்காமல் இதயம் பொருமியது. தொண்டை கமறல் எடுத்து, இருமல் வந்தது. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு 'லொக் லொக்' என்று இருமினாள்.

'கொஞ்சம் இந்த வென்னீரைக் குடியுங்கள் அம்மா! இருமல் நின்றுவிடும்..' என்று சொல்லிக் கொண்டே கையில் வென்

'என்ன வேண்டும், உங்களுக்கு! கஞ்சி கொண்டு வரட்டுமா!' அன்பு ததும்ப பரிவுடன் கேட்டாள் சீதா.

'வேண்டாம்மா! இன்னைக்கு வடக்கேயிருந்து வர வேண்டிய ரயிலெல்லாம் வந்து விட்டிருக்குமா?'

'ம் இனிமேல் அண்ணா இன்று வர முடியாதம்மா! வருவதாக இருந்தால் இனி நாளைக்குத்தான்.'

'தபாலும் ஒண்ணும் வரலே போலிருக்கிறது..'

'போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்..' விடுவிடுவென்று தன் கணவனின் அறைக்குச் சென்று

விட்டாள் சுதா. அங்கே நடேசனைக் காணோம். ஆனால் அவனுடைய மேஜையின் மேல் இரண்டு கார்டுகள் கிடந்தன. ஒன்று யாரோஒருவர் நடேசனின் கதையைப் பாராட்டி எழுதப்பட்டது. இன்னொன்று ஜயராமன் என்று அடியில் கையெழுத்துப் போட்டிருக்கிறதே! விஷயத்தைப் படித்துக் கூடப் பார்க்கத் தோன்றவில்லை சுதாவுக்கு.

'இதோ அண்ணா கடிதம் எழுதியிருக்கிறாரே..' என்று உற்சாகத்துடன் கூவியபடி தன் மாமியாரிடம் ஓடினாள் அந்த வெகுளிப் பெண்.

'எழுதியிருக்கிறானா? நிஜமாகவா..எங்கே படி..ஆவலுடன் மொழிந்தபடி எழுந்திருக்க முயன்றாள் காமாட்சி தன் பலவீனத்தையும் மறந்து.

'..உன் கடிதம் கிடைத்தது. அம்மாவுக்கு உடம்பு தினமும் தான்..'

உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமலிருந்தாள் சுதா மேலே படிக்காமல்.

'ஏன் நிறுத்தி விட்டாய் சுதா! படியேன்..' என்றாள் காமாட்சி பரபரப்பான குரலில்.

'வேண்டாம்மா!'

'ஏன் வேண்டாம்? படி இருக்கட்டும்!' அதட்டும் பாவனையில் கூறினாள் காமாட்சி.

வேறு வழியில்லாமல் படித்தாள் சுதா.

'..அம்மாவுக்கு உடம்பு தினமும்தான் சரியாக இல்லை. அதற்காக லீவு எடுத்துக்கொண்டு வருவதற்கு என்னால் முடியாது. தவிர, இப்போது லீவு எடுத்து விட்டால் பின்னால் அம்மாவுக்கு ஏதாவது ஏற்பட்டு லீவு வேண்டியிருந்தால் கிடைக்காது. அதனால் விஷயம் முற்றின பிறகு தந்தி கொடு. வருகிறேன். இங்கே சுதாவுக்கு இன்னும் ஒரு வாரத்தில் பிரசவமாகிவிடும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்.' ஜயராமன்.

சுதாவுக்கு தன் மாமியாரின் முகத்தைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. நாம் ஏன் இந்தக் கடிதத்தை படித்துக் காட்டினோம்' என்று மெத்தவும் வருந்தினாள்.

காமாட்சி மறுபக்கம் புரண்டு படுத்துக் கொண்டாள். இருந்தபோதிலும் அவள் உடம்பு குலுங்கிய குலுக்கலிலிருந்து அவள் பொங்கிவரும் அழுகையை அடக்க முடியாமல் சிரமப்படுகிறாள் என்பது தெரிந்தது. வேதனையுடன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள் சுதா.

கடிதத்துடன் கணவனின் அறைக்குள் நுழைந்தபோது, அங்கே நடேசன் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

'உன்னை யார் இந்தக் கடிதத்தை அம்மாவுக்கு படித்துக்காட்டச் சொன்னார்கள்?' சினம் பொங்க உரத்த குரலில் கேட்டான் நடேசன்.

'என்னை மன்னித்து விடுங்கள்..' என்றாள் சுதா தழதழத்த குரலில்.

'அவள் மனத்தைப் புண்படுவைக்க விரும்பாமல்தான் சற்று முன்பு அவள் கேட்டபோது கடிதம் எதுவும் வரவில்லை என்று சொன்னேன். நீ வந்து..இனிமேல் என்னைக் கேட்காமல் இது போன்ற காரியங்களைச் செய்யாதே! ஆமாம், சொல்லிவிட்டேன்!' என்றான் நடேசன் ஆத்திரமாக.

உள்ளூரத் தன் அறியாமைக்காக வருந்தியபடி அவ்வறையை விட்டு மெள்ள வெளியேறினாள்.



சுதா தன் மாமியார் படுத்திருந்த பக்கம் எட்டிப் பார்த்தாள். அவள் இன்னமும் அழுதுகொண்டுதான் இருந்தாள் என்பது தெரியவே, பேசாமல் அடுப்பங்கரையைச் சரணடைந்தாள்.

காமாட்சி அழுது கொண்டேயிருந்தாள். அவளுக்கு என்றுமே உற்ற தோழி அழுகைதான். கண்ணீர்தான். அவள் பிறந்ததே அதற்காகத்தான் என்றும் சொல்லலாம்.

ஃ ஃ ஃ

'டக், டக்' என்ற ஒலி.

அதையடுத்து, 'அம்மா' என்றழைத்த நடேசனின் குரல் கேட்டுத் திரும்பினாள் காமாட்சி.

'அழுகிறாயா என்ன?' அன்புடன் வினவினான் நடேசன்.

'அது ஒன்றுதானேப்பா என்னால் செய்யக் கூடியது.'

'அண்ணா எழுதியிருப்பதையெல்லாம் நீ மனத்தில் வைத்துக் கொள்ளாதே! அவன் என்னமோ அசட்டுத்தனமாக..'

'நீ என்னைச் சமாதானப்படுத்துகிறாயா நடேசா! வேண்டாம். அவன் என்னிடம் இப்படித்தான் இருக்கவேண்டும். நான் செய்த மன்னிக்க முடியாத தவறுகளுக்குத் தக்க தண்டனைதான் இது. எனக்கு வேண்டியதுதான் எல்லாம்..' காமாட்சி சொல்லிக் கொண்டே போனாள்.

'என்னென்னமோ சொல்லுகிறாய். எனக்கு ஒன்றுமே புரியவில்லை..' என்றான் நடேசன் குழப்பத்துடன்.

'புரியாது நடேசா! புரியாது! உனக்குப் புரியவே புரியாது. நீ நல்லதை மட்டுமே காணும் உயர்ந்த பண்பு வாய்ந்தவன். உனக்கு எங்கே என் சின்ன புத்தி தெரியப் போகிறது..ம்..' என்று கூறி ஒரு ஏக்கப் பெருமூச்சு விட்டாள் காமாட்சி.

'அம்மா!' என்று ஆதுரத்துடன் அழைத்தபடி அன்னையின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான் நடேசன்.

'நான் செய்த பாவத்தைச் சொல்லித்தானாக வேண்டும். அதுவும் உன்னிடம் நடேசா! நீ பிறக்க இரண்டு மாதங்களுக்கு முன்பே உன் அப்பா அகால மரணமடைந்து விட்ட விஷயம் உனக்குத் தெரிந்ததுதான். கருவில் இருக்கும்போதே என்மனம் உன்னை விஷமாக வெறுக்கத் தொடங்கி விட்டது. காரணம் கேட்காதே! குழந்தையை விட கணவனைப் பெரிதாக மதிக்கும் மண்ணில் பிறந்து வளர்ந்து விட்டவள் நான். உன்னால்தான் என் நெற்றிப் பொட்டு அழிந்தது என்று எண்ணினேன். அந்த

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
அருணா
ஸ்திரீகள் டானிக்
ஆயுர்வேதாஸ்ரமம் (ப்ரைவேட்) லிட்.
மதராஸ்-17

ளன் அறியாமையால் விளைந்த வினைப் பயிர்கள்தான் எல்லாமுமே.

இரண்டு மாதத்திற்குப் பிறகு நீ பிறந்தாய். உலகத்துக் குழந்தைகளைப்போல் நிறைவாகப் பிறந்திருக்கக் கூடாதா! முழங்காலுக்குக் கீழே ஒன்றுமே இல்லாமல் முடமாக, மொண்டியாகப் பிறந்து விட்டாய். அப்போதைய என் உள்ள நிலையை விவரிக்க இப்போது எனக்குத் திறனில்லை. துயரம் எல்லையைக் கடந்து விட்டால் அங்கே குரோதம் தான் குடிகொண்டு விடுகிறது. முதல் குழந்தையையே காப்பாற்ற வகையின்றி தவித்துக் கொண்டிருந்த நான் உன்னை அந்த நிலையில் எப்படி வரவேற்க முடியும்? நீ கேட்டிருக்கிறாயா நடேசா! கொள்ளிடம் ஆற்றைப் பற்றி ஒரு கற்பனைக் கதை உண்டே! சுட்டுப் பொசுக்கும் சித்திரை மாதத்து வெய்யிலில் ஒருத்தி கையில் இளம் குழந்தையுடன் கொள்ளிடத்தில் இறங்கி அந்த அனல் வீசும் மணலில் நடந்தாளாம். சூடு பொறுக்கமுடியாமல் கால்கள் கொப்புளித்து விடவே மேலே, நடக்க முடியவில்லை அவளால்.

என்ன செய்தாளாம் தெரியுமா? குழந்தையை மணலில் போட்டுவிட்டு அதன் மேல் நடந்தே அக்கரையை அடைந்தாளாம். சொல்பவர்களே கூட இந்தக் கதையை நம்புவதில்லை. ஆனால் நான் மட்டும் நீ பிறந்த பிறகு அந்தக் கதையை நம்பினேன். நடேசா! 'கொடிது, கொடிது! வறுமை கொடிது!' என்பார்கள். நான் உன்னை உயிருடன் விட்டு வைத்தது எனக்கே ஆச்சர்யமான விஷயம்தான். உன் ஆயுசு கெட்டியாக இருந்திருந்ததால்தான் நீ என்னுடையகொடுமைகளுக்குத் தப்பிப் பிழைத்து விட்டாய்.

படிப்பு வசதியும், உடல் வலிவும் அதிகமில்லாத என்னால் அதிகம் சம்பாதிக்க முடியவில்லை. கிடைத்தது கொஞ்சம். அதில் மூன்று உயிர் வாழ்ந்தாக வேண்டும். உன் அண்ணா ஜயராமனுக்கு முழு வயிற்றுக்கும் ஆகாரம் கொடுத்த அன்று உனக்கு கால் வயிற்றுக்குப் போடுவேன். நான் அது கூடச் சாப்பிடமாட்டேன். அவனுக்கே அரை வயிற்றுக்கு போட நேர்ந்து விட்டால் அன்று உன்னைப் பட்டினிதான் போடுவேன். அவன் பெரியவனாகி சம்பாதித்து என்னைக் காப்பாற்றுவான் என்று நான் எண்ணினேன். நம்பினேன். அதன் விளைவேதான் அந்த பாரபட்சம்.

கார்ப்பொரேஷன் பள்ளியில் தான் அவன் படித்தான். உன்னை நான் படிக்கவே வேண்டாமென்று சொன்னேன். நீ கேட்கவில்லை. தரையோடு தரையாக நகர்ந்து கொண்டு போய் நீயும் எட்டு வகுப்பை முடித்துக் கொண்டாய் உனது சொந்த முயற்சியால். அவனை மட்டும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு எஸ். எஸ். எல். சி வரையில் படிக்க வைத்தேன். அவன் சுருக்கெழுத்து டைப்ரெட்டிங்கும் படித்து விட்டு ஒரு வேலையில் அமர்ந்தான். நீயோ வீட்டோடு இருந்தபடி பத்திரிகைகளுக்கு எழுதி வந்தாய். இது வரையில் ஒழுங்காக இருந்து வந்த ஜயராமன் தனக்கு வேலை கிடைத்ததும் அடியோடு மாறி விட்டான். தனக்கு வேலை கொடுத்தவரின் மகளையே மணந்து கொண்டு அவருடைய வீட்டிலேயே ஐக்கியமாகிவிட்டதுடன் என்னை அடி-



யோடு வெறுக்கவும் தலைப்பட்டான். வேறு வழியின்றி நான் உன் நிழலில் ஒண்டிக் கொண்டேன். ஒருவிதத்தில் நீ உன் அண்ணனைவிட அதிர்ஷ்டக்காரன். உனக்கு உத்தம குணவதியான சீதா மனைவியாகக் கிடைத்திருக்கிறாள். ஏழையாக இருந்தாலும் அவள் பத்தரை மாற்றுத் தங்கம். பணக்காரியாக இருந்தும் அவன்



மனைவி ஒரு சுயநலக்காரப் பேய். அவளுடைய துர்ப் போதனையினால்தானே அவன் பெற்றவளையே புறக்கணித்து விட்டான்.?

ஒரு அதிசயம் என்னவென்றால் அவ்வளவு தூரம் அவன் என்னை வெறுத்தும் என்னால் அவனை வெறுக்க முடியவில்லை. ஒரு கண்ணில் வெண்ணெயும் இன்னொரு கண்ணில் சுண்ணாம்புமாக வைத்த என் மீது நீ அன்பு மழை பொழிகிறாய். இருந்தும் உன் மீது எனக்கு அன்பு வளரவில்லை. எவ்வளவு கொடியவள் நான்.? பத்து மாதங்கள் சுமந்து பெற்றிருந்தும், அனுதாபத்துடன் போற்றப்பட வேண்டிய உன்னை நான் ஏன் இவ்வளவு வெறுக்க வேண்டும்! என் மஞ்சள் அழிந்தது. உன் குற்றமா? நீ முடமாகப் பிறந்ததும்தான் உன் குற்றமா? எல்லாம் என் குற்றம் தான். நான் செய்த பாவங்களின் பலன்தான். அதை அறியாமல் வீணாக உன்னை ஆதிமுதல் கொடுமைப்படுத்தி வந்திருக்கிறேன். நான் ஒரு தாயா?

பேய்! நடேசா, பேய்! என் குற்றங்களுக்கு மன்னிப்பே கிடையாது. உன்னை நான் வெறுத்த அளவுக்கு நீயும் என்னை வெறுத்திருக்க வேண்டும். அப்போதாவது என் மனம் தெளிந்திருக்குமோ என்னமோ! நீ அப்படிச் செய்யவில்லை. தாயாக

இருந்தும் பேயாகச் செயல் புரிந்த என்னையும். பேயானாலும் தாயல்லவா என்று அன்புடன் போஷிக்கிறாய். அதுதான் என் மனத்தைக் கொல்லுகிறது. நடேசா! கொல்லுகிறாய். குற்றம் புரிந்தவள் தண்டனையை அனுபவிக்கா விட்டாலும் வேதனைப் படத்தான் வேண்டும் போலும். அதற்காகத்தான் உன் அண்ணா— என் ஜீவாதாரம் என்று நான் நம்பியவன்—என்னை மிக மிகக் கேவலமாகக் கருதி ஒதுக்கிவிட்டான். அவன் அப்படிச் செய்வது தான் எனக்கு வேண்டியிருக்கிறது. என் பாவங்களுக்குத்தக்க தண்டனையைத்தான் அவன் கொடுக்கிறான். அதை நான் முழு மனத்துடன் ஏற்றுக் கொண்டு அனுபவிக்கவே ஆசைப்படுகிறேன் நடேசா! இனிமேல் ஜயராமனிடமிருந்து வரும் இது போன்ற கடிதங்களை மறைக்காதே! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உனக்கு நான் செய்த துரோகம் மன்னிக்க முடியாதது. எனக்கு உன் முகத்தைப் பார்க்கவே வெட்கமாக இருக்கிறது. நீ என்னை வெறுப்பதை விட, நான் அன்பைப் பொழிந்த ஜயராமனே என்னை வெறுக்கும் தண்டனைதான் எனக்கு மிகவும் ஏற்றது...'

'போதும் அம்மா! பேசாமலிரு. கதைகளிலும் படங்களிலும் வருவது போல் இதெல்லாம் என்ன பேச்சு! நீ என்னை என்றும் வெறுத்ததில்லை. வெறுக்கவும் முடியாது. எந்தத் தாயாலும் தன் குழந்தையை வெறுக்க முடியாது. வெறுத்ததாக நீ எண்ணுகிறாய் என்றால் அது உனது வீண் மனப் பிரமைதான்! அப்படியே வெறுத்திருந்தாலும் அது குற்றமாகாது. ஒரு தாய் தன் மக்களை அடிப்பதும் அணைப்பதும் இயற்கைதான். அதற்கு அவளுக்கு உரிமையுண்டு. தவிர, என்னைக் கண்டால், என் பிறவியை எண்ணுந்தோறும் எனக்கே என் மீது தாங்க முடியாத வெறுப்பு உண்டாகும்போது நீ என்னை வெறுத்தது எப்படி குற்றமாகும்? நான் அதைக் குற்றமாகவே கருதவில்லை. நீ வீணாக உன் மனத்தைப் போட்டு வருத்திக் கொள்ளாதே!' என்றான் நடேசன் அன்பொழுகும் குரலில்.

'செயலால் கொல்லுவது போதாதென்று வார்த்தைகளாலும்..என்னைக் கொல்லுகிறாயே நடேசா! மன்னிக்க முடியாத குற்றம் புரிந்துவிட்ட எனக்குத் தக்க தண்டனை தரவே மாட்டாயா? என்னை வெறுக்கவே மாட்டாயா? என்னை கோபித்துக்கொள்ளேன் நடேசா! என்னை வாயில் வந்தபடி திட்டமாட்டாயா..? என்று புலம்பிய காமாட்சி முகத்தை மூடிக்கொண்டு 'ஓ'வென்று அழுதாள், பரிதாபமாக.

அதைப் பார்க்கச் சகிக்காமல் நடேசன் 'டக், டக்' என்று தனது கட்டைக் கால்களால் நடந்து சென்று தன் அறையை அடைந்தான்.

* * *

ஒரு வாரம் விரைவில் சென்றது. காமாட்சியின் உடல் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வந்திருந்தது. டாக்டர் 'இனிமேல் அவள் அதிக நாட்கள் இருக்க மாட்டாள்' என்று கூறி விட்டார். அந்த செய்தியை தன் மூத்த மகனுக்குத் தெரிவிக்க வேண்டாமென்று கூறியிருந்தாள் காமாட்சி.



இருந்தும் நடேசன் ஜயராமனுக்கு தந்தி கொடுத்துதான் இருந்தான். காமாட்சி ஏதேதோ வாய் ஓயாமல் தன் மனம் போன வாக்கில் புலம்பிக் கொண்டேதானிருந்தாள். ஆனால் அவைகளில் ஒன்று கூட யாரைப் பற்றிய வசைமாரியும் அல்ல. தன்னையே தான் நிந்தித்துக் கொண்டாள் தன்னையே சபித்துக் கொண்டிருந்தாள். அதனால் அவள் ஆறுதல் பெற விரும்புகிறாளோ என்னமோ என்று. அவளை அவன் அவளுடைய இச்சைப்படியே விட்டுவிட்டான்.

அன்று காமாட்சியின் உடல் நிலை உச்ச கட்டத்தை அடைந்து விட்டது. ஆனால் வாய் மட்டும் புலம்புவது நிறுத்தவில்லை. 'நடேசா! அவன் வரமாட்டான். நான் செத்தால் அவன் கொள்ளி கூட போட மாட்டான். அதற்காக நீயும் போடக் கூடாது. அவ்வளவு பெருமை இந்தக் கட்டைக்கு கூடவே கூடாது. என்னை அனாதைப் பிணத்தைப் போல் யாரையாவது எடுத்துக் கொளுத்தச் சொல். அதுதான் எனக்கு சரியான தண்டனை! என் கடமையை நான் ஒழுங்காகச் செய்யாதபோது உன் கடமையை மட்டும் நீ எதற்காக செய்ய வேண்டும்..? செய்யக் கூடாது! செய்யவே கூடாது.. என்று வாய் கொண்ட மட்டும் இரைந்து கத்திக் கொண்டேயிருந்தாள்.

நடேசனும் சீதாவும் எவ்வளவோ சமாதானம் செய்தும் அவள் அடங்கவில்லை. அவள் வாயும் ஓயவில்லை. இச்சமயம் வாசலில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. அதை அடுத்து 'அம்மா!' என்றலறியபடி உள்ளே ஓடி வந்தான் ஜயராமன்.

'நீயா? பெண்டாட்டி பிள்ளைப் பெற இருக்கும்போது வரலாமா? கூடாதே! ஏன் வந்தாய்..?' என்று மெள்ளக் கேட்டாள் காமாட்சி.

'பிள்ளை பெற்று விட்டாளம்மா பொட்டைச் சனியன் பிறந்திருக்கிறது.' என்று கூறி இதயமே விண்டு விடுவது போல் அழுதபடி தன் தாயின் கைகளைத் தன் கையில் எடுத்துக் கொண்டான் ஜயராமன்.

'நம் குடும்பத்துக்குப் பெண் அபூர்வமாச்சே! ஏன் குறைத்துக் கொள்ளுகிறாய்..?' என்றாள் பெற்றவள் தன் உள்ளக் கிடக்கையையெல்லாம் மறந்து விட்டவளாய்.

பெண்ணாக மட்டும் பிறந்துவிடவில்லையம்மா! நான் உன்னை வெறுத்த குற்றத்திற்குத் தக்க தண்டனையாக, கண்ணிருந்தும் குருடாக இருந்துவிட்ட எனக்கு என் அறிவுக் கண்களை திறந்து விடுவதற்காக ஒரு குருட்டுப் பெண் பிறந்திருக்கிறதம்மா! இரண்டு கண்களும் தெரியாத



சென்னை, நேஷனல் பிலிம் எக்ஸ்சேஞ். ஸ்ரீ டி. எஸ். முத்துசாமியின் புத்திரி சௌ. நாகம்மாளுக்கும், சிதம்பரம் ஸ்ரீ பி. எஸ். சுந்தரேச சாஸ்திரியின் குமாரர் சிர. எஸ். பி. ஹரனுக்கும் மயிலாப்பூரில் சமீபத்தில் விவாகம் சிறப்பாக நடைபெற்றது. திரையுலக பிரமுகர்கள் பலரும் வந்திருந்தனர்.

அந்தப் பிறவி, பிறந்தவுடனேயே போகாமல் என்னைக் கொஞ்சம் கொஞ்சமாக கொல்லுவதற்காகவே உயிர் வாழ்கிறதம்மா! உயிர் வாழ்கிறதம்மா! இப்போதுதான் நான் உன்னை அறிகிறேன். நடேசன் பிறந்தபோது உன் மனம் என்ன பாடு பட்டிருக்கும்? நான் இன்று அந்தச் சனியனை வெறுப்பது போலத்தானே நீயும் அன்று அவனை வெறுத்தாய்? எவ்வளவு நாட்கள் அவனைப் பட்டினி போட்டுவிட்டு எனக்கு இட்லி வாங்கிக் கொடுத்திருக்கிறாய்! எனக்கு உடுத்த துணி வாங்கிக் கொடுத்துவிட்டு அவனைக் கோவணத்துடன் குடிசைக்குள் உட்கார்த்தி வைத்திருந்தாயே. அதையெல்லாம், அந்த நன்றியையெல்லாம் மறந்துவிட்ட மாபாவியம்மா நான்! உன்னை வெறுக்க வேண்டியவன் போற்றி வாழ வைத்திருக்கிறான். போற்ற வேண்டியவனை நான் உன்னை கண்ணெடுத்தும் பார்க்காமலிருந்து விட்டேன். என்னை மன்னிப்பாயா?

அம்மா! என்னை மன்னிப்பாயா? தாயின் மார்பின்மேல் விழுந்து புரண்டான் ஜயராமன்.

அன்புடன் அவன் முகத்தைப் பிடித்து நிமிர்த்திய காமாட்சி,

'மன்னிக்கிறேன் ஜயராமா! ஆனால்...' என்றாள் தயக்கத்துடன்.

'என்னம்மா, ஆனால்...?' துடித்தான் மகன்.

'எனக்கு ஒரு வாக்குறுதி தர வேண்டும்...' என்றாள் மெல்லிய குரலில் காமாட்சி.

'சொல்லம்மா சீக்கிரம்...' என்று படபடத்தான் அவன்.

'அந்தப் பரிதாபத்திற்குரிய குழந்தையை நீ உன் மற்றக் குழந்தைகளை யெல்லாவற்றையும் விட மிகமிக அன்பாக வளர்க்க வேண்டும். அனுதாபத்துடன் வளர்க்கவேண்டும்...'

'எப்படியம்மா அது முடியும்? அந்தச் சனியன் பிறக்கும் போதே தன் தாயை விழுங்கி விட்டதே...' 'ஓ'வென்று அலறினான் ஜயராமன்.

'ஐயோ! ஜயராமா! எனக்கு நேர்ந்த துன்பம் தான் உனக்கும் நேர்ந்துவிட்டிருக்கிறது. ஆனால்... ஆனால்... நான் செய்துவிட்ட... தவறை, மன்னிக்கமுடியாத குற்றத்தை, துரோகத்தை நீயும் செய்துவிடாதேப்பா! நீயும்... நீயும்... செய்து... விடாதே...' என்ற காமாட்சியின் வார்த்தைகள் முற்றுப்பெறவில்லை. அவளுடைய பூவுலக வாழ்க்கை அதற்குள் முற்றுப் பெற்றுவிட்டது.

'அம்மா! அம்மா!' என்ற சத்தம் வானைப் பிளந்தது.

பிள்ளைகள் இருவரும் தன் நிலையை அடைய வெகுநேரம் பிடித்தது.


'அண்ணா!' என்ற குரல் கேட்டு ஆர்வமுடன் தன் தம்பியின் பக்கம் திரும்பினான் ஜயராமன்.

'என்ன நடேசா!'

'அந்த... அந்தக்... குழந்தையை என்னிடம் கொடுத்துவிடு அண்ணா! நான் அவளை வளர்க்கிறேன்...' என்றான் நடேசன் தழதழத்த குரலில்.

'தம்பீ! நீ மனிதனல்லடா! மனிதனல்ல. உள்ளத்தால் உயர்ந்த மாணிக்கமடா! மாணிக்கம். உன்னை முடம் என்றெண்ணி வெறுத்த நான்தான் உண்மையில் முடமானவன்!' என்று கூறி உணர்ச்சி மிகுதியால் வாய் விட்டு அழுதான் ஜயராமன்.





# அத்தையின் சாபம்

ராஜம் நாராயணன்

'அப்பா, எனக்கு வேலை கிடைத்து விட்டது. மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளம். இனிமேல் நம் கஷ்டம் தீர்ந்து விட்டதப்பா. அந்த கம்பெனியின் உரிமையாளர் மிகவும் நல்லவரப்பா. அவர்தான் கம்பெனி மானேஜர் கூட. அவருக்கு என்னைப் பார்த்ததும் மிகவும் பிடித்துவிட்டது. முக்கியமாக என் ஊனமான காலைப் பார்த்ததும் அவர் மனம் இளகி விட்டது. ஊனம் ஊனம் என்று ஓயாமல் குறைப்பட்டுக் கொள்கிறீர்களே அப்பா, இன்று இந்த ஊனம்தான் எனக்கு வேலை வாங்கித் தந்தது' என்று தன் தந்தை வெங்கிட்டுவிடம் மூச்சு விடாமல் கூறி முடித்தாள் நளினி.

வெங்கிட்டுவின் மகிழ்ச்சியை கேட்கவா வேண்டும். ஆனாலும் அவர் மிகவும் ஒடுங்கிப் போயிருந்தார். 'நளினி நீ சம்பாதித்து நான் சாப்பிட வேண்டுமென்று என் தலையில் எழுதியிருக்கிறதம்மா. என் செய்வது. நான் பாவி. மகா பாவி. இல்லாவிட்டால் பச்சைக்கிளி போலிருக்கும் பெண்ணை சீரும் சிறப்புமாக கணவன் வீட்டிற்கு அனுப்பி மகிழாமல் வயிற்றைக் கழுவ வேலைக்கு அனுப்புவேனா?' என்று தழுதழுத்த குரலில் கூறி கண்ணீர் வடித்தார்.

வெங்கிட்டு சீரும் சிறப்புமாக வாழ்ந்தவர்தான். பர்மாவில் அழகு மனைவி அருந்ததியுடனும், ஆசை மகள் நளினியுடனும் மகிழ்ச்சியும், உல்லாசமுமாக இன்ப வாழ்க்கை நடத்தியவர் தான். அப்பொழுதெல்லாம் உலகத்தையே மதிப்பதில்லை அவர். ஆனால் பாழும் விதி குறுக்கிட்டு விட்டதே அவர் உல்லாச வாழ்வில், யுத்தம் என்ற பெயரில்.

ஃ ஃ ஃ

நளினி வேலையில் சேர்ந்து இரண்டு மாதம் ஓடி மறைந்துவிட்

டது. என்றுமில்லாத களிப்பும், துள்ளலுமாக அன்று காரியாலயத்திலிருந்து வீட்டிற்கு வந்தாள் நளினி. 'அப்பா, இன்று எங்கள் மானேஜரின் வற்புறுத்தலின் பேரில் அவர் வீட்டிற்குப் போயிருந்தேன். அவருடைய அம்மா மட்டும்தான் இருக்கிறாள் அவர் வீட்டில். அந்த அம்மாள் என்னை மிகவும் அன்புடன் வரவேற்றாள். நம் குடும்பம், உறவினர், அனைத்தையும் மிகவும் அக்கறையுடன் விசாரித்தாள். ஒன்று கூற மறந்து விட்டேனே, அந்த அம்மாளும் என்னைப் போல் ஓர் நொண்டிதானப்பா. அதனால் தானோ என்னிடம் அவ்வளவு பரிவும் பாசமும் காட்டினாள். இனம் இனத்தோடே என்று கூறுவார்களே. நாளை ஞாயிற்றுக்கிழமை கார் அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நீங்களும் என்னுடன் வரவேண்டும் அப்பா' என்று முடுக்கிவிடப்பட்ட மிஷின்போல் கூறினாள்.

மகள் கூறியதில் ஒன்றுமட்டும் திரும்பத் திரும்ப நினைவில் வந்தது வெங்கிட்டுவுக்கு. 'அந்த அம்மாளும் என்னைப் போல் ஓர் நொண்டிதானப்பா.' ஒரு வேளை அவள்தானிருக்குமோ. இல்லாவிட்டால் என்னைப் பற்றி அக்கறையுடன் விசாரிப்பானேன். வெங்கிட்டுவின் மனம் தன் கடந்த கால வாழ்க்கையை நோக்கிச் சென்றது.

ஃ ஃ ஃ

பிறந்த பத்தாவது நாள் அன்னையையும், ஐந்தாவது வயதில் தந்தையையும் பறிகொடுத்து யாருமற்ற அநாதையாக நின்ற வெங்கிட்டுவை அன்பும், ஆதரவும் பொங்க ஆதரித்து அரவணைத்தவள் ஏழை அத்தை அம்மணிதான். அம்மணி ஏழைதான் என்றாலும் அன்பு மனமும், தாராள குணமும், விசால குணமும், இரக்க சிந்தையும் உடையவள். அநாதையாக அண்ணன் விட்டுச் சென்ற குலக் கொழுந்தை வளர்த்து ஆளாக்க வேண்டியது தன் பொறுப்பும், கடமையும் என்று அம்மணி நினைத்தாள். மேலும் விவாகமாகி பல வருடங்கள் நகர்ந்தும்கூட மழலை இன்பத்தை அனுபவிக்காத அபாக்கியவதி அம்மணி.

வெங்கிட்டு அம்மணியிடம் வந்த வேளைதானோ என்னமோ, அம்மணியின் வயிறு திறந்தது. சரசுவதி பிறந்தாள். தனக்கு என்று ஒன்று பிறந்தும்கூட அம்மணிக்கு வெங்கிட்டுவிடம் இருக்கும் அன்பும் பாசமும் அணு அளவு கூட குறையவில்லை.

அத்தையின் அதீதமான அன்பும் செல்லமும்தானோ என்னவோ வெங்கிட்டு சிறு வயதிலிருந்தே முன் கோபியாகவும் முரட்டுப் பையனாகவும் வளர்ந்து வந்தான். அவனுக்கு நேர் மாறான குணம் படைத்தவள் சிறுமி சரசுவதி. நிதானமும், பொறுமையும் அந்த சிறு வயதிலேயே அவளிடம் அடைக்கலமாயிருந்தன.

அம்மணியின் வீட்டுக் கொல்லையில் ஒரு பெரிய மாமரம். அதில் காய்க்கும் காய்களுக்கே தனியான ருசியும் சுவையும் உண்டு. மரம் கொள்ளாத காய்கள் பங்குனி சித்திரையில் அந்த மரத்தில் குலை குலையாகக் காய்த்து தொங்கும். வெங்கிட்டுவுக்கும், சரசுவதிக்கும் மாமரத்தில் ஏறி அதன் கிளையில் உட்கார்ந்து மாங்காய்களை சுவைத்து தின்பதென்றால் அலாதியான ஆனந்தம்.





அன்றும் அப்படித்தான். மரக் கிளையில் உட்கார்ந்து பழுக்கும் தருணத்திலிருந்த ஒரு மாங் காயை வெகு சுவாரஸ்யமாக சுவைத்து தின்றுக்கொண்டிருந் தாள் சரசு. அது வழக்கமாக வெங்கிட்டு உட்காரும் கிளை.

வெளியே எங்கோ சுற்றிவிட்டு வந்த வெங்கிட்டு மரத்திலிருக் கும் சரசுவை பார்த்துவிட்டான். தான் உட்காரும் கிளையில் சரசு உட்காரவே வந்துவிட்டது பிர மாத கோபம் வெங்கிட்டுவுக்கு. 'சீச்சீ சீச்சீ, ஏ தடிக் கழுதை, என் இடத்தில் ஏண்டி உட்கார்ந் திருக்கிறாய்? இறங்கடி கீழே' என்று கத்தினான். மாங்காயி லேயே கவனமாயிருந்தாள் சரசு. போதும் போதாதற்கு காற்று வேறு லவ லவ என்று அடித்துக் கொண்டிருந்தது. அதனால் கீழி ருந்து வெங்கிட்டு கத்தியது மேலிருந்த சரசுவின் காதில் விழவில்லை. ஆனால் முரட்டு வெங் கிட்டுவுக்கு அது தெரியவில்லை. வேண்டுமென்றே சரசுவதி தன்னைக் கவனித்தும் சட்டை செய்யவில்லை என்று நினைத் தான். அதனால் ஆத்திரமும் அவ மானமும் போட்டியிட பரபர வென்று மரத்தில் ஏறி சரசுவதி இருக்கும் கிளைக்கு வந்தான். 'ஏ மக்கு, நான் எத்தனை தரம் சொல்லியிருக்கிறேன் என் இட த்தில் வராதேயென்று. போடி. அந்தண்டை' என்று கூறிக் கொண்டே முன்பின் யோசியா மல் முரட்டுத்தனமாக சரசுவ தியைப் பிடித்துத் தள்ளினான். ஐயோ, அம்மா என்று அலறிக் கொண்டே கீழே விழுந்தாள் சரசுவதி.

குழந்தையின் அலறல் கேட் டவே கை வேலையை அப்ப டியே போட்டுவிட்டு ஓடி வந் தாள் அம்மணி. தன் மகள் மயக்க மாக கீழே விழுந்து கிடப்ப தையும், திருதிருவென்று திரு ட்டு விழி விழித்துக்கொண்டு மரத்திலிருந்து இறங்கும் தனது வளர்ப்பு மகனையும் பார்த்ததும் அவளுக்கு விஷயம் விளங்கிவிட் டது. அந்த சமயத்தில் கூட அவள் அந்த துஷ்டப் பையனைக் கோபித்துக் கொள்ளவில்லை. மாறாக அன்புடன் அழைத்து ஆறுதல் கூறினாள்.

மரத்திலிருந்து விழுந்த சரசு உயிர் பிழைத்தாள் ஓர் ஊனத் துடன். ஆம் உயரத்திலிருந்து விழுந்ததனால் சரசுவின் ஒரு கால் சிறிது ஊனமாகி விட்டது. வெங்கிட்டுவின் கைங்கர்யத்தால் அந்த அழகிய சிறு பெண் ணிற்கு நொண்டியென்ற பட்டப் பெயரும் கிடைத்து விட்டது.

அந்தச் சம்பவத்திற்கு பிறகு வெங்கிட்டுவின் போக்கில் சிறிது மாறுதல் காணப்பட் டது. தன்னால் முடமாக்கப்பட்ட அத்தை மகளிடம் அன்புடன் பழகி வந்தான் அவன்.

வருடங்கள் நிமிடங்களென ஓடி மறைந்தன. வெங்கிட்டு இப் பொழுது சென்னையில் எம். ஏ. வகுப்பில் படிக்கும் கல்லூரி மாணவன். இதனிடையில் அம் மணியின் குடும்பத்தில் எவ்வ ளவோ மாற்றங்கள், மாறுதல்கள். அம்மணியின் கணவர் இறந்து விட்டார். மகள் சரசு பருவம் அடைந்து அழகுப் பதுமையாக விளங்கினாள். மகளின் அபார அழகையும் அதற்கு திருஷ்டி பரிகாரம் போல் காட்சியளிக் கும் முடமான காலையும் பார்க் கும்பொழுது அம்மணியின் வயிற்றை என்னவோ செய்யும். என்றாலும் ஒரு ஆறுதல். நாளை



ஙகே பட்டமும் பதவியுமாக வரும் வெங்கிட்டு தன் மகளை ஆசையுடன் மணக்க இருக்கும் பொழுது அவள் ஏன் விசாரமும் கவலையும்பட வேண்டும். அதை நினைத்துத்தானே கணவன் விட்டுச் சென்ற எல்லா ஆஸ்தி யையும் செலவு செய்து வெங் கிட்டுவைப் படிக்க வைத்து வந் தாள். அதிகம் கூறுவானேன்? தன்னிடமிருக்கும் கடைசி ரூபாய் வரையில் வெங்கிட்டுவிற் காக தியாகம் செய்தாள் அம்மணி.

அதற்கேற்றாற் போல் 'அத்தை என்னால் ஊன மாக்கப்பட்ட உங்கள் மகளை ஒருநாளும் நான் கைவிட



மாட்டேன்' என்று பல தட வைகள் உறுதிமொழி கூறியிருந் தான் வெங்கிட்டு.

அன்றுதான் பரீட்சை முடி ந்து வெங்கிட்டு வரவேண்டிய தினம். அடக்கமுடியாத ஆவலும் சொல்ல முடியாத மகிழ்ச்சியும் பொங்க மருமகனை வரவேற்க காத்திருந்தாள் அம்மணி. இனம் தெரியாத இன்பமும் களிப்பும் போட்டியிட ஆசை அத்தானை எதிர்பார்த்துக் கொண்டிருந் தாள் சரசு.

காலையில் வரவேண்டிய வெங் கிட்டு வரவில்லை. உச்சிபொழு தும் தாண்டி மாலையும் வந்துவிட் டது வழி பார்த்து வழி பார்த்து சலித்து விட்டது. அம்மாவுக்கும் பெண்ணுக்கும். வெங்கிட்டுவுக்கு பிடிக்கும் பிடிக்குமென்று ஆசை யாசையாக அம்மணியும் சரசு வும் சமைத்து வைத்த உணவுப் பொருள்கள் யாவும் கைபடாம லேயே கிடந்தன.

மாலை மங்கி அந்திப்பொழுது ஆரம்பித்து விட்டது. வெங் கிட்டு வரவில்லை. ஆனால் அவன் பிரதிநிதியாக வந்தது அவன் எழுதிய கடிதம்.

கடிதத்தை வாங்கி ஆவலும் பரபரப்புமாக படித்த சரசுவதி

'ஐயோ அம்மா' என்று கத்திவிட்டாள். அம்மணிக்கு விஷயம் ஒன்றுமே புரியவில்லை. 'ஏனடி சரசு, வெங்கிட்டுவுக்கு ஒன்றுமில்லையே' என்று கவலையுடன் விசாரிக்கும் தாய்க்கு பதிலளிக்கும் நிலையில் இல்லை மகள்.

அம்மணிக்கு ஒன்றுமே புரியவில்லை. மகள் போட்ட கடிதத்தை எப்படியோ எழுத்தைக் கூட்டிப் படித்த அவளும் கல்லாக மரமாக சிலையாக நின்று விட்டாள். கடிதத்தின் சாராம்சம் இதுதான். அம்மணியின் மகள் நொண்டியாம். படிப்பற்றவளாம். நொண்டிப்பெண்ணை மணந்து வாழ்வு பூராவும் அவஸ்தைப்பட அவன் ஒன்றும் ஏமாந்த சோணகிரி அல்லவாம். தன்னை எடுத்து வளர்த்து படிப்பித்தது அம்மணியின் கடமையாம். அதற்காக நொண்டிப் பெண்ணை அவன் தலையில் வைத்துக் கட்டுவது அநியாயம் மட்டும் இல்லையாம். அம்மணியின் சுயநலம் கூடதானாம். அவனது மாமா பர்மாவிலிருந்து வியாபார விஷயமாக சென்னை வந்தவரை தற்செயலாக அவன் சந்தித்தது மிகவும் நல்லதாய்போய் விட்டதாம். இல்லாவிட்டால் அம்மணியின் சுயநலத்திற்கு அவன் பலியாகியிருப்பானாம். மாமாவின் ஒரே மகள் அருந்ததி அழகும் படிப்பும் நிறைந்தவளாம். அருந்ததிதானாம் வெங்கிட்டுவின் படிப்பிற்கும் அந்தஸ்திற்கும் ஏற்றவள். இனிமேல் அம்மணியின் குடும்பத்திற்கும் அவனுக்கும் சம்பந்தமே இல்லையாம்.

எப்படியிருக்கும் அம்மணிக்கு இந்தக் கடிதம். தாயில்லா பிள்ளை, தாயில்லா பிள்ளை என்று அதிக அன்பும் அளவுக்கு மீறிய செல்லமுமாக வளர்த்தாளே. தன் ஒரே மகளை முரட்டுத்தனத்தாலும் துஷ்டத்தனத்தாலும் முடமாக்கிய பொழுதுகூட கடிந்து ஒரு வார்த்தைகூட சொல்லாமல் அண்ணன்மகன் அண்ணன் மகன் என்று நேசித்தாளே! அந்த துஷ்ட பையனுக்காக பரிந்து பேசி கட்டியவனின் கோபத்திற்கும் துவேஷத்திற்கும் பாத்திரமானாளே. தனது பொருள் அனைத்தையும் கரைத்து அந்த நன்றி கெட்டவனுக்கு படிப்பும் பட்டமும் பதவியும் பெற வைத்தாளே. தனது வயிற்றில் பிறந்ததை விட பன்மடங்கு ஆசையும் ஆர்வமுமாக நேசித்தாளே. அதற்கெல்லாம் பிரதிபலனா இது?

தாய் தந்தையற்று அநாதையாகத் தெருவில் நின்றபொழுது சகோதரி மகன் என்றுகூட பார்க்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு போன மாமா இப்பொழுது உரிமையுடன் உறவாட வருகிறாரோ?

அம்மணியின் உள்ளம் எரிமலையாக குமுறியது. ஊனக்காலுடன் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் அழகு மகளை பார்க்கும் தோறும் பெற்ற வயிறு பற்றி எரிந்தது.

பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு அல்லவா. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள் அம்மணி. அவளால் முடியவில்லை. கடைசியில் வந்தது வரட்டுமென்று கையிலிருக்கும் சொற்ப தொகையை திரட்டிக் கொண்டு மருமானை பார்க்கப் பட்டணம் சென்று விட்டாள். மிகுந்த சிரமத்திற்கும் அலைச்சலிற்கும் பிறகுதான் அவளால் வெங்கிட்டுவின் இருப்பிடத்தை அறிய முடிந்தது.

திடீரென்று வந்து நின்ற அத்தையைக் கண்டதும் திடுக்கிட்



டான் வெங்கிட்டு. படியேறிவந்தவளை வாவென்றுகூட அழைக்கவில்லை அந்த நன்றி கெட்டவன்.

ஆனால் அம்மணி அதையொன்றும் பொருட்படுத்தவுமில்லை. கவனிக்கவுமில்லை. அவள் மனம் முழுவதும் தனது நொண்டி மகளின் இன்ப வாழ்விற்காக இறைவனை வேண்டிக் கொண்டிருந்தது.

வெங்கிட்டுவின் காலில் விழுந்து கெஞ்சினாள் தன் மகளை மணக்கும்படி; கல்லும் கரையும்படி வேண்டினாள். ஆனால் என்ன கெஞ்சியும், என்ன வேண்டியும் வெங்கிட்டுவின் மனம் இளகவில்லை. கடைசியில் ஆத்திரமும், துக்கமும், ஏமாற்றமும் அடைந்த அம்மணி 'சீச்சீ' துஷ்டா நீயும் ஒரு மனிதனா? மனித உருக் கொண்ட மிருகமே. உன்னை நல்லவன் என்று நினைத்து உனக்காக என் உழைப்பு, பொருள் யாவற்றையும் தியாகம் செய்தேனடா. கொடிய விஷத்தைக் கக்கும் நல்ல பாம்படா நீ. உன்னால்தானேடா என் மகள் முடமானாள். ஊனமானாலும் பரவாயில்லை அவளை நானே மணக்கிறேன் என்று கூறி அவள் விவாகத்திற்கென்று நான் வாயையும் வயிற்றையும் கட்டி உடல் தேய உள்ளம் சோர சேர்த்து வைத்திருந்த அவ்வளவு பணத்தையும், நயமாகப் பேசி உன் எம். ஏ. பட்டத்திற்காக பறித்துக் கொண்டு எங்களை வஞ்சித்து விட்டாயேடா? அடுக்குமாடா உனக்கு இந்த அக்கிரமம். இன்றைக்குப் படித்த அகந்தையும் புது உறவும் உன் கண்ணை மறைத்திருக்கிறது. அதனால் என் உள்ள குமுறலும் என் மகளின் மன நிலையும் உனக்குப் புரியாது. ஆனால் உனக்கும்



"ஐயா சாமி! கண் தெரியாத குருடன் நானுங்க! ஒரு நாலணா போடுங்க சாமி!"

"எதற்கடா நாலணா?"

"கண் காட்சி பார்க்கத் தானுங்க!"

ஒரு பெண் பிறந்து என் சரசுவைப் போல் முடமாகி, பலராலும் நொண்டி நொண்டி என்று தூற்றப்பட்டு, கல்யாணம் செய்ய முடியாமல் நீ திண்டாட வேண்டும். அப்பொழுதுதானடா என் வயிற்றெரிச்சல் உனக்குத் தெரியும். என் குமுறும் உள்ளம் உனக்குப் புலப்படும். என் அவல நிலையை நீ அறிவாய். என் நிலைமையை நீ உணருவதற்காகவேனும் உனக்கு ஒரு நொண்டிப் பெண் பிறக்க வேண்டும்' என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு கண்ணீரும் கம்பலையுமாக தன் இருப்பிடம் வந்து விட்டாள்.

வாலிப மிடுக்கில் படித்துப் பட்டம் பெற்ற பெருமையில், பணத் திமிரில், புது உறவில்

வெங்கிட்டு அத்தை கூறியவற்றை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை.

மாமன் மகள் அருந்ததியை மணந்து கொண்டு மாமாவுடன் பர்மா சென்று விட்டான். அங்குதான் அவன் மாமா தொழில் நடத்தி வந்தார். தன் வியாபாரத்திலேயே வெங்குட்டுவையும் சேர்த்துக் கொண்டார். அதன் பிறகு தனக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்து இன்று நடுத்தெருவில் நிற்கும் அத்தையையும், தன்னால் முடமாக்கப்பட்ட நொண்டி சரசுவையும் அறவே மறந்து விட்டான் அவன்.

ஆனால் எப்பொழுதாவது அத்தை கடைசியாக இட்ட சாபமும், நொண்டிக் காலும், சோகம் ததும்பும் முகமுமாக நிற்கும் சரசுவும் அவன் மனத்திரையில் தோன்றி மறையும்.

அருந்ததியின் வயிற்றில் நளினி உதித்தபொழுது வெங்கிட்டு அடைந்த திகிலும் குழப்பமும் சொல்லி முடியாது. அந்த நாட்களில் அவன் தவித்த தவிப்பும், அடைந்த மனோ வேதனையும் அந்த கடவுள் ஒருவருக்குத்தான் தெரியும். அத்தையின் சாபம் பலித்துவிடக் கூடாதே, தனக்குப் பிறக்கும் குழந்தை ஊனமில்லாமல் நன்றாக இருக்க வேண்டுமே என்று அவன் வேண்டாத தெய்வமில்லை.

நல்ல வேளையாக நளினி பிறக்கும்பொழுது அழகுப் பதுமையாக கொழு கொழுவென்று ஒரு குறைவும் இல்லாமல்தான் பிறந்தாள். செக்க செவேலென்று திடமான அவயவங்களுடன் பிறந்த தன் மகளைப் பார்த்துப் பூரித்துப் புளகாங்கிதம் அடைந்தான் வெங்கிட்டு.

வனஜாவுக்கு ஆறு வயது நடந்து கொண்டிருந்தபொழுதுதான் அந்த சம்பவம் நடந்தது. ஜப்பானின் தாக்குதலுக்கு இரையான பர்மாவிலிருந்து அனைவரும் இந்தியா திரும்பிக் கொண்டிருந்தனர். துரதிருஷ்டவசமாக வெங்கிட்டுவின் குடும்பத்திற்கு கப்பலில் இடம் கிடைக்கவில்லை. கால்நடையாக கிளம்பிய எண்ணற்ற குடும்பங்களில் வெங்கிட்டுவின் குடும்பமும் ஒன்று.

வரும் வழியில் ஏற்பட்ட நோயால் அருமை மனைவியை இழந்தான் வெங்கிட்டு. அந்த துக்கம் தீருவதற்குள் ஒரு பாறையிலிருந்து கீழே உருண்டு விழுந்த நளினியின் கால் எக்கச்சக்கமாக சுளுக்கி விட்டது. ஓரடி கூட எடுத்து வைக்க முடியவில்லை அந்த சிறுமியால். எப்படியோ மகளை சுமந்து எண்ணற்ற இன்னல்களுக்குப் பிறகு உயிருடன் தாய்நாடு வந்து சேர்ந்தான். ஆனால் அந்தோ பரிதாபம் உடனே சிகிச்சை செய்யாததாலும் உள்ளில் காயம் பலமாக ஏற்பட்டிருந்ததாலும் சிறுமி நளினியின் கால் முடமாகிவிட்டது. வெங்கிட்டு எது நடக்கக் கூடாது என்று ஓயாமல் வேண்டினானோ, எது வரக்கூடாது என்று அல்லும் பகலும் கவலைப் பட்டானோ அது நடந்துவிட்டது.

அத்தையின் சாபம் பலித்துவிட்டது. அவன் அருமை மகள் நொண்டி.

பிறகு எவ்வளவோ கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள், சங்கடங்கள். மிகுந்த சிரமத்திற்குப் பிறகு வெங்கிட்டுவிற்கு சென்னையில் ஒரு வேலை கிடைத்தது.



ஊனமான ஏழைப் பெண்ணை யார் மணப்பார்கள்? அதனால் வெங்கிட்டு தன் புதல்வியை நன்றாகப் படிக்க வைத்தான். நளினி பி. ஏ. பாஸ் செய்துவிட்டாள். அதற்குள் வெங்கிட்டு மிகுந்த பலஹீனம் அடைந்து நோயாளியாகிவிட்டான். தான் சரசுவுக்கு இழைத்த துரோகம் அவனை அல்லும் பகலும் அலைக்கழித்தது. நாற்பத்தைந்து வயதுதான் நிரம்பியிருந்ததாயினும் அறுபது வயது கிழவனைப்போல் தலை நரைத்து எழுந்து நடமாடக்கூட முடியாத நிலை எய்திவிட்டான். அவன் இதுவரையில் பார்த்து வந்த வேலையும் போய்விட்டது. இந்த நிலையில் நளினி வேலை செய்யாமல் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்?

அடுத்தபடியாக நளினியின் வேலை தேடும் படலம் ஆரம்பமாயிற்று. நல்ல வேளையாக அவளுக்கு சரவணா ஏற்றுமதி இறக்குமதி கம்பெனியில் வேலையொன்றும் கிடைத்துவிட்டது.

மகள் வேலை செய்யும் ஸ்தாபனத்தின் அதிபன் ரமணனின் தாய் ஒரு நொண்டி என்று அறிந்ததும் தன் கடந்த கால வாழ்க்கை சிந்தனையில் லயித்திருந்த வெங்கிட்டுவை, 'அப்பா, அப்பா! எங்கள் கம்பெனி முதலாளி வீட்டிலிருந்து கார் வந்துவிட்டது. முதலாளியின் அம்மா நம் இருவரையும் இப்பொழுதே அங்கு வரும்படி சொல்லி அனுப்பியிருக்கிறார்களாம்' என்ற மகளின் கிண்கிணி குரல் இவ்வுலகத்திற்கு கொண்டு வந்தது. மறுமொழி கூறாமல் மகளையின் தொடர்ந்தான் வெங்கிட்டு.

'நளினி, வா அம்மா. அத்தான் வாருங்கள். எங்கே நீங்கள் வர



வக்கீல்:—நீ சொல்றதெல்லாம் ஒரே பொய்யும் பித்தலாட்டமுமா இருக்கே! நீதிபதி நம்பவேண்டாமா? பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லணும்!

கக்ஷிக்காரர்:—என்னாங்க நீங்க?... அதுக்காகத்தானே உங்களைத் தேடிக்கிட்டு வந்தேன்!...

மறுத்துவிடுவீர்களோ என்று கவலைப்பட்டேன். நளினியை முதன்முதலாகப் பார்த்த பொழுதே அவள் உங்கள் மகளாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். அந்த காலத்தில் நீங்கள் எப்படி இருந்தீர்களோ அப்படியே இருக்கிறாள் அத்தான் உங்கள் மகளும். அப்புறம் அவளிடம் பேசி விவரம் அறிந்தபொழுது, என் சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது' என்று கலகலவென்று பேசும் சரசுவையும் அவள் விதவைக் கோலத்தையும் பார்த்து திகைத்து நின்றான் வெங்கிட்டு.

'ஏன் திகைக்கிறீர்கள் அத்தான், உங்கள் அத்தையின் நொண்டிப் பெண் சரசுதான்

நான். நீங்கள் எங்களை கைவிட்ட பிறகு அனைத்தையும் இழந்து அநாதைகளாக நின்றோம். வேறு வழியில்லாமல் அம்மா புதிதாக நம் ஊரில் குடியேறியிருந்த செல்வந்தர் சரவணன் வீட்டில் சமையல்காரியாக அமர்ந்தாள். அவர்தான் இந்தக் கம்பெனியின் ஸ்தாபகரும் பல லட்சம் சொத்தின் சொந்தக்காரருமான சரவணன்.'


'சற்று வயது அதிகமானாலும் அன்பும், பண்பும் உடையவரும், விசால மனமும், பரந்த குணமும் படைத்தவருமான அந்த உத்தமர் அதாவது ரமணனின் தந்தை முழு மனதுடன் என்னை மணந்துகொண்டார். தாயை அறியாத சிறுவன் ரமணனும் என்னை தன் சொந்த அம்மா என்றே நினைத்தான். நானும் அவனை என் சொந்த மகன்போல் நடத்தி வளர்த்தேன். ரமணன் என் மூத்தாள் மகன்தான் என்றாலும் என்னைத் தாயினும் மேலாக நினைப்பவன். என் பேச்சிற்கு மறுவார்த்தை சொல்லாதவன்.'

'சரசு, உன்னையும் அத்தையையும் அன்று ஏமாற்றியதற்கு நான் வேண்டியது அனுபவித்துவிட்டேன். அன்று அத்தை அனுபவித்த துயரமும், துக்கமும், மனோவேதனையும் இன்று நான் அனுபவிக்கிறேன். எனக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்த அந்த உத்தமியின் சாபம் பலித்துவிட்டது. என் மகளைப் பார்க்கும்பொழுதெல்லாம், சோகமும் வேதனையுமாக நொண்டிக் காலுடன் நீ வளைய வரும் காட்சிதான் எனக்குத் தோன்றும். சரசு உன்னை நான் மிகவும் கொடுமைப்படுத்திவிட்டேன். என்னை மன்னிப்பாயா சரசு?' என்று கூறி கோவென்று அழுதுவிட்டார் வெங்கிட்டு.

அழாதீர்கள் அத்தான், நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் அதைப்பற்றி நினைத்து அழுதோ, புலம்பியோ ஒன்றும் ஆகப் போவதில்லை. மேலே நடக்கவேண்டியவைகளைப்பற்றி யோசிப்போம். உங்கள் பெண் வாழ்வை மலரச் செய்வதற்கு நானும் என் மகனும் ஒரு முடிவு செய்துவிட்டோம். என் வேண்டுகோளோ, கட்டளையோ ஒன்றும் இல்லாமல் என் மகனாகவே நளினியை மணந்துகொள்ள முன்வந்துவிட்டான். அவனுக்கு என்னைப் பார்த்துப் பார்த்து என்னிடம் இருக்கும் அதீதமான அன்பால், ஊனமான பேர்களிடமெல்லாம் இரக்கமும் அன்பும் பிறந்துவிட்டது. தவிரவும், நளினியின் அழகும், அறிவும், அடக்கமும் அவனை ஆட்கொண்டுவிட்டது. கவலைப்படாதே அத்தான், இனிமேல் நளினிதான் இந்த வீட்டு எஜமானி' என்று சிரித்த முகத்துடன் கூறும் சரசுவதியை சாதாரணப் பெண்ணாகக் கருத முடியவில்லை வெங்கிட்டுவால். வானத்திலிருந்து தேவதை ஒன்று இறங்கி வந்து தனக்கு வரம் கொடுப்பதாகத் தோன்றியது அவருக்கு.

வெங்கிட்டுவுக்கு பேசவே நா எழவில்லை. தனது நீசத் தன்மையும், சரசுவின் பரந்த மனமும், ரமணனின் பெருந்தன்மையும் சேர்ந்து அவரைப் பேசவொட்டாமல் செய்துவிட்டன. அத்தையின் சாபம் பலித்துவிட்டது. ஆனால், அந்த அன்பு மனம் படைத்த உத்தமி தன் மகளாலேயே அதற்கு விமோசனமும் அளித்துவிட்டாள்.






பார்த்தசாரதி பாதையோரத்தில் நடந்துகொண்டிருந்தார். அவர் கால்கள் 'கிட்டி' போட்டதைப் போல் கொஞ்ச தூரத்திற்குக் கொஞ்ச தூரம் நின்று நின்று சென்றன. அவருக்கு உடம்பில் பலமில்லை. உள்ளத்திலாவது தெம்பு இருந்ததா? அதுவும் இல்லை. இரண்டும் இல்லை என்பதை அறிந்த கையிலிருந்த பை, வேகமாக அவரைக் கீழே இழுத்தது. அதன் பளுவைச் சுமக்க முடியாமல், தூக்கிக்கொண்டு நடந்தார்.

அவருக்கு அந்தப் பையும், பையிலிருந்த சாமானும் அவ்வளவு பளுவாகத் தெரியவில்லை. ஆனால், அவர் மனப் பளுதான் அதிகமாகியிருந்தது. நடந்து செல்லும் வழி 'மெயின் ரோட்'டாக இல்லாவிட்டாலும், நேரம் மாலையாக இல்லாமலிருந்தாலும், நிச்சயமாக அவர் 'கோ'வென்று அலறியிருப்பார். இல்லை 'ஐயோ'வென்று தலையையாவது, வயிற்றையாவது, நெஞ்சையாவது பிடித்துக்கொண்டு அழுதிருப்பார். மனப் பளுவின் அழுத்தம் தாளாமல் அவர் தள்ளாடினார். வளமில்லாத—மகிழ்ச்சியில்லாத—கவலை சூழ்ந்த—வாழ்க்கையை நினைத்தபோது அவருக்குக் 'கிர்'ரென்று தலை சுற்றியது.

ஒரு கணம் நடை பயிலுவதை நிறுத்திக் கொண்டு, வழியைப் பார்த்து நிதானித்துக் கொண்டார்.

அவர் குடும்பம் என்று ஏற்பட்டதிலிருந்து—குடும்பத்திற்குத் தலைவன் என்று அதற்கான தொடர்புகள் அதாவது மனைவி, மக்கள்—

பெற்றோர்— உற்றார்— என்று ஏற்பட்டு-அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு ஏற்பட்டதிலிருந்து, அவருக்கு—அவர் மனத்துக்கு வருத்தம், வேதனை, கண்களில் கலக்கம், நெஞ்சில் குழப்பம். இத்தனைக்கும் காரணம் அவருக்குப் போதிய வருமானம் இல்லாதுததான். ஊதியம் கிடைக்காததற்குக் காரணம் அவருக்கு உயர்ந்த உத்தியோகம் இல்லாததுதான். உயர்ந்த உத்தியோகம் இல்லாததற்குக் காரணம் சரியான படிப்பு இல்லாததுதான். படிப்பு இல்லாததற்குக் காரணம் அவர் பெற்றோர்கள் வசதி குறைந்தவர்களாக இருந்ததுதான்.

இத்தனையும் பார்த்தசாரதியின் நெஞ்சில் நிழலிட்டன. 'நம்ம பெற்றோர் நமக்கு உதவலே. நம்ம படிப்பு நமக்குக் கை கொடுக்கலே. ஆனால், நம்மகிட்ட படித்து, பட்டம் பெற்று உயர்ந்த பதவியில் இருக்கும் அவன்கூட உதவலியே!' நெஞ்சு அடைத்துக் கொண்டது அவருக்கு. சென்ற காலத்தை நினைக்க நினைக்க அவர் மனம் ரொம்பவும் சங்கடப்பட்டது. யாரை வாழ்நாள் முழுதும் நம்பி, நல்ல காலம் வருமென்று கருதி உதவி செய்தாரோ அவனே அவருக்கு உதவவில்லை.'

அருணாசலம் ஐ. ஏ. எஸ். பாஸ் செய்து, 'செக்ரட்டேரியட்'டில் ஏதோ ஒரு மந்திரிக்குக் காரியதரிசியாக வேலை பார்க்கிறான். ஆயிரம் ரூபாய்க்குக் குறையாத சம்பளம். அந்தக் காலத்தில் அவர்—பார்த்தசாரதி வாத்தியார் அவனுக்காக எவ்வளவு பாடுபட்டார்? நன்றாகப் படிக்கக் கூடியவன். ஆனால், படிக்க வசதியே இல்லாதவன் என்று அவனுக்காக அவர் எத்தனை தருமப் பிரபுக்கள்கிட்டே போய், பல்லைக் காட்டி, பொய்யாகச் சிரித்து, காக்காய் பிடித்து, அவனுக்காக—அருணாசலத்திற்காக—அவன் நன்றாகப் படிக்க வேண்டுமென்பதற்காக எவ்வளவோ பாடுபட்டார். பணத்தைத் தேடி, வசதி செய்து, அவன் கவலையில்லாமல் படிக்க வசதி செய்தார். ஆனால், அவர் செய்த உதவிகளை அவன்—அருணாசலம் — கொஞ்சமாவது மனத்திலே வைத்தானா?

அன்று அருணாசலத்திற்காக அவர் செய்தது—பாடுபட்டது—எல்லாமே அவர் கவனத்திற்கு வந்தது. ஆற்றில் கரைத்த பெருங்காயம்போல் அது பாழ்பட்டது. நினைவுகள் விரிய விரிய அவருக்குத் துக்கத்தால் தொண்டை அடைத்துக்கொண்டது. கண்கள் கலங்கின. விளிம்பில் கட்டிய நீர்முத்தை வழித்தெறிய எண்ணமின்றி அவர் நடந்தார்.

ஐந்து பெண்கள் பெற்றால் அரசனும் ஆண்டியாகப் போய்விடுவானென்று சொல்லுவார்கள். ஆறு பெண்களைப் பெற்றவர் என்னவாகப் போவது? அதை யாரும் சொல்லவில்லையே. அதற்காகப் பார்த்தசாரதி பரதேசியாகப் போய்விடவில்லை. முயன்று முயன்று, குருவி மூக்கால் சேர்ப்பதுபோல் எதை எதையோ சுருக்கி, எப்படியோ ஐந்து பெண்களை ஐந்து வீட்டு மருமகளாக்கிவிட்டார். இனி இருப்பவள் ஒருத்தி. கடைக் குட்டி. அந்தப் பெண்ணை எவனுடைய காலிலாவது கட்டிவிட்டால் அவர் 'அக்கடா'ன்னு இருக்கலாம். ஐந்து மருமகன்மார்கள் கொஞ்சம்—ஆமாம்; கொஞ்சம் ஆதரவு காட்டினால்கூட கடைக்




குட்டியின் கல்யாணம் 'ஜாம் ஜாம்' என்று நடந்துவிடும். ஆனால், அவர்கள் ஆதரவாய் இருக்கிறதைவிட, ஏதாவது அவருக்கு ஆதரவாய் இருப்பதைப் பிடுங்கிக்கொண்டு போகாமலிருந்தால் நல்லது.

பார்த்தசாரதி என்ன செய்வார்? நெஞ்சம் ஊமை அழுகை அழுதபோது கைகளைத்தான் பிசைந்துகொண்டார். கௌரவமாய்—அவருக்குத் தெரிந்தவர்களிடத்தில்—அவரிடம் படித்தவர்களிடத்தில் பிச்சைக் கேட்டார். ஆனால், அவருக்கு உதவியவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

'நம்முடைய மகளின் கல்யாணத்தை, சர்க்கார் காரியதரிசி அருணாசலத்தைப் பிடித்தாலே நடத்திவிடலாம்' என்று நெஞ்சில் இனிப்பைத் தடவிக்கொண்டு போனார்.

போன இடத்தில் அருணாசலம் இருந்தான். அருவருப்பை வெளிக்காட்டாது, தன்னுடைய பழைய வாத்தியாயர் என்பதால் கொஞ்ச நேரம் அன்பு 'வெளியே' தெரியுமாறு பேசினான். அவர் சொன்ன விஷயத்தை—அவர் கேட்ட உதவியை—அவர் விரும்பிய ஆதரவைக் கேட்டவுடனே கலங்கிப் போனான். தன்னை இந்த நிலைக்குக் கொண்டுவந்தவரின் நிலை கண்டு அவன் கலங்கிப் போகவில்லை. 'இவருக்கு எங்கேயிருந்து பணத்தைக் கொடுப்பது?' என்றுதான் அவன் கலங்கிப் போனான். அதற்குத் தகுந்தாற்போல் பதில் சொல்லிவிட்டான்.

'என்ன செய்யறது சார்! உங்களுக்குச் செய்யணுமுன்னு ஒரே ஆசைதான். ஆனா...ஆனா...செய்யத்தான் என் கையிலே சக்தி இல்லே. உத்தியோகம் பெரிய உத்தியோகம்தான். என்ன பிர



யோசனம்? வர்ற சம்பளம் கட்டுபடியாகல்ல. என்கிட்ட தற்சமயம் அவ்வளவு பெரிய விஷயத்திற்கு உதவற அளவுக்கு பணமில்லையே சார்! வசதி இல்லையே சார்! அஞ்சோ பத்தோன்னு உதவறேன்!' வார்த்தைகளைப் பிட்டுப் பிட்டு அவன் பேசிவிட்டான். 'ஆற்றங்கரையிலிருக்கும் மரத்தின் வேரே உதவவில்லை. கரையருகே முளைத்திருக்கும் நாணலா உதவப் போகிறது. பெரிய உத்தியோகஸ்தன் அருணாசலமே கையை விரித்துவிட்டான். மற்றவர்கள் எங்கே உத...'

நெஞ்சில் வார்த்தைகள் கலங்கின. அவர் கலங்கிப் போனார். அவர் குன்றி கூனிப் போய்விட்டார். அவர் நம்பிக்கை சிதைந்து போனதுமட்டுமல்ல – அவரையே அது அழித்துவிடுமோ என்றும் ஆகிவிட்டது. அவருக்கு மயக்கம் வரும்போலிருந்தது.

'டேய் பியூன்! ரெண்டு கூல் 'ட்ரிங்க்ஸ் கொண்டு வாடா!' என்று உத்தரவிட்டான் அருணாசலம். பையன் ஓடினான்.

'வேண்டாம்ப்பா!' என்று கூறிக் கொண்டே பார்த்தசாரதி எழுந்து வழியைப் பார்த்து—விதியை நினைத்து நடந்தார்.

அருணாசலம் அவரை ஒப்புக்காகவும் தடுக்கவில்லை. பணத்தோடு பணம் சேர அவன் கஞ்சனாகமட்டுமாகவில்லை. உள்ளத்தை இரும்பாகவும் ஆக்கிக்கொண்டான்.

'எல்லாம் என் தலைவிதி' என்று நினைத்து பார்த்தசாரதி நடந்தார். எதை வேண்டுமானாலும்—யார் வேண்டுமானாலும் மாற்றிவிடலாம். ஆனால், தலையெழுத்தை யார் மாற்றி எழுத முடியும். எந்த ரப்பரால் அந்த



எழுத்தை அழிக்க முடியும்? காலம்! ஆனால், பார்த்தசாரதி பட வேண்டியது இன்னும் இருக்கிறதே!

அப்படித்தான் நினைத்து பார்த்தசாரதி தன்னைத்தானே தேற்றிக்கொண்டார். பின் வேறு யார் சொல்லப் போகிறார்கள்; தேற்றப் போகிறார்கள்? அவர் நடந்துகொண்டிருந்தார்.'

ஐம்பது மைல் வேகத்தில் போன கார் 'சரக்'கென்று பிரேக் போட்டு நின்றது. பார்த்தசாரதி உண்மையிலே பயந்துவிட்டார். 'பாவி மகன்' என்று வாயால் திட்டி—திடுக்கிட்டு நின்றார்.

காரிலிருந்து—கலையாத சில்க் சட்டை போட்ட ஒரு பருத்த மனிதர் இறங்கி பார்த்தசாரதி அருகே ஓடிவந்தார். மனிதன் பேரில் காரை ஏற்றிவிட்டு, காற்றாய்ப் பறக்கும் பட்டணத்தில், பிரேக்கைப் போட்டதனால் நடைபாதை மனிதர் பயந்து போனாரோ என்று அவர் பயத்தைப் போக்க அந்த மனிதர் வருவதாகப் பார்த்தசாரதி நினைத்தார்.

'ஸார்! ஸார்! என்ன ஸார்? என்னை தெரியலை சார்?' என்று அந்தப் பருத்த மனிதர் கேட்டார். கருத்துத் தடித்த உதடுகள் பிளந்து, பற்கள் அத்தனையையும் காட்டிச் சிரித்தார்.

கார் நின்ற வேகத்தில் பயந்து, கலங்கிப்போயிருந்த பார்த்தசாரதி, மூக்குக் கண்ணாடியைச் சரி செய்துகொண்டு, எதிரே நின்றுகொண்டிருக்கும் மனிதரை உற்றுப் பார்த்தார். விரல்கள் நெற்றிச் சுருக்கத்தில் சூடேற்றிக் கொண்டிருந்தன. மழுங்கிப் போன நினைவைச் சூடேற்றி, எதிரே நிற்கும் மனிதரை இனம் காண முயன்று கொண்டிருந்தார். நெற்றிச் சுருக்கத்தில் விரல்கள் தேய்ந்ததுதான் மிச்சம். நினைவு பளிச்சிடவேயில்லை.

'யாருங்க நீங்க? தெரியலையே...கண்ணு கொஞ்சம் மத்தீசம். தெரியலை!' என்று சொல்லிக்கொண்டே, தன்னைக் கீழுக்கு இழுக்கும் கைப் பையைத் தரையில் வைத்தார். மறுபடியும் அந்த மனிதர்மீது கண்களைச் சுருக்கி, நெற்றியைச் சுருக்கி, கண்ணாடி வழியே பார்வையை ஓடவிட்டார்.

அந்த மனிதர் சிரித்தார். அவர் கருப்பு நிறம்தான். ஆனால் பற்கள் நல்ல வெளுப்பு. ஒரே வெண்மை. பற்கள் மின்னச் சிரித்து, 'என்ன ஸார், என்னை மறந்துட்டீங்களே! உங்க கிட்ட படிச்ச மகாதேவன் ஸார் நான்! என்னை அடையாளம் தெரியலே?' குழந்தையைப்போல அந்த மனிதர் கேட்டார்.

அவருடைய 'சர்வீஸி'ல் எத்தனையோ மகாதேவன்கள்! ஆனால், இவர் யாரோ?

'இல்லேப்பா! நீ யாரோ தெரியலை!' என்றார் பார்த்தசாரதி. நின்றுகொண்டிருந்தவர் கொஞ்ச நேரம் யோசித்தார். எதையோ சொல்லலாமா, கூடாதா என்று யோசிப்பது போலிருந்தது அவருடைய போக்கு. கடைசியில் சொல்வதென்ற முடிவிற்கு வந்து, 'அதான் ஸார்! ஒரு நாளு நான் கணக்குப் போடாததற்கும், பாடம் படிக்காம வந்ததற்கும் என்னை நல்லா 'செம' புடி புடிச்சி, துப்பு கெட்டவனே, தொலைஞ்சு ஒழிடான்னு துரத்திப்பிட்டீங்களே அந்த மகா



"அப்பா...எங்களை ஒரு பெரியவர்...யார் பசங்கள் நீங்கள்...எங்கிருப்பது என்றெல்லாம் விசாரிச்சார் அப்பா...!"

"அப்பாடியா!...நாலுபேர்களிடம் அப்படித்தான் நல்ல பெயர் வாங்க வேண்டும்...அப்புறம் என்ன செய்தார்......!"

"அப்புறம்...போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய். எங்களைப்பற்றி ரிபோர்ட் பண்ணிட்டு போயிட்டார்......"

தேவன் ஸார் நான்...!' அவர் சொல்லிக்கொண்டே போனார்.

'ஓ...ஓ! அந்த மகாதேவனா நீ? அதான் அந்தக் குடிகார குப்பன் மவன்...!'

'ஆமா ஸார்...ஆமா! அவரு மகனேதான்!'

வந்தவருக்கு ஒரே குஷி. தன்னைப் பார்த்தசாரதி இனம் கண்டுகொண்டாரே என்று.

'தெரியலே அப்பா...மறந்து போயிடுச்சு. ஆமா இப்போ என்ன செய்யறே? காரு ஓட்டரையா யாருக்கானா?'

பாதையோரமாக நின்று கொண்டிருக்கும் கார், மகாதேவனின் சொந்தக் கார் என்று அவருக்குத் தெரிய நியாயமில்லை.

அந்தக் காரின் டிரைவர் மகாதேவன்தான் என்று அவர் நினைத்தார்.

'அதெல்லாம் இல்லே சார்! என்னோட கார்தான் அது! நான் வியாபாரம் பண்றேன் ஸார் இப்போ! வாங்க ஸார் நம்ப வீட்டுக்குப் போகலாம்!' என்று கூறிக்கொண்டே கீழே கிடந்த அழுக்குப் பையைக் குனிந்து எடுத்தார் மகாதேவன். முதலாளி கைப் பையை எடுப்பதைக் கண்டு, டிரைவர் ஓடிவந்து, அதை வாங்கி, காரினுள் வைத்தான். டிரைவர் அந்தப் பையைத் தொடவே அசிங்கப்பட்டான்.

பார்த்தசாரதியை முதலில் காரில் ஏற்றி, தானும் ஏறி அவர் பக்கத்தில் அமர்ந்தார் மகாதேவன். கார் புறப்பட்டது. மெத்து மெத்தென்ற ஆசனங்கள். பக்கத்துக்கு ஒரு தலையணை வெல்வெட் உறையில் ஜம்மென்று பூ வேலைப்பாடுகளுடன் வழுவழுவென்று நழுவியது. பார்த்தசாரதி தன்னையும், தன் உடைகளையும் பார்த்துக்கொண்டார். அவர் மனம் கூசியது. தன்னையே குறுக்கிக்கொண்டார். ஆனால், அவர் நினைவுகள் விரிந்தன. அவர் உடல் நடுங்கி, ஒடுங்கியது. உள்ளம் கலங்கிக் குழம்பியது. படலம் படலமாக விரிந்த நிகழ்ச்சிகளில் ஒன்றுமட்டும் அவர் கண்முன்னே மறையாமல் நின்றது.

ஒரு நாள்—

கரும் பலகையில் குரங்குப் படம் போட்டு, அதனடியில் 'பார்த்தசாரதி வாத்தியார்' என்று எழுதியிருந்தது. வகுப்புக்கு வந்த அவர், 'மகாதேவன்தான் அதைப் போட்டான்' என்று மாணவர்கள் சொல்லக் கேட்டு, 'நான் போடலே ஸார்... நான் போடலே ஸார்' என்று மகாதேவன் எவ்வளவு கூறியும் நம்பாது அவனை அடி அடி என்று நையப் புடைத்துவிட்டார். 'ஐயோ! நான் போடலே ஸார்! போடலே ஸார்!' என்று அவன் கத்தியும், கதறியும் அவர் விடவில்லை. மற்ற மாணவர்களை—முக்கியமாய் வகுப்பிலே நல்ல பையனாகிய அருணாசலத்தைச் சாட்சியாக வைத்துக்கொண்டு மகாதேவனை 'டிஸ்மிஸ்' செய்துவிட்டார். போதாததற்கு அன்று அவன் கணக்கையும் போடவில்லை.

பள்ளியிலிருந்து விரட்டப்பட்ட மகாதேவன் வீட்டிற்கே போகவில்லை. அவன் எப்படிப் போவான்? அவனுக்கு உண்மையிலேயே படிப்பு சரிவர வராது. வாத்தியாரோ வீட்டிற்கு அனுப்பிவிட்டார். அவனுடைய அப்பாவோ குடிகாரன்; சூதாடி. வீட்டிற்குப் போனால், அவனை உயிரோடு தோலை உரித்துவிடுவார். அதனால் அவன் வீட்டிற்குப் போகவில்லை. விடுவிடென்று ஸ்டேஷன் பக்கம் நடந்தான். தண்டவாளம் காட்டிய வழியில் நடக்க ஆரம்பித்துவிட்டான்.

எங்கேயோ போனான். எப்படியோ இருந்தான். ஆனால் இன்றைக்கு அவன்—மகாதேவன்—குடிகாரக் குப்பன் மகன்—சூதாடிக்குப்பன் மகன்—பெரிய விறகுத் தொட்டிக்குச் சொந்தக்காரன். 'தேவன் பிரிக் 'ஒர்க்ஸ்' என்ற பெரிய செங்கல் சூளைக் கம்பெனிக்குச் சொந்தக்காரன்.

கார் ஓடிக்கொண்டிருந்தது.

'என்னப்பா செய்யறே?' என்று கேட்டார் பார்த்தசாரதி.




'வியாபாரம் செய்யறேன் ஸார்!' பணிவோடு பதிலிறுத்தான் மகாதேவன்.

'வியாபாரமா? பணம் ஏது அப்பா?'

'ஏதோ உங்களைப்போல புண்ணியவான் கொடுத்தது ஸார்!'

பார்த்தசாரதி திகைத்தார்.



'நீ என்ன சொல்றே மகாதேவா?'

'ஆமாம் ஸார்! உண்மைதான்!' என்றான் மகாதேவன். வாயிலிருந்து எச்சில் தெறித்தது. கைக் குட்டையை எடுத்து, வாயோரம் ஒட்டியபடி, பார்த்தசாரதி வாத்தியாரிடம் ரொம்ப பயபக்தியாய் தன்னைப்பற்றிச் சொன்னான் மகாதேவன்.

பள்ளிக்கூடத்தில் மகாதேவன் ஒழுங்காகப் படிக்கிறதில்லை. அவன் முயற்சி பண்ணி படித்தாலும் படிப்பு ஏறவில்லை. அவனைப் பார்த்தால் மற்றப் பையன்களுக்குக் கொஞ்சமும் பிடிப்பதில்லை. அவன் உருவம்—தோற்றம் அப்படி. கறுப்பு உடல், முட்டைக் கண்கள், பருத்த உதடுகள். அவனுடைய அம்மாவோ அவன் பிறந்த கொஞ்ச நாட்களுக்கெல்லாம் இந்த உலகைவிட்டே மறைந்துவிட்டாள். அவனுடைய அத்தை வீட்டிலே வளர்ந்தான். அவனுக்குத் தாயன்புமில்லை. தகப்பன் ஆசையுமில்லை. அவனை எல்லோரும் 'உதவாக்கரை' என்று பேசினார்கள்; அடித்தார்கள், திட்டினார்கள்.

அப்பொழுது பார்த்தசாரதி வாத்தியார் ஆறாம் வகுப்பிற்குக் 'கிளாஸ் டீச்ச'ராக இருந்தார். அவருக்குக்கூட தலை வாராது—கன்னங்கரேலென்று உடலும், அழுக்குச் சட்டையும், கிழிந்த

நிக்கருமாக வரும் மகாதேவன் என்றால் ஒரே வெறுப்பு.

அந்த வெறுப்பில்தான், அவன் மீது சுமத்தப்பட்ட பழியை அவர் அப்படியே ஒப்புக்கொண்டு அவனைச் சக்கையாய்ப் பிழிந்துவிட்டார். படிக்க லாயக்கில்லாதவன், அருவருப்பானவன், உதவாதவன் என்று திட்டி அனுப்பிவிட்டார்.

வெளியே வந்த மகாதேவன் நேராக வீட்டிற்குப் போகவில்லை. அவனுடைய குடிகாரத் தந்தை அவனிடம் அன்பாக ஒரு நாளும் பேசினதில்லை. கையில் அவன் சிக்கும்போதெல்லாம் எருமை மாட்டை அடிப்பதுபோல் நொறுக்கிவிடுவார். கறுப்பாக இருந்த மகாதேவன் எருமைக் கன்றை நினைவூட்டினானோ என்னவோ. விஷமத்தனம் செய்ததற்காகப் பள்ளியைவிட்டு ஓட்டிவிட்டார்கள் என்று தந்தையின்முன் நிற்க அவன் பயந்தான். புண்ணாகிப் போன முதுகு இனியும் அடி வாங்கித் தாங்க இயலாது.

எனவே, 'சிவனே'ன்னு ரயில் பாதை காட்டிய வழியே நடந்தான். நடந்து நடந்து பட்டணத்திற்கு–மதராசுக்கு வந்துவிட்டான். யாரோ ஒரு புண்ணியவான்–ஒரு பெரிய வீட்டுச் சமையல்காரன் அவனை 'கையாளாக' வேலை செய்ய வைத்துக்கொண்டான். வீட்டிலே சாப்பிட்டு மீதியானதைக் குப்பையிலே போடுவதற்குப் பதிலாக அவன் வாயிலே போட்டான் அந்தப் பரோபகாரி. மகாதேவனும் வயிற்றை நிரப்பிக்கொண்டான். அந்தச் சமையல்காரன் விறகு தொட்டியிலேயிருந்து மகாதேவனை விறகு கொண்டு வரச் சொல்லுவான். மகாதேவனும் கழுதை பொதி சுமப்பதுபோல் விறகைத் தலை மேலே, தோள் மேலே சுமந்துகொண்டு வந்து வீட்டிலே சேர்ப்பான்.


அவன் ஒரு நாள் விறகு தொட்டியில் தூக்க முடியாமல் விறகைத் தூக்கி, கால் மேலே போட்டுக்கொண்டு, அழத் தெரியாமல் அழுதான். விறகு வாங்கி வரப் போன மகாதேவன் சீக்கிரம் திரும்பாமல் போகவே சமையல்காரன் கோபமாக விறகு தொட்டிக்கே வந்துவிட்டான். அவன் அவசரம் அவனுக்குக் காலில் காயத்தை ஏற்படுத்திக் கொண்டு கதறும் மகாதேவனைக் கண்டு அவன் இரக்கப்படவில்லை. மூக்கின்மேல் துளிர்த்த அவன் கோபம், மகாதேவன் முதுகில் பட்டை பட்டையாக வடிந்தது.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த விறகுத் தொட்டி முதலாளி பொன்னுசாமி சமையல்காரனைக் கண்டபடி ஏசி அனுப்பிவிட்டு, மகாதேவனைத் தன்னுடனேயே வைத்துக்கொண்டார்.

விறகுத் தொட்டியில் விறகு வாங்க வருகின்றவர்களுக்கு விலையைச் சொல்லி, விறகு எடுத்துப் போட்டு, எடை கணக்கிட்டுக் கொடுக்கும் வேலை மகாதேவனுக்கு வாய்த்தது. முதலாளி பொன்னுசாமி அவன் வயிறு நிறைய சோறு போட்டார். உடம்புக்குத் துணியைக் கொடுத்தார். அவன் பேரிலே மாசத்துக்கு ஒன்று, இரண்டு என்று கூட்டி–இருபது ரூபாய்வரை சம்பளமாய்ப் போட்டு–அதை அவன் பேரிலேயே போஸ்டாபீசில் கட்டி வந்தார்.



சின்னப் பையன் மாகதேவன், பெரிய ஆளாக–வாலிபக் காளையாக மசமசவென்று–முறுமுறுவென்று அரும்பாக மீசை முளைக்க–தாடி வளர–வளர்ந்துவிட்டான். அவன்பேரில் அவன் முதலாளி கட்டி வைத்த ரூபாய் சுமார் ஆயிரத்தைந்நூறுக்கு வளர்ந்துவிட்டது. அவன் அவரிடம் வந்து எட்டு, ஒன்பது வருஷங்கள் ஓடிவிட்டனவே. பின்னே சேராமல் இருக்குமா? அவன் கள்ளங்கபடற்று வஞ்சனையில்லாமல் வளர்ந்ததுபோல் அவன் பணமும் வளர்ந்தது.




அப்பா! உனக்கு சம்பளம் உசந்து போச்சுன்னு பெருமை யடிச்சுண்டியே! அடுத்த மாசத்துலேருந்து எனக்கும் கூட சம்பளம் உசந்து போச்சு!

முதலாளி பொன்னுசாமி, தன் குழந்தைகளோடு குழந்தையாக மகனோடு மகனாகப் பாவித்து அவன்மேல் அலாதி பிரியம் காட்டினார். பிள்ளையினும் மேலாக வளர்த்த அவனுக்கு ஒரு 'கால் கட்டை'ப் போட நினைத்து ஒரு பெண்ணைப் பார்த்தார். பொன்னுசாமிக்கு ஜடாதரன் ரொம்பவும் சிநேகிதம். ஜடாதரன் பொன்னுசாமிக்கு வெளியூரிலிருந்து விறகைக் 'காண்ட்ராக்ட்' பேசிக் கொண்டுவந்து கொடுத்துக்கொண்டிருந்தார். அவருடைய ஒரே பெண்தான் பாக்கியம். ஒரு 'பிள்ளையாண்டானை'ப் பார்த்து அவன் கையில் பாக்கியத்தை ஒப்படைத்துவிட வேண்டுமென்று ஜடாதரன் அலையாய் அலைந்தார்.

ஜடாதரன் விறகு டிப்போவிற்கு வரும்போதெல்லாம் மகாதேவனைப் பார்ப்பார். அடிநாளிலிருந்து அவனைப் பார்த்துக் கொண்டுதானிருந்தார். அவனுடைய அடக்கமான நடத்தை, பணிவான பேச்சு, நல்ல குணம் எல்லாமே ஜடாதரனுக்குப் பிடித்துவிட்டன.

பொன்னுசாமி ஒரு நாள், மகாதேவனுக்குக் 'கால் கட்டு' போட வேண்டுமென்ற தன்னுடைய எண்ணத்தை ஜடாதரனிடம் சொன்னார். அவனை ரொம்பவும் புகழ்ச்சியாகப் பேசினார். ஜடாதரன் மகிழ்ந்து போனார். தன்னுடைய மகளை மகாதேவனுக்குக் கொடுத்து,–அவனைத் தன் வீட்டோடு வைத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்துகொண்டார். முடிவைப் பொன்னுசாமிக்குச் சொன்னார். பொன்னுசாமி திகைத்துவிட்டார். 'ஆமாம், உண்மைதான் பொன்னுசாமி' என்று ஜடாதரன் அடித்துச்

சொன்னபோது அவர் திகைப்பு மகிழ்ச்சியாக மலர்ந்தது.

மகாதேவன் மறுப்பு ஏதும் பேசாமல் தலையாட்டினான். திருமணம் முடிந்தது. மகாதேவனின் சலியாத உழைப்பு. அவனுக்கிருந்த ஊக்கம்; உற்சாகம். அவன் மாமனார் காட்டிய பேரன்பு, முதலாளி பொன்னுசாமியின் பொன்னான மனம் எல்லாம் சேர்ந்து அவனை நாளடைவில் ஒரு செல்வந்தனாக்கியது.

பாக்கியத்தின் கழுத்தில் அவன் தாலி கட்டிய நேரம் பொன்னான நேரம். அவன் தொட்டதெல்லாம் பொன்னாகத் துலங்கியது. சின்ன விறகு டிப்போவாக ஆரம்பித்தது, ஆலமரத்தின் கிளையைப்போலப் பரந்து, விழுது விட ஆரம்பித்தது. மகாதேவனின் 'தொழில் மூளை' சுறுசுறுப்பாக இயங்கியது. விறகு டிப்போ பெரிதானவுடன் வேறு துறையில் அவன் கவனம் சென்றது. புதிது புதிதாக நாளும் எழும் வானளாவும் கட்டிடங்களுக்குச் செங்கல் சப்ளை செய்ய சூளை ஆரம்பித்தால் என்ன? என்று அவன் மனம் எண்ணியது. நல்ல முடிவைச் செயலாக்க அவன் தயங்கவில்லை. ஆரம்பித்துவிட்டான். 'குறித்த காலத்தில் சப்ளை; தரமான செங்கல்' இந்த இரண்டும், அவனுக்கு நல்ல பெயரைச் சம்பாதித்துத் தந்தன. ஆர்டர்கள் குவிந்தன. செங்கல் சூளை அடுக்குபோல் நோட்டுக் கட்டுகள் அடுக்கின்மேல் அடுக்காகக் குவிந்தன. வேளையும் நேரமும் கூடின. மகாதேவன் 'பெரிய புள்ளி'யாகிவிட்டான். அவனுடைய மாஜி முதலாளியே அவனிடம் வியாபாரம் செய்யுமளவிற்கு அவன் பெரிய புள்ளியாகிவிட்டான்.

வீடென்ன—வாசலென்ன—காரென்ன—வேலையாட்களென்ன என்று மகாதேவன் வளர்ந்துவிட்டான். மகாதேவனின் பிரம்மாண்டமான வளர்ச்சி 'அலாவுதீனின் அற்புத விளக்கு'ச் சம்பவம் போல் பார்த்தசாரதிக்குத் தெரிந்தது. அவர் மாணவர்களுக்கு, உழைப்பால் உயர்ந்த எத்தனையோ பெரியவர்களை—ராக்பெல்லர், டால்மியா, ஜெமினி வாசன், கோவை ஜி. டி. நாயுடு போன்றவர்களைப்பற்றியெல்லாம் கதை கதையாகச் சொல்லியிருக்கிறார். ஆனால், தன்னிடம் படித்தவன்—தன்னால் உதவாக்கரை—வெறும் பயல் என்று அனுப்பப்பட்டவன் இன்று லட்சாதிபதியாகவிருப்பது அவருக்கு வியப்பினும் வியப்பாக இருந்தது.

'சார்!'

மகாதேவன்தான் கூப்பிட்டான். பெரியதொரு பங்களாவின் 'போர்டிகோ'வில் கார் நின்றது. மகாதேவன் இறங்கி கதவைத் திறந்து, பார்த்தசாரதியைக் கைப்பிடித்து இறக்கினான். பார்த்தசாரதி காரைவிட்டு இறங்கினார். அவர் உடல் கூனிக் குறுகியது, கம்பீரமான பங்களாவைக் கண்டு. கூனிய உடம்பு நிமிர்ந்தபோது, மனதில் ஆச்சரியம் அலையாக விரிந்தது. அவரைப்பற்றி, அவர் குடும்பத்தைப்பற்றி, பிழைக்க அவர் 'பட்டணம்' வந்ததைப்பற்றி எல்லாம் பார்த்தசாரதியைத் துருவித் துருவிக் கேட்டுத் தெரிந்துகொண்டான் மகாதேவன். அவன் மனம் பாகாய் உருகிக் கரைந்தது.



'நீங்க ஒண்ணுக்கும் கவலைப் படாதீங்க சார்! உங்க பொண்ணு கல்யாணத்தை நான் நடத்தி வைக்கிறேன். சீரும் சிறப்புமா செய்துவிடுகிறேன். கல்யாணம் முடிஞ்சி, நீங்க இங்கேயே வந்து, எனக்குப் புத்திமதி சொல்லிக்கிட்டு இருக்கலாம்!' என்றான் மகாதேவன்.


பார்த்தசாரதியின் கண்கள் பனித்தன. இதயம் வலித்தது. உள்ளம் கலங்கியது.

'மகாதேவா! நான் உனக்கு அந்த நாள்லே ஒரு நன்மையும் செய்யலியேப்பா! உன்னே பள்ளிக்கூடத்தைவிட்டுத் துரத்தின பாவியாச்சேப்பா! அந்த அருணாசலத்திற்கு உதவினதிலே நூறுலே ஒரு பங்கு உனக்குச் செய்திருப்பேனா? இப்ப நீ இப்படி...!' அவருக்குத் தொண்டை அடைத்துக்கொண்டது. கண்கள் மடை திறந்த வெள்ளமாக நீரைப் பொழிந்தன.

'ஸார்! ஸார்! நீங்க எனக்குக் கையெழுத்துப் போடக் கத்துக் கொடுத்தீங்க! அது போதும் ஸார்! அதற்கு ஆயிரம் செய்யலாம்! மகாதேவன் உருக்கமாகப் பேசினான். அவனையே உற்றுப் பார்த்தார் பார்த்தசாரதி. குசேலனுக்கு வாரி வழங்கிய கண்ணனைத்தான் அவர் கண்கள் கண்டன. அவனை வணங்க இரு கைகளையும் ஒன்றாகச் சேர்த்தார். மகாதேவன் சடக்கென்று அவர் கைகளைப் பற்றிக்கொண்டான். அவன் கரத்தின்மீது சூடாக ஒரு சொட்டுக் கண்ணீர் விழுந்தது. பொட்டாகத் தேங்கி நின்ற அந்த கண்ணீர் மணியைப் பார்த்தான். அது பேசியிருந்தால் இப்படித்தான் பேசியிருக்கும்:

'அன்று உதவுவான் என்று நினைத்து அவனுக்கு உதவி செய்தேன், அவன் உதவவில்லை. உதவாதவன் என்று எண்ணி வெளியே என்னால் அனுப்பப்பட்ட நீ, நினைக்க முடியாத அளவிற்கு உதவி செய்துவிட்டாயே அப்பா!'

கண்ணீர் மணி உருண்டு தரையில் வீழ்ந்தது.




பிரயாணி —என்னப்பா ட்ரைவர்! காருக்கு பிரேக்கே இல்லை போலிருக்கிறதே. எப்படி நிறுத்துவே?

டாக்ஸி டிரைவர்: —அதைப்பத்தி கவலைப் படாதீங்க. நீங்க ஆஸ்பத்திரிக்குத் தானே போவணும். ஆஸ்பத்திரி காம்பவுண்டு சுவரே நம்ம டாக்ஸியை தடுத்து நிறுத்திடுங்க:

# பம்பாய்த் தபால்

சினிமாவில் காதலர்களாக நடிக்கும் நடிக, நடிகைகள் சிலர் அவர்கள் சொந்த வாழ்க்கையிலும் உணர்ச்சி வசத்தால், காதலர்களாக மாறி, கல்யாணம் செய்து கொண்டு கணவன், மனைவிமார்களாக வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். இதற்கு உதாரணமாக, ஸ்ரீ தேவ்ஆனந்து, ஸ்ரீமதி கல்பனா கார்திக் அவர்களையும், ஸ்ரீ ஷம்மி கபூர், ஸ்ரீமதி கீதாபல்லி அவர்களையும், ஸ்ரீ சுனீல் டட், ஸ்ரீமதி நர்கீஸ் அவர்களையும், ஸ்ரீ பிரேம்நாத், ஸ்ரீமதி பீனாராய் அவர்களையும், இம்மாதிரி இன்னும் சிலரையும் சொல்லலாம்.

சமீபத்தில் சினிமாப் படங்களில் காதலர்களாக நடித்து நடித்து தற்போது புதிதாக மணந்துகொண்டவர்கள் ஸ்ரீ கிஷோர் குமாரும், ஸ்ரீமதி மதுபாலாவும், இருவரும் பிரசித்திபெற்ற நட்சத்திரங்கள். இவர்கள் அநேக படங்களில் காதலர்களாக நடித்திருக்கிறார்கள். சொந்த வாழ்க்கையிலும், சென்ற ஒரு வருஷகாலமாக, இருவரும் காதலித்து வந்தார்கள். இருவருக்கும் சமீபத்தில், புனித விவாகம் நடந்தேறியது. ஸ்ரீ கிஷோர் குமார் தற்சமயம் தம் மனைவி ஸ்ரீமதி மதுபாலாவின் வீட்டில் தான் தங்கி வருகிறார்.

ஸ்ரீ கிஷோர் குமார் ஹிந்து மதத்தைச்சேர்ந்த வங்காளியென்றும், பிரபல நடிகர் ஸ்ரீ அசோக்குமார் அவர்களின் தம்பியென்றும், எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவருக்கு 31 வயதாகிறது. ஸ்ரீமதி மதுபாலா முகம்மதிய ஜாதியைச்சேர்ந்தவரென்றும், அவர் சொந்தப் பெயர் மும்தாஜ் பீகம் என்றும், வயதும் 28 ஆகின்றதென்றும் வாசகர்களுக்கு தெரிந்திருக்கலாம். இரு உள்ளங்கள் ஒன்றுபட்டால், ஜாதி மதபேதம் பறந்து போய்விடுகிறது.

ஏற்கெனவே ஒருதரம் கல்யாணம் செய்துகொண்டவர் ஸ்ரீ கிஷோர்குமார் அவருடைய முதல் மனைவி ஸ்ரீமதி ரூமாதேவி. இவர் ஏழு, எட்டு வருடங்களுக்குமுன், பம்பாய் சினிமாப் படங்களில் நடித்து வந்தார். ஸ்ரீ கிஷோர் குமார் இவரைக் காதலித்து, தம் பெற்றோர்களின் விருப்பமில்லாமல், கல்யாணம் செய்துகொண்டார். அவர்களுக்குள், இரண்டு வருஷங்களுக்கு முன், மனவேற்றுமை ஏற்பட்டு, அவர்களுடைய விவாகம், சட்டப்படி ரத்து செய்யப்பட்டது. அவர்களுக்கு தற்சமயம் ஏழு வயதில், அமீட என்ற பெயருடன் ஒரு குமாரன் இருக்கிறான்.

முதல் விவாகம் ரத்துஆன பிறகு, ஒரு வருஷத்திற்குமேல், ஸ்ரீ கிஷோர் குமார் கல்யாணம் செய்துகொள்ளாமலிருந்தார். தம் மகனின் க்ஷேமத்தை முன்னிட்டு, ஸ்ரீமதி மதுபாலாவை அநேக மாதங்களாக மணந்துகொள்ளாமலிருந்தார். கடைசியில், தனிமையை வெறுத்து, இருவரும் சமீபத்தில் மணந்துகொண்டார்கள். 'நான் வாழ்க்கையில் வெறுத்து, மனம் நொந்து, இனிமேல் ஒரு வாழ்க்கைத் துணைவி இல்லாமல் காலம் கழிக்க முடியாதென்ற தீர்மானத்திற்கு வந்த பிறகு தான், ஸ்ரீமதி மதுபாலாவை மணந்து கொண்டேன்' என்று ஸ்ரீ கிஷோர் குமார், என்னிடம் அன்றொருநாள் அழமாட்டா குறையாக ஒப்புக்கொண்டார்.

ஸ்ரீ கிஷோர் குமார் தற்சமயம் தயாரித்துவரும் 'ஜும்ரூ', 'சாஹானா கீத்' என்ற இரண்டு படங்களில், அவரும்





★

ஜம்ரூ' என்னும் படத்தில் காதல் ஜோடியாக நடிக்கின்றனர், கிஷோர் குமாரும் மதுபாலாவும்

★

ஸ்ரீமதி மதுபாலாவும் காதலர்களாக நடித்து வருகிறார்கள். மேலும், ஸ்ரீ கிஷோர் குமார் இன்னும் ஒன்பது படங்களிலும், ஸ்ரீமதி மதுபாலா, 19 படங்களிலும் நடித்து வருகிறார்கள்.

ஆனால், அவர்களுடைய எல்லாப் படங்களும், தற்சமயம் தடைப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ கிஷோர்குமாரை, பம்பாய் கோர்டார், ஸ்ரீ காளிதாஸ் என்பவர் தயாரித்துவரும் 'அரை டிக்கெட்டு' என்ற படத்தில் நடித்து முடித்து கொடுத்த பிறகுதான், மற்ற படங்களில் நடிக்கலாமென்று, உத்தரவு போட்டிருக்கிறார்கள். வருமான வரி முதலிய சிக்கல்களினால், ஸ்ரீ கிஷோர் குமார், மேற்சொன்ன 'அரை டிக்கட்டு' என்ற படத்தில் நடித்து முடித்துக் கொடுக்கமுடியாத நிலையிலிருக்கிறார் ஆகையால், அவருடைய சொந்தப் படங்களும், அவர் நடித்துவரும் மற்ற படங்களின் 'ஷூட்டிங்கும்' தடைப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமதி மதுபாலாவுக்கு தற்சமயம் அவருடைய ஹிருதயத்தில் ஏதோ கோளாறினால் அவருடைய டாக்டர் 6 அல்லது 8 மாதங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டார். அவர் 'ஷூட்டிங்கு'க்கு செல்ல இயலாததால் அவருடைய படங்களும் முடிவடையாமல் தடைப்பட்டு நிற்கின்றன.

—தி. மா. ராமச்சந்திரன்.

# அபூர்வச் செய்திகள்!


'மனிதனை நாய் கடித்தால் அது செய்தி இல்லை, நாயை மனிதன் கடித்தால் தான் செய்தி' என்று கூறுவது உண்டு. ஆயினும் மனிதனை நாய் கடித்ததும்கூடச் செய்தி ஆகியிருக்கிறது, பிரான்ஸிலுள்ள நான்ஸியில். அங்கு ஒருவரது காலைக் கடித்ததும் பல்வலி தாங்காமல் பதறிக் குரைத்தது, ஒரு நாய். காரணம், மரத்தாலான செயற்கைக் கால் அது!

பளு தூக்குவதில் பிரிட்டிஷ் சாம்பியன் பட்டம் பெற்றவர், பிரிட்ஜெட் ஸ்ட்ராட்டர் என்னும் பெண்மணி. 'ஆயினும் சமீபத்தில் சிறு தொட்டி ஒன்றைத் தூக்கும்போது அவரது முதுகெலும்பு முறிந்துவிட்டதாம்!

வாஷிங்டனில் ஆறு மாடிக் கட்டிடமொன்றிலிருந்து கால் தவறி விழுந்தார் ஒரு ஆசாமி. அப்படியும் ஆபத்தொன்றுமில்லை— உளறியடித்துக் கொண்டு எழுந்திருக்கும்போது உதட்டைக் கடித்துக்கொண்டதால் ஏற்பட்ட சிறு காயத்தைத் தவிர!

அன்புடன் அணைப்பதிலும் ஆபத்து உண்டு!—வர்ணம் பூசும் வாலிபனொருவன் தன்னை அணைத்திருக்கையில் சிகரெட்டைப் பற்ற வைத்தாள் அவன் காதலி. அந்த நெருப்பிலிருந்து ஒரு பொறிபட்டு, வர்ணம் தோய்ந்திருந்த அவன் உடை தீப்பற்றிக்கொண்டது. அவ்வளவு தான், ஐந்தே நிமிஷத்தில் கருகிவிட்டான் காதலன்.

# அதிசயச் செய்திகள்!!




Printed and published By N. Rajagopalan for and on behalf of the 'Swadesamitran' Ltd., at The 'Swadesamitran' press, 'Victory House' Mount Road Madras. Editor: C. R. SRINIVASAN, B. A.